550

# மங்கை



காரியாலயம்

12

550

# மங்கை

## பெண்களின் புத்தகம்

## 12

பதிப்பாசிரியர் :
"குகப்ரியை"

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை


For Soft Smooth hair...
SRIVIS-AMLA
HAIR OIL
மிருதுவான அழகிய கறுகறுத்த கூந்தல் அடர்த்தியாக வளரப் பெண்மணிகள் ஓர் நம்பத் தகுந்த கூந்தல் வளர்ப்புத் தைலம் உபயோகிக்க வேண்டும். கூந்தலழகை பெற குணம், மணம் மிகுந்த "ஸ்ரீவிஸ்-அம்லா" கூந்தல் தைலத்தை நம்பிக்கையுடன் வாங்கி இன்றே உபயோகிக்க ஆரம்பியுங்கள்
S. VISWANADHAM & Co.,
44, Bunder St., G.T. Madras.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| இந்தக் குழந்தைகள் | ஸ்வர்ணம் | ... 1 |
| சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி | பத்மினி | ... 9 |
| வின்னி | கௌரம்மாள் | ... 17 |
| வருமுன் காப்பு | பார்வதி | ... 36 |
| அறுசுவை | தீபிகா | ... 45 |
| பச்சை பாவாடை | மீனாக்ஷி ராஜகோபாலன் | ... 49 |
| தைக்கும் விதம் | ச. மீனாம்பிகா தேவி | ... 58 |
| ஒவ்வொரு ஊரிலும் ஒரு லேடீஸ் கிளப் வேண்டுமா? | நந்தினி | ... 61 |
| கடிதங்கள் | | ... 65 |
| கவி இருதயம் | கனகம்மாள் ஸீதாபதி | ... 74 |
| குடும்ப வாழ்க்கை | பத்மஜா | ... 82 |
| தோல்வி | ஹரிணி | ... 87 |
| இல்வாழ்க்கை—ஒரு பயிற்சி | சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் | ... 102 |
| சிநேகம் பிடிக்கும் கலை | கே. வி. ராஜலக்ஷ்மி | ... 104 |


உரிமை பதிவு செய்யப்பெற்றது.

பிப்ரவரி : 1947

ரூ : ஒன்று

தபால் செலவுடன் ரூ. 1/4

தொடர்ந்து வெளிவரும் 12 பிரதிகளுக்கு

தபால் செலவுடன் ரூ. 12

# நீங்கள் நேரில் வந்து பரீக்ஷை செய்யுங்கள்



முதல்தரமான வஸ்துக்களுக்கு ஈடு கிடையாது. எதிலும் தரம் வேண்டுமானுல் அதற்கு உண்டான மதிப்பைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வைரங்கள் **பாபாலால்** கம்பெனியிலிருந்து வாங்கினதானுல் அவைகளின் கண்ணியமான தரத்தைப்பற்றி உங்களுக்கு கவலே வேண்டியதில்லே. அவைகள் எப்பேர்ப்பட்ட பரீக்ஷைகளுக்கும் தயாராகஇருக்கின்றன.

## பாபாலால் & கம்பெனி

***கீர்த்திபெற்ற வைர நகை வியாபாரிகள்***

***மதராஸ்***

DIRECT IMPORTERS OF QUALITY DIAMONDS

# இந்த குழந்தைகள்





ஸ்வர்ணம்

## குழந்தைக் கேற்ற தொழில் எது?

இந்தக் கேள்வி மிகவும் சிக்கலான ஒரு பிரச்னை. வாழ் நாளில் ஒவ்வொருவரும் தமக்கேற்ற தொழில் இப்படித்தா னிருக்க வேண்டு மென்று சிந்திப்பதே அபூர்வம். தொழில் முயற்சியை ஏதோ ஒரு பிழைக்கும் வழியாகவே மேற்கொள்ளுகிறார்கள். பெண்களோ இதைப்பற்றி சிந்திப்பதே இல்லை. இந்த நிலையில் குழந்தைக் கேற்ற தொழில் எது? என்ற சிந்தனை தாயின் உள்ளத்தில் எழுவதாகவே தெரியவில்லை. இதைப் பற்றிச் சிந்திப்பது பெற்றோர்களது முக்கியமான கடமைகளுள் ஒன்று.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்கிற பழமொழியில் எவ்வளவு அநுபவ ஞானம் பொதிந்து கிடக்கிறது! இதே விஷயத்தைத்தான் மனோதத்துவ சாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்து குழந்தையின் சிறு பருவத்தின் விளையாட்டிலும் போக்கிலும், பிற்கால வாழ்க்கையின் வித்து அடங்கி யிருக்கிறதென்றும், இளமைப் பருவத்தின் செயல்களி லிருந்தே மனப் பான்மையை அறிந்து பண்படுத்த வேண்டும் என்றும் நிரூபித்திருக்கிறார்கள்.

குழந்தைகள் குடும்பத்தின் பொக்கிஷம். அது மட்டுமல்ல. இவர்கள் தேசத்தின் பொக்கிஷம். ஆலம் விதை மிகப் பெரிய விருட்சத்தைத் தன்னுட்கொண் டிருப்பது போல, வருங்கால உலகின் செயலைத் தன்னுட் கொண்

டிருக்கிறது குழந்தை. பிறப்பிலேயே சில சக்திகள் அவர்களிட மிருக்கின்றன. இதைப் பூர்வ ஜென்ம வாசனை யென்றோ, பரம்பரைச் செல்வ மென்றோ குறிக்கிறோம். உறங்குகின்ற அந்தச் சக்தி விழித்துக் கொள்ள நாம் துணை செய்கிறோம். பிறகு மனப் போக்கை யறிந்து பண்படுத்துகிறோம். பண்பட்ட மனத்தின் மலர்ச்சிதான் பிறகு தொழிலாகப் பரிணமிக்கிறது.

உதாரணமாகக் கடவுளின் படைப்பிலே அருவிகளும் ஆறுகளும் இருக்கின்றன. மனிதன் தன் அறிவின் முதிர்ச்சியினாலும் விஞ்ஞானத்தின் உதவியினாலும் அவைகளை அணை கட்டித் தேக்கி வறண்ட நிலங்களை வளமை யாக்குகிறான். மின்சாரத்தை எடுத்துப் பயன் பெறுகிறான். அதேபோலக் கடவுளால் அளிக்கப்பட்ட சக்தியை நம்முடைய பொருளாதார நிலைக்கும் சூழ் நிலைக்கும் தகுந்தபடி சீர்திருத்த வேண்டும். குழந்தை யிடம் இல்லாத ஒரு சக்தியைப் புகுத்தவோ, உள்ளதை மாற்றவோ நம்மால் முடிகிறதில்லை. குழந்தையின் போக்கை அடக்கி நம் இச்சைப்படி செலுத்த முடியுமா? முடியாது.

குழந்தை புத்தன் சக்கிரவர்த்தியாக வேண்டியவன். உலகின் துன்பங்களைக் காண வேண்டாம் என்று வளர்க்கப்பட்டான். ஆனால் முடிவு என்ன? திடீரென்று உலகியல்பை அறிந்த உடன் ஒரு நொடியில் மனம் மாறி விட்டது. உள்ளே குமுறிக் கிடந்த மனப் போக்கு காட்டாற்று வெள்ளம்போல் கரை புரண்டு ஓடிற்று. சிவாஜியின் தந்தை ஷாஜீ, பீஜப்பூர் சுல்தானிடம் சேவை செய்தார். தன் மகன் கல்வி கேள்விகளில் சிறந்து அறிவாளியாக விளங்க வேண்டும்; சுல்தானிடம் சேவித்துப் பெயரும் புகழும் பதவியும் பெற்று வாழ வேண்டு மென்று விரும்பினர். அவன் மனமோ சுதந்தர

தாகம் கொண்டு அலைந்து கொண் டிருந்தது. கை கட்டிச் சேவகத்தை ஏற்குமா அந்த மனம். அந்தக் குழந்தையின் மனப் போக்கை உணர்ந்து கொண்டாள் ஜீஜாபாய். காட்டிலும் மேட்டிலும் திரிந்ததனால் அவன் கற்ற வீரக் கல்வியின் சுவையை அவன் ஏட்டிலே காணவில்லை என் பதை அறிந்தாள் அந்த வீரத் தாய். அவன் லட்சியத்தை நோக்கிச் சென்றான். அந்தப் பாதையைச் செப்பனிட் டாள் தாய். சத்ரபதி சிவாஜி என்று புகழுகிறோம் இன்று. குழந்தைக் கேற்ற தொழில் எது என்று கேட்டால் சிவாஜியும் புத்தனும் உதாரண மாவார்களா என்று கேட்கலாம். மனப் போக்கை அறிந்து பண்படுத்த வேண்டு மென்பதற்கு இவை மிகச் சிறந்த உதாரணங்கள்தாம். ஆனால், நம்மில் பலர் இளமை விளையாட்டின்படியே மனப் பான்மை அமையும் என்கிற உண்மையை மட்டும் எடுத்துக் கொண்டு நாம் விரும்புகின்ற ஒரு தொழிலுக்கு அவர்களது மனத்தைப் பண்படுத்தி விடலா மென்று நினைக்கிறோம். இது மிகவும் தவறு. இதைப்பற்றி ஒரு கதை சொல்வ துண்டு. ஒரு தாய்; அவளுக்குத்தன் குழந்தை பரம சாந்த மூர்த்தியாய் மத பக்தியுள்ளவனா யிருக்க வேண்டு மென்று ஆவல். ஆகவே பூஜை, புனஸ்காரம், கோயில், குளம், தெய்வம், பக்தி—என்று கதைகளையும் இவற்றை ஒட்டிய விளையாட்டுக் கருவிகளையும் கொடுத்துப் பழக்கம் செய் வித்தாள். தந்தையோ பெரிய வீரன். கத்தி, துப்பாக்கி, ஏரோப்ளேன், அணுகுண்டு இம்மாதிரி விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து, யுத்தப் பயிற்சியையே தன் மகன் விளையாட்டாய்ப் பயில வேண்டு மென்று தான் முயன்றான். ஆனால் முடிவு என்ன? குழந்தை எதைப் பின் பற்றுவான்? இரண்டுங் கெட்டானாகி ஒன்றிற்கும் உதவாதவனாக ஆகிவிட்டான். இதே கருத்தைத்தான் குழந்தைகளின் மனோதத்துவத்தை ஆராய்வதிலேயே ஈடு

பட்ட ஒரு பெண்மணி தமது கட்டுரைஒன்றில், "குழந்தைகள் வளர்ச்சியை மட்டுமேதான் காண வேண்டும். அழிவையும், கொலைகளையும் பற்றிய கற்பனைகளைக் கூடக் காணக்கூடாது. பிறரை அழிக்க வேண்டு மென்றோ, அடக்கி ஆளவேண்டு மென்றோ தோன்றுகிற அந்தக் கொடிய மனப்பான்மை எங்கே பிறக்கிறது? விளையாட்டுக் கருவிகள் செய்யுமிடத்தில்தான். ஆகவே, விளையாட்டுச் சாமான்கள் செய்யு மிடங்களில், வளர்ச்சிக்கு உரியதும் நல் நெறிகளைப்போதிக்கத் தக்கதுமான பொருள்களே செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் வருங்கால மக்களின் மனம் பண்படும்" என்கிறார். பொதுவாக நம்முள் சிலர் என்ன செய்கிறோம்? நம்முடைய குழந்தை, பிறர் குழந்தையை அடித்தோ கீழே தள்ளியோ துன்புறுத்தினால் அதையும் ஒரு பெருமையாகக் கருதி மறைமுகமாய் ஆனந்தப்படுகிறோம். இம்மாதிரியான செயல்களினால் ஏற்கனவே முரட்டுத்தனம் இருந்தால் அது வேரூன்றி வளர்ந்து விடுகிறது. இந்த வகையைச் சேர்ந்த முரட்டுக் குழந்தைகள் தகாதவைகளைச் செய்யும் பொழுது நயமான வார்த்தைகளால் கண்டித்தும் திருத்தியும் நற்குணங்களைப் புகட்ட வேண்டியது நம் கடமை. குழந்தையைப் பராமரிப்பதிலும் சீர்திருத்துவதிலும் தந்தையாரைவிட நமக்குத்தான் வசதிகளும் பொறுப்பும் அதிகம். குழந்தைகள் பெரும்பான்மையான பொழுதை நம்முடனேயேதாம் கழிக்கின்றன. ஆனால், நாம் என்ன செய்கிறோம்? குழந்தையின் விளையாட்டைப் பற்றியோ கல்வியைப் பற்றியோ, தொழிலைப் பற்றியோ, பேசுவதற்கு நமக்கு என்ன உரிமை? அது புருஷர்களைச் சேர்ந்த விஷயம். குழந்தை ஆணா யிருந்தாலும் சரி, பெண்ணா யிருந்தாலும் சரி, புருஷர்கள் பாடு. அவர்கள் படித்தவர்கள். நாம் என்ன படித்திருக்கிறோமா என்றும், நாம்

படிக்காதவர்கள் நமக்கு என்ன தெரியும் என்றும் நம்மை நாமே குழந்தைகளின் முன்னிலையில் தாழ்வாக்கிக் கொண்டும், குழந்தையின் உடலைப் போஷிப்பதோடு நம் கடமை முடிந்து விட்டதாகவும் நினைத்துக் கொள்ளுகிறோம். வேறு சிலர், இளமை முதலே தொழிலைப் பற்றிக் கவலைப் படுவானேன் உரிய பருவம் வரும்பொழுது அவர்கள் தாங்களே இஷ்டமான தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள், என்று சோம்பேறித்தனமாகவும் பொறுப்பில்லாமலும் இருந்து விடுகிறோம். இந்த இரண்டு விதமான மனப்பான்மை யுள்ள தாய்மார்களைப் பொறுத்த மட்டில் 'மக்களுக்குச் சத்துரு மாதா பிதா' என்ற பழமொழி மெய்யாகி விடுகிறது. கடமையைச் செய்யத் தவறுகின்ற தாயைவிடப் பகை வேறு உண்டா? ஒரு சிறந்த தாய் என்ன நினைக்கிறாள்? குழந்தைக்கு நாம் கற்பிப்பதைவிடக் குழந்தையிட மிருந்து நாம் கற்க வேண்டியவை அதிகம் என்றும், குழந்தையின் மனப் போக்கு எப்படிச் செல்கிறது, எந்தெந்தத் துறைகளில் அவன் அறிவு வளர்ந்து மலர்ந்து பொருளையும் புகழையும் அடைவான் என்றும் ஆராய்ந்து பார்க்கிறாள். ஆராய்வதற்கு வேண்டிய மனப் பண்பை தன்னிடம் உண்டாக்கிக்கொண்டு தன்னையும் உயர்த்தி கொள்கிறாள். இந்தத் தாயின் நிலை நாம் ஒவ்வொருவ ம் பின்பற்றத் தக்கது. தவிர, நம்முடைய குழந்தை தை விரும்புகிறான் என்பதைப் பலரும் சிந்திப்பதில ல. நம்முடைய சொந்த ஆசைகளை யெல்லாம் அவர்கள் மூலம் பூர்த்தி செய்து கொள்ளவே முயலுகிறோம். சட்ட நிபுணரான தந்தை அதே துறையில் மகனும் புகழ்பெற வேண்டு மென்று நினைக்கிறார். இது சகஜம்தான். ஆனால், நூற்றுக்குத் தொண்ணூறு தோல்விதான். குழந்தையின் மன நிலையை உள்ளபடி அறிந்திருந்தால் தோல்வியே இராது என்பதில்

சந்தேக மென்ன? வேறொரு பையன்; பட்டம் பெற வேண்டு மென்று அவனைக் கல்லூரியில் சேர்க்கிறோம். பேராசிரியர் அருமையாகப் பிரசங்கம் செய்கிறார். அது இவன் மனத்தில் ஏறுவதேயில்லை. அவர் நிற்கின்ற நிலை, உடலின் அசைவுகள், முகத்திலே தோன்றும் பாவம், இவைகளை ஒரு நொடியில் வரைந்து விடுகிறான். விஷயம் விளங்காத நாமோ 'படி, படி' என்று சொல்லுகிறோம். இத்தகைய குழந்தைகளை ஆரம்பத்தி லிருந்தே சித்திரம் பயிலவும் வசதியளித் திருந்தால் மலர்ச்சியடையும்பொழுது கலை பிரதானமாகவும், கல்வி அதற்கு உதவியாகவும் அமைந்து சிறந்த ஓவியனாகக் கூடும். மற்றொரு சிறு குழந்தை, "வெந்நீர் ஏன் கொதிக்கிறது? பால் பொங்கி வழிவானேன்?" என்றெல்லாம் ஓயாமல் கேள்வி கேட்டு நம்மைத் திகைக்க வைக்கிறது. தகுந்தபடி விளக்க நமக்குப் போதிய அறிவும், அநுபவமும், பொறுமையும் இருப்பதில்லை. சுலபமாகக் கதை சொல்ல ஆரம்பிக்கிறோம். 'ஒரே ஒரு இடையன். சொம்பிலே தண்ணீரை வைத்துப் பாலைக் கறந்தான். பாலும் தண்ணீரும் இணைபிரியாத தோழர்களாகிவிட்டன. பால் காய்ந்தவுடன் தண்ணீர் ஆவியாகப் பிரிந்து போய்விட்டது. பாலுக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. சீறிக்கொண்டு பொங்கி எழுந்தது. மறுபடி தண்ணீரைத் தெளித்தான். தோழன் வந்துவிட்டானென்று பாலுக்குச் சந்தோஷம். அடங்கிச் சமத்தாகி விட்டது' என்கிறோம். குழந்தை ஒருவாறு திருப்தி அடைகிறது. ஆனால், அந்த இளம் மனம் மீண்டும் மீண்டும் இந்த மாதிரியான விஷயங்களைப் பற்றியே சிந்தித்துப் பார்க்கிறது; கேட்கிறது. இந்தக் குழந்தை பிற்காலத்தில் சிறந்த விஞ்ஞானியாவான் என்பதில் சந்தேக மென்ன? இதேபோல நம்முடைய குழந்தைகளுள் பலர் சட்ட நிபுணர்களாகவோ, ஆசிரியர்களாகவோ, வைத்தி

யர்க ளாகவோ, எழுத்தாளர் களாகவோ, கலைஞர் களா கவோ, கவிஞர்க ளாகவோ ஆகலாம். தாய்மார்க ளாகிய நாம்தான் அவர்களுடைய மனப்போக்கை உள்ளபடி அறிந்து அவர்களது தன்மைக்கேற்ற கல்வியையும் தொழி லையும் தீர்மானிக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நம் குழந்தைகள் பிறர் மெச்ச வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அப்படி வாழ்வதற்கு எடுத்த காரியங் களிலெல்லாம் வெற்றிபெற வேண்டும். வெற்றி என்பது குருட்டுத்தனமான அதிருஷ்ட மன்று. உழைப்பின் கனி தான் வெற்றி. உழைத்துப் பயன் பெறுவதற்கு நேர் வழியிலேதான் செல்ல வேண்டும். தப்பு வழியிலே செல்லுபவன் ஒரே துறையில் செல்ல முடியாமல், இன்றைக்கு ஒரு தொழில் நாளைக்கு மற்றொரு தொழில் என்று தாவித் தாவிச் சென்று ஒன்றிலும் முழுமையான ஞானத்தை அடைய முடியாமல் வாழ்க் கைப் போராட்டத்திலே தோல்வி யடைகிறான். மன நிலையை அறிந்து நேர்வழியில் குழந்தையின் மனத்தைத் திருப்பி விடுவது நம்முடைய பொறுப்பு. இதற்கு ஊக்க மும், தன் கையே தனக்கு உதவி என்ற கொள்கையும் குழந்தையின் உள்ளத்திலே ஊறும்படி செய்ய வேண்டும். இந்த உணர்ச்சி அவர்கள் தம் தொழிலை மேற் கொள்ளும்பொழுது பொருளைத் தேடு, புகழைத் தேடு என்று சொல்ல வேண்டியதில்லை. அவை தாமே வரும். இதே கருத்தைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,

நாமே நமக்குத் துணையானால் நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும் சற்று மிதற்கோர் ஐயமுண்டோ ?
உள்ளம் தேறிச் செய்வினையால் ஊக்கம் பெருக உழைப்போமேல்
பள்ளம் உயர்மே டாகாதோ பாறை பொடியாய்ப் போகாதோ
[என்கிறார்.

இந்த உண்மையைத் தாய்மார்களாகிய நாம் குழந்தைகளின் மனக்கண்களின் முன்பு நிறுத்தி, அவர்களைத் தேர்ந்தெடுக்கும் தொழில்களின் தன்மையைத் தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி அதற்கு வேண்டிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்ட வேண்டும்.

*

## 50 பவுன் தான்!

பல வருஷங்கள் ட்ராம் வண்டி ஓட்டியாக இருந்த ஒருவன் அந்தத் துறையில் முன்னுக்கு வர முடியாது என்று எண்ணினன்.

அவனுடைய வாழ்க்கையின் நோக்கம் ஓர் உபாத்தியாயராக வரவேண்டுமென்பதுதான். இரவில் தொழிலைக் கவனித்துக் கொண்டு நாள் முழுதும் கல்லூரிக்குச் சென்று வந்தான். பட்டம் பெற்றதும் டிரான்ஸ்வாலில் ஒரு பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தான். ஆனல், அவனுடைய தற்போதைய வருஷ வருமானம் 50பவுன் தான்; அதாவது அவன் டிராம் வண்டி ஓட்டியாக இருந்தபொழுது வாங்கியதை விடக் குறைவு!

## தெரியுமா?

இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகிய மூன்று நாடுகளிலும் 3,1000,000 ஜனங்கள். மொத்த ஜனத்தொகையில் முக்கால் பங்கு—ஒரு வாரத்தில் ஒரு முறையாவது சினிமாவுக்குப் போகிருர்களாம்.

பல் வைத்தியத்தில் பெனிசிலின் மருந்தை உபயோகித்தால், பிடுங்கிய பல்லேயே திரும்பவும் பொருத்தி, வளரச் செய்யலாம்.




'குழந்தைகள் புத்தக வாரம்' என்பதாக ஒரு கொண்டாட்டம் வருஷந்தோறும் அமெரிக்காவில் நடைபெறுகிறது. 'குழந்தைகள் கௌன்சில்' எனப்படும் ஒரு சபை மற்றத் தேசிய ஸ்தாபனங்களுடன் சேர்ந்து கொண்டு இதை நடத்தும். 1946-ம் வருஷத்திய கொண்டாட்டத்தின்போது எடுத்த இந்தப் படம், வாஷிங்டன் நகரப் புத்தக சாலை ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகக் கண் காட்சியைக் குழந்தைகள் பார்வை இடுவதைக் காட்டுகிறது.



சகோதரி ஆர். எஸ். சுப்பலக்ஷ்மி அம்மாள்

இவர், தமிழகத்தின் பெண் கல்விக்கு விதை ஊன்றியவர். விதவைகளின் முற்போக்குக்காக தமிழ் நாட்டில் பாடு பட்டுவரும் மற்ருெரு ராஜா ராம் மோகன் ராய். இவரால் வளர்த்து, பண்படுத்தப்பட்டு தகுதி அடைந்த பெண்கள் இன்று குமரியிலிருந்து இமயம் வரை பதவி வகித்து வருகிருர்கள்

# சகோதரி ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி

பத்மினி

ஐம் புலனையும் அடக்கித் தவம் புரிந்து முக்தி பெறுவது மகான்களாகிய ரிஷிகளாலேயே முடியும். சாமானிய ஜனங்களால் முடியாது. ஆனால், இப்பேர்ப்பட்ட ரிஷிகளிலும் கூடப் பலர் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண்டார்களே ஒழியப் பிறரைக் கைகொடுத்து முன்னேற்ற முன்வந்தவர்கள் வெகு சிலரே. தனக்கு வரும் கஷ்டங்களிலிருந்து நீந்திக் கரையேறுவது கஷ்டமானாலும், ஒவ்வொருவனும், எப்படியாவது தன்னைத்தான் காப்பாற்றிக்கொண்டு கரையேற முயலுவான்; வெற்றியும் பெறுவான். ஆனால், தனக்கு வந்திருக்கும் சுகமோ, துக்கமோ பிறருக்கு வந்தால், அவர்கள் கதி என்ன என்று யோசிப்பது மனிதப் பண்பில் இல்லை. தன் நலமற்ற சேவை செய்து, சமூகத்திற்காக உயிர் வாழ்வது என்பது மகாத்மா காந்தியடிகள் நமக்கு எடுத்துரைக்கும் உபதேசம். பிறர் கஷ்டத்தைக் கண்டு மனங் கலங்கி இவர்களுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உறுதியைக் கொண்டு, தனித்து நின்று செயலாற்றியவர் நமது சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள். இந்தத் தன்மையைத்தான் வேதங்கள் கர்ம யோகமென்று கோஷிக்கின்றன. ஐம்பது வருஷங்களுக்கு முன்பாக, நம் நாட்டில் பெண்களின் நிலைமை எப்படி இருந்தது? அதிலும் விதவைகள் எப்படி நடத்தப்பட்டார்கள்? விதவை என்றால், அதில் பிரிவினையே கிடையாது. பால் வடியும் சின்னஞ் சிறு குழந்தையாய் இருந்தாலும் சரி, கணவன் என்ற பதத்திற்கு அர்த்தமே தெரியாத குழந்தை

முதல், கணவன் முகத்தையே பாராத பெண்வரை, எல்லோரும் சமமே. விதவையாகிவிட்டால், அப் பெண்கள் இருந்தும் இறந்தவருக்குச் சமமே. மாட்டையடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தை வீட்டினில் பெண்களிடம் காட்டி வந்த காலம் அது. அப்பேர்ப்பட்ட கட்டுப்பாடுகள் நிறைந்த நாளிலேதான், சுப்புலக்ஷ்மி அம்மாள், தன் பன்னிரண்டாம் வயசில் வைதவ்யத்தை அடைந்தார். அதிர்ஷ்டவசமாக இவர் தாய் தந்தையர் அக்காலத்துக் கட்டுத் திட்டங்களை மீறித் துணிவாக, இவருக்குக் கல்வி புகட்டினர்.

சாதாரணமாக ஒரு மனிதனுக்குத் துக்கம் வந்து விட்டால் நமக்கு இப்படி வந்துவிட்டதே, எல்லோரையும் போல நாம் இருக்க முடியவில்லையே, பகவான் நம்மை இப்படித் துக்கத்தில் ஆழ்த்திவிட்டாரே என்று சிந்தித்துச் சிந்தித்து ஒடுங்கிப்போய் விடுவான். குடும்ப வாழ்க்கை தான் பெண்களுக்கு வாழ்க்கை; அது இல்லையேல், அவர்கள் வாழவே முடியாது. ஒரு பெண் தனித்து உலகத்தில் வாழ முடியாது. கணவனின் ஆதிக்கத்திலோ, தகப்பனாரின் பாதுகாப்பிலோதான் இருக்க முடியும். இவ்விருவரும் இல்லையேல், உடன் பிறந்தவர்களிடமோ, பந்துக்களிடமோ அடைக்கலம் புக வேண்டும் என்ற மனப்பான்மை வேரூன்றி இருந்தது. சமூகத்தின் இக் கொடுமைகள் இவர் மனத்தை உருக்க ஆரம்பித்தன. அறிவாளிக ளாகிய தாய் தந்தையரைப் படைத்த நம் கதியே இப்படி இருந்தால், நம்மைவிட அபாக்கியவதிகளான, நம் கோடிக்கணக்கான சகோதரிகளின் கதி எப்படி இருக்கும் என்று சிந்திக்கலானார். ஒரு வழியும் இன்றி, அடுப்பங்கரையே கதி என்றிருக்கும் சமூகக் கட்டுப்பாட்டைச் சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வேரூன்றியது. ஆங்கிலப் படிப்பும் கல்வியின்

அபிவிருத்தியும், இந்த எண்ணத்தைப் பலப்படுத்தின. மேல் நாட்டி லிருந்து வந்திருக்கும் கன்யாஸ்திரீகள், தங்களைச் சேவைக் கென்று அர்ப்பணம் செய்துகொண்டு, ஆயுள் பரியந்தம், பிறருக்கும் தம் மதத்திற்கும் சேவை புரியும் விதம், இவர் மனத்தில் ஒரு புரட்சியை ஏற் படுத்தியது. ஏன் நம் மதத்திலும் இப்பேர்ப்பட்ட ஸ்தாப னங்கள் இருக்கக்கூடாது என்று தோன்றவே, ஏழைமை அடைந்து கதியற்றுக் கிடக்கும் தம் சகோதரிகளுக்கும், தம் மதமாகிய இந்து மதத்திற்கும் சேவை புரிய தம் வாழ் நாளை அர்ப்பணம் செய்யத் துணிந்தார்.

சாதாரணமாக ஒரு மனிதன், தன் தாய் தந்தையர் களுடைய அல்லது சொந்தக்காரர்களுடைய உதவி யின்றித் தனித்து நின்று, படித்து முன்னுக்கு வந்தால் அவனை எல்லோரும் புகழுகிறுர்கள். ஆனல், தனியே நின்று சமூகத்தையே எதிர்த்துப் போராடி, பாரதி யாரின் கனவாகிய புதுமைப் பெண்ணை உருவாக்கிய சகோதரி சுப்புலக்ஷ்மி அவர்களை என்னென்று போற்று வது? 'நல்ல விலை கொடுத்து நாயை விற்பார் அந்த நாயிடம் யோசனை கேட்பதுண்டோ? கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை கூட்டி வைத்தார்' என்று பாரதியார் சொன்ன படி, மிருகங்களைப் போல நடத்திவந்த சமுதாயத்தி னின்றும், சாதாரணப் பெண்களை அல்ல, விதவைகளையே அக் கட்டுப்பாட்டி லிருந்து விடுவித்து, அவர்களுக்குக் கல்வியைப் புகட்டி, வேத புராணங்களை யெல்லாம் உபதே சித்தார். அப் பெண்களைச் சமூக சேவையும் செய்து கொண்டு, தாங்களும் பிறர் உதவியை எதிர்பாராது இவ் வுலகத்தில் தனித்து ஜீவித்திருக்கும் சக்தியையும் அளித் திருக்கிறுர்.

யாதொரு பலனும் எதிர்பாராமல், சேவையைச் சேவைக்காகவே செய்யும் மனப்பான்மையைக்கொண்டு

உலகம் முழுவதும் சென்று கிருஸ்தவப் பாதிரிகளும், கன்யாஸ்திரீகளும் செய்து வருகிறார்கள். 'மனிதன் கடவுளை வழிபட வேண்டுமானல், மனிதன் மனிதனுக்கு அன்புடனும் தாழ்மையுடனும் சேவை புரிய வேண்டும்' என்றும் கல்வி கேள்விகளிலும், அரசியலிலும் தாழ்வுற்றிருந்த நம் பாரத பூமியைத் தட்டி எழுப்பினர் சுவாமி விவேகானந்தர். பல துறைகளிலும் எண்ணற்ற சேவைகள் செய்து ஓங்கி நிற்கும் ஸ்ரீ ராமகிருஷ்ணாச்ரமம், நம் மக்களின் உள்ளத்தில் 'சேவை' என்ற விதையை விதைத்தது!

சமூகத்தில் விதவைகளின் பரிதாபகரமான நிலையை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்துடன் பல பெரியவர்கள் பாடுபட்டிருக்கிறார்கள். ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ராம் மோஹன் ராய் முதலியவர்கள் விதவைகளை மண்ணோடு மண்ணாகத் தேய்த்து நசுக்கிவிடும் கொடுமையுடன் போராடி, அவர்களுக்கு மறு விவாகம் செய்து கொள்ளும் சுதந்தரத்தைச் சட்ட பூர்வமாக அளித்தார்கள். இது சமூக சீர்திருத்தத்தில் பெரியதொரு வெற்றி யாகும். இருந்தும், விதவைகள் மறுமணம் செய்து கொண்டே தான் ஆகவேண்டுமா? மறுபடி சம்சார சாகரத்தில் உழல்வதுதான் வாழ்க்கையா? இவர்களுக்கு நிமிர்ந்து நிற்கும் ஒரு மனப்பான்மையைக் கொடுத்து, கல்வி மூலம் தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்வ தல்லாமல், சமூகத்திற்குச் சேவை செய்யும்படியான தொண்டர்களாக மாற்ற முடியாதா என்று சுப்புலக்ஷ்மி அம்மாள் எண்ணமிட்டு, விதவைகளின் நிலையையும் உயர்த்தித் தொண்டாற்றும் வலிமையையும் உயர்த்த முன் வந்தார்.

இவரால் ஏற்படுத்தப்பட்ட விதவா ஆச்ரமம், இந்தத் துறையிலே, இந்தியா முழுவதிலுமே தலைசிறந்த ஸ்தாபனமாகும். இதில் தமிழ் நாட்டிற்கே ஒரு தனிப் பெருமை.

இவர் படித்துப் பி. ஏ. பட்டத்தைப் பெற்றதுமே இஷ்டப் பட்டிருந்தால் இவருக்குப் பல பெரிய உத்தியோகங்கள் கிடைத்திருக்கும். ஆனல், தம் சகோதரிகள்பால் இவருக் கிருந்த அன்பினல், அவைகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளா மல், 1908-ல், ஒரு சிறிய வீட்டில், சென்னையில் இப் பொழுது *ஐஸ் ஹவுஸ் என்று அழைக்கப்படும் கட்டிடத் தில் செழித்து நிற்கும், இந்த விதவா ஆச்ரமத்தை ஆரம் பித்தார். முதன் முதலில் இதில் பத்துப்பேர்களே சேர்ந் தார்கள். அப் பெண்களிடத்தில் இவருக்கு ஏற்பட்ட அன்பினலும், இரக்கத்தினலும் அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரே லட்சியத்தைக் கொண்டு, இடையூறுகளை எல்லாம் கவனியாது, தைரிய மாக இறங்கினர். இந்த ஸ்தாபனத்திற்குத் தங்கள் வீட்டுப்பெண்களை அனுப்ப அந்தக் காலத்து மனிதர்கள் எவ்வளவு தயங்கியிருப்பார்கள்! அப்பொழுது பெண்கள் தங்கள் வீட்டிலேயே வாய்விட்டுப் பேச முடியாத காலம் அது—படித்துவிட்டால், அவர்கள் குடித்தனத் திற்கு ஏற்றவர்களா யிருக்க மாட்டார்கள். இருக்கவும் முடியாது என்று உறுதிகொண் டிருந்த காலம் அது. அதிலும் கைம் பெண் என்ருல், அவள் ஒருவர் கண்ணிலும் படக்கூடாது; அபசகுனம். இப்பேர்ப்பட்ட சமூகத்தி னூடே புகுந்து, தான் எடுத்துக்கொண்ட காரியத்தைப் பற்றிப் பேசி, ஜனங்களுக்கு விளக்க முடியுமா? முடியவே முடியாது. பெண்கள் பேசினலே அதிகப் பிரசங்கித்தனம். அப்பேர்ப்பட்ட காலத்தில் புருஷர்கள் கல்லூரியில் படித்துத் தேறுவது எளிதா? இவர் கல்லூரி யில் படித்தபோது இவர் அடக்க ஒடுக்கத்தைப்பற்றி அவருடன் படித்தவர்கள் ‘சுப்புலக்ஷ்மி அம்மாளின் முகத்தையே நாங்கள் யாரும் பார்த்ததில்லை. அவரும்

* Ice house

தன் கால் விரல்களைத் தவிர எதையும் பார்க்கமாட்டார்' என்று சொல்லுவார்களாம். இப்படி இருந்த 'அக்கா' விதவாச்ரமத்தின் தலைவியாக ஆனதும், கண்டிப்பும் அன்பும் கொண்ட வடிவமாக மாறினர். ஆச்ரமத்துப் பெண்களுக்கு உபாத்தியாய ராகவும், சகோதரியாகவும், பாதுகாப்பவ ராகவும் இருந்து மிகுந்த கட்டுப்பாட்டுடன் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கினர்.

கஷ்டங்களில் அடிபட்டுத் தன்னிடம் வரும் பெண்களுக்கு அன்பையும், கல்வியையும் அள்ளி வீசினர். எல்லோரும் இவரைத் தங்கள் உடன் பிறந்த சகோதரியாகவே பாவித்து வந்தார்கள். இங்கிருந்து படித்து வெளி வந்த பெண்கள் மூலமாகவே, சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. எல்லோருக்கும் இவரிடத்தில் ஒரு தனி மதிப்பும் பக்தியும் பிறந்தன. துக்கத்தில் மூழ்கியவர்கள் இவர் தயவை நாட ஆரம்பித்தார்கள். இந்த மாதிரிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து, கணக்கிற்கு அடங்காமல் போயிற்று. பெண்களின் தொகை அதிகரிக்க, அதிகரிக்க இவரது பொறுப்பும் அதிக மாயிற்று. இந்தப் பெரிய வேலைக்குத் தனிப் பட்ட ஒருவரால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. இந்தக் காரியங்களுக் கெல்லாம் சர்க்கார் உதவி முக்கியம் என்று எடுத்துக்காட்டி, சர்க்காரிட மிருந்து உதவிச் சம்பளங்கள் பெற ஆரம்பித்துப் பிறகு ஆச்ரமத்தையே சர்க்கார் நடத்தும்படியாகச் செய்துவிட்டார். சென்னைக் கடற்கரை ஓரமாக நிற்கும் ஐஸ் ஹவுஸ் என்ற கட்டிடத்தில் சர்க்காரால் நடத்தப்பட்டு வரும் விதவாசிரமம்தான் இது.

மேலும் பெண்கள் வந்து இவரிடம் தங்கள் கஷ்டங்களை முறையிட்டு, ஆசிரமத்தில் இடம் பெறுவார்கள். எவ்வளவு பேர் வந்தாலும், அவர்களை அன்போடு வர

வேற்று, அவர்கள் சுகதுக்கங்களை எல்லாம் விசாரித்து, அவர்களுக்குத் தக்க ஏற்பாடு செய்வார். எந்த வேளையில் வந்து தொந்தரவு கொடுத்தாலும், உடனே தன் வேலையை எல்லாம் நிறுத்திக்கொண்டு, இவர்களைக் கவனித்து ஆறுதல் கூறுவார். ஒவ்வொருவரையும், தனித்தனியாக நினைவு வைத்துக்கொண்டு, அவர்களை எங்கு, எப்பொழுது பார்த்தாலும், அவர்கள் குடும்ப சமாசாரத்தை எல்லாம் கொஞ்சம்கூட மறக்காமல் விசாரிப்பார். இவர் ஞாபகசக்தி அபாரமானது. கேட்போரைப் பிரமிக்க வைக்கும். இப்படியாக, தங்கள் துயரங்களைக் கொண்டு இவரிடம் வரும் பல பெண்களும்—விதவை அல்லாதவர்க ளாகவும் இருப்பார்கள்—கணவர்களால் தள்ளப்பட்டவர்களும், அவர்களால் கவனிக்கப் படாதவர்களும், அவர்களால் ஹிம்சிக்கப்பட்டவர்களும் கண்ணீரும் கம்பலையுமாக இவரிடம் சரணாகதி அடைவார்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு வழி தேடவேண்டுமே என்ற எண்ணம் வேரூன்றித்தான், அது ஸ்ரீ சாரதா வித்யாலயமாகப் பரிணமித்தது.

இவர் எடுத்துக்கொண்ட இத்தக் காரிய மானது விதைவைகள் சம்ரக்ஷணையைவிடச் சிரம மானது. இந்தப் பெண்களைக் காப்பாற்றவோ, சுகமாக வைத்துக் கொள்ளவோ முன்வராத புருஷர்கள், இவர்களுக்கு ஒரு வழி ஏற்பட்டு, முன்னுக்கு வந்துவிடப் போகிறார்களே என்று அஞ்சி இவருக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டார்கள்! இந்த நிற்கதியான பெண்களின் நலனையே கருதிய இவர் கோர்ட்வரை சென்று, அந்தக் கொடிய புருஷர்களிட மிருந்து இவர்களை மீட்டுப் பாதுகாத்திருக்கிறார்; இன்னமும் செய்துகொண்டே இருக்கிறார். இந்த ஸ்தாபனத்திற்குச் சர்க்கார் உதவியையே நாடாமல், தானே வீடு வீடாகப் புகுந்தும், ஊர் ஊராகச் சுற்றியும், கப்பலேறி

ரங்கூன்வரை சென்று, பொருள் திரட்டியும் இதை ஒரு மாபெரும் ஸ்தாபனமாகச் செய்திருக்கிறார். திருவல்லிக் கேணியில் சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரி, மயிலை வந்தது. இப்பொழுது மாம்பலத்தில் இருக்கிறது. இதன் ஹாஸ்டலை மட்டும் நிர்க்கதியான பெண்களுக் கென்று வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடத்தைப் பொது வாக வைத்திருக்கிறார். ஸ்ரீ பரமஹம்ஸரின் மனைவியாகிய சாரதாமணி தேவியாரின் பெயரில் ஆரம்பிக்கப்பெற்ற இந்த ஆசிரமம், இப்பொழுது ராமகிருஷ்ண பாடசாலை யுடன் சேர்க்கப்பட்டு, இவர் மேல் பார்வையில் நடக் கிறது. இப்பொழுது பிராபல்யம் அடைந்து ஒரு மா பெரும் ஸ்தாபனமாக நடக்கிறது.

இவருடைய ஒப்பற்ற சேவையைப் பொது ஜனங்கள் பாராட்டுவதோடு சர்க்காரும் பாராட்டிக் கேசரி ஹிந் பதக்கம் அளித்தார்கள்.

தமிழ் நாட்டிலே, பெண் கல்வி அபிவிருத்திக்கு மூல காரணம் சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள்தான் என்று சொன்னால் மிகையாகாது. நம் நாட்டில் பெண்கள் படித்து, முன்னுக்கு வரலாம் என்ற எண்ணமே இவரால் ஏற்பட்டதுதான். இவரிடம் படித்து, இவர் உதவியைப் பெற்று முன்னுக்கு வந்த பெண்கள் ஆயிரக் கணக்கில், குமரியி லிருந்து ஹிமாலயம் வரை உத்தியோகம் பார்க் கிறார்கள். இவர்கள் அன்பினால் சூட்டிய மாபெரும் பட் டம்தான் 'அக்கா' என்ற பெயர். எல்லா ஸ்திரீகளுக்கும் தமக்கை ஸ்தானத்தை வகிக்கிறார் அல்லவா?

*

# வின்னி

கௌரம்மாள்*

**ஊ**ரி லிருந்து அப்பா கடிதம் எழுதி இருந்தார் : "இங்கே எல்லாம் வைசூரி அதிகமாக இருக்கிறது. இந்த லீவில் ஊருக்கு வரவேண்டாம். அங்கேயே இரு. கிருஸ்துமஸ் லீவ் கிடைக்கும்பொழுது வந்து அழைத்து வருகிறேன்."

வெகு நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த லீவுக்கு ஒரே வாரம்தான் பாக்கி. பெண்கள் எல்லோரும் ஊருக்குப் புறப்பட ஏற்பாடு செய்துகொண் டிருந்தார்கள். நான் எல்லோருக்கும் முன்பே புஸ்தகங்களையும், துணி மணிகளையும் மூட்டை கட்டி முடித்து வைத்திருந்தேன்.

விடுமுறை நாட்களை எப்படிக் கழிக்க வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் யோசித்த வாறு ஆனந்தப்பட்டுக்கொண் டிருக்கையில் இந்தக் கடிதம்! அம்மா, அண்ணா, குட்டி மோகன் எல்லோரையும் பார்க்க வேண்டுமென்றிருந்த ஆசை நிராசை. படித்துப் படித்து அலுத்துப் போய்விட்டது. அப்பொழுது அறையில் வேறு யாரும் இல்லையாதலால் கண்ணீருக்கும் தடங்கல் ஏற்படவில்லை. அப்படியே கட்டிலில் படுத்து, எல்லோரும் புறப்பட்டுப் போன பிறகு எப்படி நாட்களைக் கழிப்பது என்று சிந்திக்க ஆரம்பித்தேன். இதற்குள் வின்னி வந்து நின்றாள்.

---

*இது கன்னடச் சிறு கதை. கன்னடமூலத்தி லிருந்து மொழி பெயர்த்தவர் ஸ்ரீமதி ஜயலெட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்

அவள் பெயர் வசந்தி. ஆனால், முதன் முதல் அவள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தபொழுது மிக வேடிக்கை. ஒல்லியாக இருந்த அவளைப் பார்த்து 'லீனி' என்று தமாஷ் செய்தார்கள். அப்பொழுதி லிருந்து அவளுக்கு லீனி, லின்னி என்ற பெயர் ஸ்திரப்பட்டுவிட்டது. 'வசந்தி என்றால் எந்த வசந்தி?' என்று எல்லோரும் கேட்பார்கள். கடைசியில் உபாத்தியாயர்களுக்குக்கூட அதே பாடமாகி வசந்தி என்ற பெயரே மறந்து போய்விட்டது.

லின்னி வெகு துடியான பெண். எல்லோரும் அவளுக்குச் சிநேகிதர்கள். மனது வைத்திருந்தால் அவள் வகுப்பில் முதன்மை வகித்திருக்கலாம். எங்களுள் ஒருவருக்குமே தெரியாத கணக்குகளை அவள் வெகு சுலபமாகச் செய்துவிடுவாள். ஆனால், அவளுக்குப் பாடத்தை விட விளையாட்டிலும், விஷமத்திலும்தாம் விருப்பம் அதிகம். செய்யக்கூடாது என்பதைச் செய்வதில் ஆவல் அதிகம். எங்கள் காம்பௌண்டில் இருந்த பெரிய பெரிய மரங்களின் மீதெல்லாம் ஏறி அதற்காக எவ்வளவோ தடவை தண்டனை அடைந்திருக்கிறாள். எங்கள் கலாசாலையில் டென்னிஸ் விளையாட்டிலும் நீந்துவதிலும் ஒருவரும் அவளை வெல்ல முடியாது.

பார்ப்பதற்கு அழகி அல்லாவிடினும் அவள் குரல் வெகு இனிமை. பிரார்த்தனைச் சமயத்தில் அவள் பாடுவதைக் கேட்கும் பொழுது மெய்ம் மறந்து போய்விடும். பாட்டு வகுப்பில் அதுவும் அவள் பாடுவதைக் கேட்பதற்காக தூரம் வந்த பெண்கள் கூட வந்து விடுவார்கள். அவ்வளவு இனிமை அவள் குரலில்! எப்பொழுதும் சிரித்துக்கொண்டே யிருப்பாள். அவளுக்குக் கோபம் வந்ததையாவது அவள் அழுததையாவது நாங்கள் யாரும் பார்த்தது கிடையாது. எப்பொழுதும் ஏதாவது விஷமம் செய்துகொண் டிருப்பது அவள் சுபாவம். க்ஷண நேரம்

கூடச் சும்மா யிருக்க மாட்டாள். அவளும் நானும் ஹாஸ்டலில் ஒரே அறையில்தான் தங்கி யிருந்தோம். உள்ளே வந்து நான் படுத்திருப்பதைக் கண்டு, "ஏன் சீதா, இடுப்பு ஒடிந்து விட்டதா! படுத்து விட்டாயே" என்று கேட்டாள். அவள் பேச்சைக் கேட்டுச் சிரிப்பு வந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தேன். அவள் வந்து என் அருகில் உட்கார்ந்து "ஊரி லிருந்து கடிதம் வந்ததா?" என்று கேட்டாள். மேஜைமே லிருந்த அப்பாவின் கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தேன். படித்துப் பார்த்துவிட்டு "எங்கள் வீட்டுக்கு வந்துவிடு. இன்னொரு தடவை வருகிறேன்; மற்றொரு தடவை வருகிறேன் என்று பொய்ச் சாக்குகள் சொல்லிக்கொண் டிருந்தாய், இந்த லீவில் எப்படியும் ஊருக்குப் போவதற்கில்லை, வந்துவிடு. இல்லா விட்டால் உன்னுடன் டூ விடுவேன்" என்றாள்.

எல்லோரும் போன பிறகு நான் தனியே ஹாஸ்டலில் இருக்க வேண்டுமே என்று நிரம்பக் கவலையாக இருந்தது. லின்னியும் தங்கள் வீட்டுக்கு வர வேண்டு மென்று நிரம்ப நாளாய் அழைத்துக்கொண் டிருந்தாள். ஒண்டி யாக இருப்பதைவிட லின்னியுடன் போவதே மேல் என்று நினைத்து, "ஆகட்டும்" என்றேன்.

அவளுக்கு நிரம்பவும் சந்தோஷம். பொதுவாக எல் லாப் பெண்களும் அவளுக்குச் சிநேகிதர்கள்தான். ஆனா லும், நான் என்றால் அவளுக்கு அதிகப் பிரியம். என்னை விட அவள் ஒரு வயசு மூத்தவள். பெரிய பெண்கள் என்னைச் சீண்டும்பொழுது எப்பொழுதும் என் உதவிக்கு லின்னி வருவாள். லின்னி என் பக்கம் என்று தெரிந் ததுமே மற்றவர்கள் என் வழிக்கு வருவது குறைந்து விடும். முதலில் உறவினரைப் பிரிந்து வந்தபொழுது ஏற்பட்ட ஏக்கம் லின்னியின் பழக்கத்தால்தான் குறைந்

தது. நாட்கள் செல்லச் செல்ல எனக்கு அவள் கூடப் பிறந்த தமக்கையைவிட நெருங்கிய சுற்றமாகவே ஆகி விட்டாள். எதையும் அவளிடம் சொல்லாமல் இருக்க மாட்டேன். கடந்த வருஷம் எங்கள் ஊருக்கு வந்து அம்மாவின் பரிவையும் அண்ணாவின் ஆதரவையும் மோகனனின் அன்பையும் அபகரித்துவிட்டாள் அவள். யாராலும் சரி, வின்னியின்பால் அன்பு செலுத்தாமல் இருக்க முடியாது. எல்லோரையும் பரவசப் படுத்தக் கூடிய அழகிய குணங்கள் என் வின்னியிடம் மலிந்து கிடந்தன. ஆதலால்தான் வின்னி பாடம் கற்காமலே விளையாட்டிலேயே காலம் கழித்தபொழுது தண்டனை விதிக்க வெண்டுமென் றிருந்த உபாத்தியாயரம்மாள் அவள் முகத்தைக் கண்டு தண்டனை விதிக்க மனம் வராமல் எவ்வளவோ தடவை அவளை மன்னித்துவிட் டிருக்கிறாள்.

## 2

வின்னி ஊருக்கு வருகிறேன் என்று எழுதி யிருந்ததைவிட ஒரு நாள் முன்னதாகவே நாங்கள் புறப்பட்டோம். நாங்கள் அன்றைக்கு வருவது அவள் வீட்டினருக்குத் தெரியாது. ஆதலால், ஸ்டேஷனிலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு போக யாரும் வரவில்லை. அங்கிருந்து வின்னியின் வீட்டிற்கு மூன்று மைல் தூரம் இருந்தது. கான்வென்டில் ஜெயிலில் இருப்பவர்கள் போல் இருந்த எங்களுக்கு அநாயாசமாக மூன்று மைல் நடப்பதென்றால் அது ஒரு சௌபாக்கியம் போல். ஸ்டேஷன் மாஸடர் வின்னிக்குத் தெரிந்தவர்தான். அவர் கார் கொண்டுவரச் சொல்கிறேன் என்றார்.

பெட்டி படுக்கைகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டு கால் நடையாகவே புறப்பட்டோம். வனங்களின் நடுவி

லிருந்தும், தோட்டங்களின் மத்தியிலிருந்தும், வாய்க்கால்களைத் தாண்டிக்கொண்டும், ஓடியும் உட்கார்ந்தும், கண்ட கண்ட காட்டுப் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டும் எப்படி வழி முடிந்துவிட்டதென்றே அறியா வண்ணம் அதி சீக்கிரத்தில் வீட்டை நெருங்கினோம்.

அப்பொழுது காலை ஒன்பது மணி. வெயில் இன்னும் அதிகமாகவில்லை. அவர்கள் வீடு உயரமானதொரு குன்றின் மேல் இருந்தது. வீட்டிற்குச் செல்லவேண்டுமானால் தோப்பு ஒன்றைத் தாண்டி, பூந்தோட்டத்தின் வழியே போக வேண்டும். தோப்பை நெருங்கினோம். ஒரு மரத்தின் கீழே யாரோ ஒருவன் அமர்ந்து *பிட்ஜெரால்டு உமர்கயாம்மை உரக்கப் படித்துக்கொண்டிருந்தான். ரோட்டின் புறம் முதுகைத் திருப்பிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். ஆகையால், அவனுடைய முகம் எங்களுக்குத் தெரியவில்லை. அவனைப் பார்த்ததும் வின்னி சப்தம் செய்யாமல் எனக்கு ஜாடை காட்டிவிட்டு, மெதுவாகப் பின்புறமாகப் போய் அவனுடைய கண்களைப் பொத்தினாள். உட்கார்ந்திருந்தவனுக்குத் தூக்கிவாரிப் போடவே, கண்களைப் பொத்தி இருந்த வின்னியின் கரங்களைத் தடவிப் பார்த்துத் தணிந்த குரலில், "வசந்தா" என்றான். சிரித்துக்கொண்டே வின்னி அவன் கண்களை விட்டுவிட்டு, "நான் என்று எப்படித் தெரிந்தது ராமு?" என்றாள்.

"பாவம் உன் கைகளின் அறிமுகமே எனக்கு இல்லை அல்லவா?" என்றவன் சிரித்துக்கொண்டு, "இதென்ன வசந்தா, நாளைக்கு வருவதாக என் பொய்க் கடிதம் எழுதினாய்?" என்று கேட்டான்.

"பார்த்ததுமே ஆரம்பித்து விட்டாயே சண்டைக்கு, பொய் சொல்பவள் என்று? நாங்கள் ஊகித்ததை விட ஒரு

* Fitzgerald

நாள் முன்னதாகவே விடுமுறை கிடைத்துவிட்டது. இன்னொரு நாள் கழித்து வந்திருந்தால் உன்னை இப்படி இப்பொழுது பார்த்திருக்க முடியுமா?"



லின்னி பேச்சுச் சுவாரஸ்யத்தில் என்னை மறந்துவிட்டிருந்தாள். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது நடுவில் குறுக்கிடுவது எனக்கும் சரி என்று தோன்றவில்லை. அவர்கள் பக்கம் முதுகைத் திருப்பிக்கொண்டு நின்ற வண்ணம், நெடுந் தூரம் வரை மரங்களின் ஊடே பாய்ந்து சென்றுகொண்

டிருப்பது போல் தோன்றிய ரஸ்தாவைக் கவனிக்க லானேன். கண்கள் ரஸ்தாவைக் கவனித்துக்கொண் டிருந்தாலும், மனது 'இந்த ராமு யார்? வின்னி இவனைப்பற்றி இதுவரைக்கும் என்னிடம் சொன்ன தில்லையே, ஏன்?' என்பனபோன்ற கேள்விகளைக் கேட் டது. அப்படி எவ்வளவு நாழிகை நின்றிருந்தேனே? நாயொன்று குரைத்துக்கொண்டு என்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டு திகிலுடன், "வின்னீ" என்று கூவி னேன். வின்னி ஒருத்திதான் என்று எண்ணியிருந்த ராமு என் கூச்சலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். பேச்சில் லயித்திருந்த வின்னிக்கும் நான் இருக்கிறேன் என்ற நினைவு உதித்தது. "டெட்டீ டெட்டீ" என்று நாயை அழைத்து அதன் தலையைத் தடவிக்கொண்டே, "ராமூ! இவள் என் சிநேகிதி சீதா" என்று என் பக்கம் திரும்பி, "சீதா! ராமு உன்னைப் போலவே உமர்கயாம், மற்றும் கௌசல்யா நந்தனனின் கதைகள் இவைகளையெல்லாம் படிக்கும் பித்துக்குள்ளிகளில் ஒருவன்" என்றாள்.

கௌசல்யா நந்தனனின் கதைகளும் உமர்கயாமின் பாடல்களும் எனக்கு ரொம்பப் பிரியமானவை. ராமு வும் அவைகளை மெச்சினன் என்பதை அறிந்து, "எனக் கும் அவைகள் மீது ரொம்பப் பிரியம்" என்றேன். அவன் புன்னகையுடன், "வசந்தாவுக்கு, எனக்கு அவைகள் மீதுள்ள பிரியத்தைப் பித்து என்று கேலி செய்வதில்தான் ஆசை. சமயம் கிடைத்த பொழுதெல்லாம் என்னைப் பித்துக்குள்ளி என்று சொல்லும்படியான நல்ல சந்தர்ப் பத்தை அவள் எப்பொழுதும் நழுவவிட மாட்டாள்" என்ருன்.

"நீங்கள் இரண்டு பித்துக்குள்ளிகளும் பேச ஆரம் பித்து விட்டால் இருட்டினாலும் விடமாட்டீர்கள். உள்ளே போவோம், வாருங்கள்" என்று வின்னி புறப்பட்டாள்.

ராமுவும் மிக நிதானமாக அருகில் கிடந்த கோலை ஊன்றிக் கொண்டு எழுந்து நின்றான். எனக்கு அளவு கடந்த ஆச்சரியம் ஏற்பட்டது. அவனுடைய கால் ஒன்று நொண்டி!

## 3

ராமு வின்னியின் அத்தை மகன். பெற்றோரை இழந்த அவனை வின்னியின் பெற்றோரே வளர்த்தனர். ஆதலால் தான், அவ்விருவரிடையே அவ்வளவு சலுகை. சிறுவயசி லிருந்தே ராமுவுக்கு வசந்தாவைக் கொடுப்பதென்று நிச்சய மாகி இருந்தது. ஆனால், ராமு ஐ. ஸி. எஸ். பரீக்ஷைக் குப் போனபொழுது குதிரைமே லிருந்து விழுந்து ஒரு கால் ஊனமாகி விட்டது. அது முதல், அவள் பெற்றோர் கள் பெண்ணை அவனுக்குக் கொடுக்க விரும்பவில்லை. வின்னி மாத்திரம் ராமுவைத் தவிர வேறொருவரையும் நினைப்பதில்லை என்று மனத்துள் சபதம் செய்திருந்தாள். ஆனாலும், அவள் பெற்றோர்கள் நொண்டிக்குப் பெண்ணைக் கொடுப்பதற்குத் தயங்கினார்கள். ஆதலால்தான், இரண்டு வருஷங்களுக்கு முன்பே நடக்க வேண்டிய வின்னியின் கல்யாணம் இன்னும் நடந்தபா டில்லை. தான் நொண்டி ஆனதி லிருந்து அவளை நினைப்பதற்கே சங்கோசப்படலா னான் ராமு. நொண்டியான தன்னை வின்னி கருணையால் விவாகம் செய்து கொள்ள விரும்புகிறாள் என்ற எண்ணமே தோன்றிற்று. அவனுக்கு இதனால் ஒருவித ஏக்கமும் வெறுப்பும் தோன்ற லாயின. தான் உயிர் வாழ்வதற்கே தகுதி இல்லாதவன் என்று நினைத்தான்.

வின்னியை அவன் காதலித்தாலும் தனது செயல் களின் மூலம் ஒருபொழுதும் அந்த அன்பை அவன் வெளிப் படுத்தவில்லை. அவள், அவனிடம் உட்கார்ந்து பேச ஆரம் பித்தால் அவளை நோகவைக்கும்படி பேசித் துன்புறுத்து

வான். அப்படியாவது லின்னி தன்னை விட்டு விலகியே இருக்கட்டும் என்று நினைக்கும் அவன் நெஞ்சம். பாவம், லின்னி அவனுடைய கடுஞ்சொற்களால் மிகவும் வருத்தப் படுவாள். எப்பொழுதும சிரிப்பு நிறைந்து ததும்பும் அவளுடைய கண்களில் கண்ணீர் நிறைந்திருப்பதைப் பார்க்கும்பொழுது, 'விஷமக்காரி, லின்னியின் இதயத் தினுள் இவ்வளவு அன்பு, இவ்வளவு காம்பீரியம் அடங்கி இருக்க இடமேது?' என்று தோன்றும் எனக்கு. சிரிப்பிலேயே வாழ்க்கையை மிதக்க விட்டுக்கொண் டிருந்த லின்னியின் முகத்தில் துயரம் படர்ந்த பொழு தெல்லாம் ராமுவின் மேல் எனக்கு அசாத்தியக் கோபம் வரும். ஏன் இப்படி நோகச் செய்கிருய் என்று அவனைக் கேட்கலாமா என்று எவ்வளவோ தடவை யோசிப்பேன். ஆனல், இவ்விதம் நான் கேட்டதை லின்னி அறிந்தாலோ ......பிறகு என்ன நேருமோ? என்பதை நினைத்துக் கொண்டு சும்மா இருந்து விடுவேன்.

அர்த்தோதய புண்ய காலம் வந்தது. எல்லோரும் காவேரியில் ஸ்நானம் செய்யப் போனோம். காவேரி தொலைவில் இருந்ததால் நடந்து போனால் ஸ்நானம் செய்து முடித்துக் கொண்டு வீடு திரும்புவதற்கு நேரம் செல்லு மென்று காரிலேயே போய் வருவதென்று நிச்சயித்திருந்த தால் ராமுவும் வரவேண்டு மென்று எங்கள் விருப்பம் லின்னி, அவளுடைய பெற்ருேர்கள், நான் எல்லோரும் அவனை அழைத்துப்போக வேண்டு மென்று பிரயத்தனம் செய்தோம். "நான் வரவில்லை" என்று எல்லோருக்கும் ஒரே பதில்தான். முன் தினம் ராமுவும் வரக்கூடும் என்ற நம்பிக்கையால் ஆனந்தத்துடன் மகிழ்ந்து போன லின்னிக்கு மிகுந்த ஏமாற்றம். அவளுடைய மனே பாவத்தை அறிந்து எனக்கும் ராமுவின் மீது தாங்க முடியாத கோபம் ஏற்பட்டது. இந்தத் தற்பெருமையும்,

அகம்பாவமும் கொண்ட நொண்டியினிடம் அதென்ன குணத்தைக் கண்டு மெச்சி, லின்னி அவனைக் காதலிக்கிறளோ! என்று எண்ணிக் கொண்டேன். சிந்திக்கச் சிந்திக்க என் லின்னிக்கு ராமு யோக்கியமான வரன் இல்லை என்றுதான் தோன்றிற்று. பெற்றேர்களின் வார்த்தையை மீறித் தன்னைக் காதலிக்கும் லின்னியை ராமு திரஸ்கரித்தாலும் லின்னி சகித்துக் கொண்டிருப்பதைக் காணும் பொழுது எனக்கு உறுதி ஏற்பட்டது உண்மையாகவே காதல் குருடு என்று.

லின்னிக்கு நீந்துவது என்ருல் மிகப் பிரியம். பள்ளிக்கூடத்திலிருந்து வன போஜனத்துக் கென்று காவேரிக் கரைக்குப் போகும் பொழுதெல்லாம் அவளைக் காவேரியிலிருந்து கரை ஏறச் செய்வதற்குள் வாத்தியாரம்மாக்களுக்குப் போதுமென் ருகிவிடும். வீட்டில் ஏற்படும் அலுப்புச் சலிப்பு அனைத்தையும் லின்னி காவேரியில் மறந்து போவாள் என்று எண்ணி இருந்தேன். நான் எண்ணியவாறு காவேரி சேர்ந்த பிறகும் லின்னிக்கு எப்பொழுதும் போல் உற்சாகம் ஏற்படவில்லை. ஜலத்தைக் கண்டால் மீன் போல் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தவள் ஐந்தே நிமிஷங்களில் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கரைக்கு வந்துவிட்டாள். அந்த நொண்டியின் சுயநலத்துக்கு லின்னி பலியாவதைக் கண்டு எனக்குச் சகிக்க முடியவில்லை. வீடு போய்ச் சேர்ந்த உடன் அவனை நன்ருகத் திட்டிவிடவேண்டு மென்று நிச்சயம் செய்து கொண்டேன்.

## 4

லின்னிக்காக, அவள் சுகத்துக்காக, அவள்பால் எனக்கு உண்டான அன்புக்காக, நான் செய்ததால்

ஏற்பட்டதன் விபரீத விளைவு எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நான் என்றென்றைக்கும் ராமுவைத் தூஷிக்கும் முயற்சியில் கை வைத்திருக்கவே மாட்டேன். எனக்கென்ன தெரியும்? என் பேச்சின் காரணமாக ராமு தேசாந்திரம் சென்றுவிடுவான் என்று! வின்னியின் நன்மைக்காகச் செய்த பிரயத்தனத்தால் அவளுக்குக் கொஞ்ச நஞ்சம் உண்டான சுகமும் பாழாய்ப் போய் விடும் என்று எனக்கு முன்பே தெரிந்திருந்தால், நான் என்றைக்கும் ராமுவிடம் நிஷ்டூரமாகப் பேசி இருக்க மாட்டேன். ஆனால், நடக்கப்போகிற விஷயங்கள் முன்பே தெரிவதாய் இருந்தால் உலகில் எத்தனையோ மாறுபாடுகள் வெகு சுலபமாக ஆகிவிடுமே! இப்பொழுது நினைக்கும்பொழுது நான் ராமுவை நிந்தித்தது தவறென்று தோன்றினாலும் அப்பொழுது எனக்கு அதுதான் சரி என்று தோன்றிற்று. அன்றைத் தினம் வின்னியின் சுகத்தை விரும்பி நான் பேசிய கடுஞ் சொற்கள் ராமுவை உண்மையாகவே நோகச் செய்யக்கூடியவை. இல்லாவிடில் ராமு—மென்மை உள்ளம் படைத்த ராமு—யாருக்கும் சொல்லாமல் அன்று இரவு—அமாவாசையின் காரிருளில்—சிறுவயசி லிருந்து எடுத்து வளர்த்துப் போஷித்த பெற்றோரைக் காட்டிலும் பிரியமான மாமா மாமியின் ஆசிரயத்தைத் துறந்து புறப்பட்டுப் போகும்படியான கல் மனம் படைத்தவன் இல்லை.

வின்னிக்கு நன்மை செய்வதற்கு முயன்ற நான், தீமையே செய்தாற்போல் ஆயிற்று. ராமு புறப்பட்டுச் சென்றதன் காரணம் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. சொல்ல எனக்கும் தைரியம் வரவில்லை. வின்னியின் சிரித்த முகம் வாடி இருப்பதைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் இதயம் வெடித்து விடும்போல் தவிக்கும். சிநேகிதி என்று தன் அகத்துக்கு அழைத்து வந்ததன்

பலனை அவள் அறிந்தால் என்ன நினைத்துக்கொண் டிருப்பாளோ! அதை நினைத்து, லின்னியின் கட்டைத் துறக்கும் சம்பவத்தை யோசிக்குங்கால் இதயம் பதறும். என் குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கான துணிவும் ஏற் படவில்லை.

விடுமுறை முடிவதற்கு இன்னும் இரண்டு நாள் இருக்கும்பொழுதே நாங்கள் பள்ளிக்கூடத்திற்குத் திரும்பினேம். வேறு எந்தப் பெண்ணும் வரவில்லை; நாங்கள் இருவர்தாம்; லின்னியுடன் கழிக்கும் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு மிக மிக அருமையாக இருந் தாலும் அறியாமையால் அவள் வாழ்வின் விளக்கை அணைத்த எனக்கு அவள் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது. விடுமுறை முடிந்து பெண்கள் எல்லாம் திரும்பி வந்த பொழுது லின்னியின் விஷமத்தனமும், பரிகாசமும் மாயமாய் மறைந்து கம்பீரப் பார்வையையும், இடுங்கிய கண்களையும் ஏகாந்தமாக இருக்க விரும்பும் சுபாவத்தை யும் கண்டு ஆச்சரியப்பட்டு, "சீதா, லின்னிக்கு என்ன வந்து விட்டது?" என்று என்னைக் கேட்டார்கள் எல்லோரும். நான் என்னத்தைச் சொல்ல?

நாட்கள் செல்லச் செல்ல லின்னி முன்போல் வேடிக்கை, விளையாட்டு, பரிகாசம் அனைத்தையும் துறந்து எப்பொழுதும் படித்துக் கொண்டே இருக்கத் தொடங்கி ளுள். அவள் இப்பொழுது ஆசிரியைகளுக்குப் பிரியமான சிஷ்யை. வகுப்பில் முதல் ஸ்தானம் வகித்தாள். லீவுக்கு முந்திய லின்னி அடியோடு மாறிவிட்டாள். முன்பு விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்ட பிறகு லின்னி ஏதாவது பேசிக்கொண் டிருப்பது வழக்கம். ஆனல், இப்பொழுதெல்லாம் அறைக்குள் வந்த உடனே படுத்து விடுவாள். தூக்கம் வரவில்லை என்று எனக்குத் தெரிந்திருந்தாலும் பேச வைப்பதற்கு மாத்திரம் துணிவு

உண்டாகவில்லை. நாங்கள் ஒரே அறையில்தான் இருந்தோம். ஆனாலும், நாட்கள் செல்லச் செல்ல ஒரு நாளைக்கு ஒரு வார்த்தை பேசுவதுகூட வெகு அருமையாகி விட்டது.

வழக்கம்போல் ஒருநாள் விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டோம். இருவருக்கும் தூக்கம் வரவில்லை. லின்னி, "சீதா" என்றாள். நாங்கள் பேசி எவ்வளவோ நாட்களாகிவிட்டன. லின்னி, "சீதா" என்று அழைத்ததைக் கேட்டுப் பழைய நாட்கள், எல்லாம் நினைவுக்கு வந்தது. அழுகை வந்து விட்டது எனக்கு. தடுத்துக் கொள்ள முயன்றும் முடியவில்லை. விக்கி விக்கி அழுது விட்டேன். ஆனாலும்கூடத் தவறை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோருவதற்குத் தைரியம் வரவில்லை. நான் அழும் சப்தத்தைக் கேட்டு லின்னி எழுந்து வந்து, என் கைகளைப் பிடித்துக் கொண்டு "சீதா, என் சீதா, என்னை மன்னித்து விடு" என்றாள்.

'மன்னித்துவிடு' நான் அவள் காலைப் பிடித்துக் கொண்டு சொல்ல வேண்டிய வார்த்தை அது. இளகிய உள்ளம் படைத்த லின்னி என்னுடன் எந்த அபராதத்தை முன்னிட்டு மன்னிப்புக் கோரவேண்டும்? அவள் மறுபடியும் சொல்ல ஆரம்பித்தாள்: "நான் உன்னுடன் முன் போல் அரட்டை அடிக்கா விட்டாலும் முன்னை விட நெருங்கிய சினேகிதி நீ எனக்குச் சீதா. நீ என்னை அறிந்திருப்பது போல் என் தாயார் கூட அறியவில்லை. சீதா, என் இப்பொழுதிய நடவடிக்கையால் உனக்கு அலுப்பு உண்டாகலாம். ஆனாலும், நீ இப்பொழுது எனக்கு முன்னை விட இன்னும் அந்தரங்கமாகிவிட்டாய் சீதா, சீதா, சீதா............"

லின்னி விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள். சமாதானம் செய்யும் வகை தெரியவில்லை. அவளைத் தழுவித் தோள்

மீது சாய்த்துக்கொண்டு மௌனமாகக் கண்ணீர் சொரிந்தேன்.

## 5

ஒரு வருஷம் கழிந்தது. எங்கள் ஹைஸ்கூல் படிப்பும் முடிந்தது. என் தந்தை பெண் கல்விக்கு ஊக்கம் அளிப்பவர். ஆதலால், காலேஜ் படிப்புக்கு என்னை அனுப்புவதாக நிச்சயித்தார். லின்னியும் படிக்க விரும்பியிருந்தால் அவள் பெற்றோர்கள் தடுத்திருக்க மாட்டார்கள். ஆனால், அவள் வீட்டில் இருக்கவே விரும்பினாள். ஒன்பது வருஷங்களாக இணை பிரியாமல் இருந்த எங்களுக்கு ஒருவரை யொருவர் விட்டுப் பிரியும்பொழுது மிகவும் கஷ்டமா யிருந்தது. புறப்படும்பொழுது அவளுடைய எதிர்கால வாழ்க்கையை நினைத்து நினைத்துத் தடுக்க முடியாத சங்கடம் உண்டாயிற்று. ஆனாலும், ராமு வீட்டை விட்டுப் போனதன் காரணத்தைச் சொல்வதற்கு மட்டும் தைரியம் வரவே யில்லை. சென்னைக்குப் போன பிறகு கடிதம் எழுதி மன்னிப்புக் கோரலாம் என்று நிச்சயம் செய்துகொண்டு சொல்லாமலே புறப்பட்டுவிட்டேன். நான் சென்னைக்குப் போன வருஷமே அண்ணாவுக்கும் அவ்விடத்துக்கே மாற்றலாகிவிட்டதால் வீட்டி லிருந்தே காலேஜுக்குப் போய் வந்துகொண் டிருந்தேன். எங்கள் குடித்தனம் சென்னையில் நிலைத்ததும், எங்களுடன் வந்து கொஞ்ச நாள் இருந்துவிட்டுப் போகவேண்டுமென்று லின்னிக்குப் பல கடிதங்கள் எழுதினேன். என்னென்னமோ சாக்குப் போக்குகள் சொல்லி வர முடியவில்லை என்று எழுதினாள். அவளே நேரில் வரும்பொழுது எல்லாவற்றையும் சொல்லலாம் என்று, அப்பொழுதும் ராமு தேசாந்திரம் சென்றதன் காரணத்தை லின்னிக்குத் தெரிவிக்கவே

இல்லே. அவள் வர முடியவில்லை என்று எழுதிய பிறகு நானே அங்கே போவதென்று நிச்சயித்தேன். ஆனல், அந்தத் தடவை விடுமுறையில் மோகனுக்கு உடம்புக்கு வந்துவிட்டதால் போக முடியவில்லே. மோகனின் உடல் நிலேயினுல் என் வாழ்க்கையே மாறுபாடடைந்தது. அவன் உடம்பைக் கவனித்து வைத்தியம் செய்ய வந்து கொண்டிருந்த டாக்டர் அருணுதேவி கன்னட நாட்டுப் பெண். மோகனின் ஜுரம் சௌக்கியமாவதற்குள் எங்களிருவரிடையும் நட்பு முற்றிவிட்டது. கடைசியில் அவள் சொற்படிக்கு எப். ஏ. முடிந்ததும் மெடிகல் பரீக்ஷைக்குப் போகவேண்டுமென்று முடிவு செய்து கொண்டேன். நான் எம். பி. பி. எஸ். பரீட்சை பாஸ் செய்து கரை ஏற வருஷம் ஏழு கழிந்துவிட்டன. அந்த ஏழு வருஷங்களும் லின்னிக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தாலும் அவளே நேரில் காணச் சாத்தியப்படவில்லே. அவளும் எங்கள் வீட்டிற்கு ஒரு முறை கூட வரவில்லே. அவள் எழுதும் கடிதங்களிலிருந்து விவாகம் செய்து கொள்ளவே போகிறதில்லே என்று எனக்குப் புலப் பட்டது. அப்படிச் செய்வதற்கு நான்தான் காரண மானேன் என்பது மாத்திரம் இன்னும் என் மனத்தில் உறுத்திக் கொண்டிருக்கிறது.

பரீட்சை எல்லாம் முடிந்து ஓய்வு கிடைத்ததும் அவளுடைய ஊருக்குக் கிளம்பினேன். அதே இடம்; அதே வழி; அதே வீடு. ஆனல், அன்று போனதற்கும் இந்தத் தடவை போவதற்கும் எவ்வளவு வித்தியாசம்! அப்பொழுதைய லின்னிக்கும் இப்பொழுது இருக்கும் லின்னிக்கும் எத்தனே வித்தியாசம்? அப்படி ஆவதற்குக் காரணம் நான்தானே! இந்த ஏழு வருஷங்களில் லின்னியின் வாழ்க்கையில் எத்தனே மாறுதல்கள்! ராமுவை இனிக் காண்பது அசாத்தியம் என்பதை அவள்

அறிந்திருந்தாள். அவள் முகத்தில் அவனைச் சந்திக்கலாம் என்று மின்னிக்கொண் டிருந்த ஆசையின் இடத்தை அமைதி ஆட்கொண் டிருந்தது. அப்பொழுது சும்மா உட்கார்ந்துகொண்டு சிந்தித்துக்கொண் டிருந்த லின்னி இப்பொழுது ஏதாவது வேலைகளில் ஈடுபட்டு அவனை மறக்க முயன்றுகொண் டிருந்தாள். காரியங்கள் முடிந்து ஓய்வு நேரத்தில் கௌசல்யா நந்தனனின் கதைகளைப் படித்துக்கொண் டிருப்பாள். முன்பு நான் அவைகளைப் படிக்கும் பொழுது பித்துக்குள்ளி என்று சிரித்துக்கொண் டிருந்த லின்னிக்கு இப்பொழுது அவைகளின் மீது ஆவல் உண்டாகி இருந்தது. கேட்டால் கௌசல்யா நந்தனனின் கதைகளைப் படித்தால் ஒருவகையான அமைதி ஏற்படு கிறது. "சீதா, அலுப்பு உண்டான பொழுதெல்லாம் அவைகளைப் படித்தால் சமாதானம் ஏற்படுகிறது" என்பாள். உண்மையில் அவனுடைய புஸ்தகங்களில் அந்தச் சக்தி இருந்தது. புதிதாகப் பிரசுரமான அவ னுடைய 'வசந்த குஸுமங்கள்' என்ற புத்தகம் அந்தச் சிறந்த ஆசிரியனை வாசகர்களது நெஞ்சில் நிலை பெறச் செய்தது. ஊரி லிருந்து கிளம்பும்பொழுதே உறுதி செய்துகொண்டு வந்திருந்தேன். லின்னியிடம், ராமு வீட்டை விட்டுப் போனதற்கு நான்தான் காரண மென்று சொல்லியே விடவேண்டு மென்று. ஆனால், சொல்லிவிடுவதற்கு வேண்டிய தைரியம்! திரும்பி வருவதற்கு முதல் நாள் இரவு நிலவில் முற்றத்தில் ஒரு மூலையி லிருந்த மாமரத்தின் கீழே உட்கார்ந்திருந்த பொழுது அனைத்தையும் சொல்லிவிட்டு அவள் மன்னிப் பைக் கோரினேன்.

"நடந்து போனதைப் பற்றிச் சிந்தித்துப் பயன் என்ன? ஏன் மன்னிக்கச் சொல்கிறாய்? எனக்கு உன் மீது கோபம் இல்லை என்று உனக்குத் தெரியும். இனி

எப்பொழுதும் அந்த விஷயத்தைப்பற்றிப் பேசாதே'' என்று மிகுந்த சலிப்புடன் சொன்னாள் அவள்.

லின்னியிடம் சொல்லி அவளுடைய மன்னிப்பைக் கோரிய பிறகு பெரிய சுமையை இறக்கி வைத்தது போன்ற நிம்மதி ஏற்பட்டது. அவள் முகத்தைப் பார்த்துப் பேசத் தைரியம் பிறந்தது. மறு நாள் லின்னியும் என்னுடன் எங்கள் ஊருக்கு வர ஒப்புக் கொண்டாள்.

## 6

லின்னி எங்கள் வீட்டுக்கு வந்து எட்டு நாள்தான் ஆகியிருந்தது. டாக்டர் அருணா தேவிக்கு அவளை அறிமுகப்படுத்துவதற்காக அன்று அவளை அவர்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேன். நாங்கள் போனபொழுது அவள் மட்டும் உட்கார்ந்து, தையல் வேலை செய்துகொண் டிருந்தாள். லின்னியைப் பார்த்ததும் அவளுக்கு நிரம்பச் சந்தோஷம். அருணா தேவிக்குச் சங்கீதத்தில் நல்ல பரிச்சய முண்டு. சிறந்த ரசிகையும் கூட. இரு சங்கீதப் பிரியர்கள் சேர்ந்திருக்கும் பொழுது சங்கீத வாசனையே இல்லாத நான் அவர்களுடன் என்ன பேச முடியும்! ஒரு மூலையில் உட்கார்ந்து மேஜை மீதிருந்த கௌசல்யா நந்தனனின் புத்தக மொன்றை எடுத்துப் படிக்கலானேன். நான் அந்தப் புத்தகத்தை எடுத்ததைக் கண்டு ''சீதா, அண்ணாவும் கௌசல்யா நந்தனனும் காலை வண்டியில் வந்திருக்கிறார்கள். இப்பொழுது எங்கேயோ சுற்றிவிட்டு வரப்போயிருக்கிறார்கள். உனக்கு மிகவும் பிரியமான அந்த எழுத்தாளரை ஏழு மணி வரையில் இருந்தால் பார்க்கலாம்'' என்றாள். ஆதலால் அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி மிகவும் சந்தோஷமா யிருந்தது.

அவர்கள் எப்பொழுது திரும்பி வருவார்கள்? என்ற ஆர்வத்துடன் புத்தகத்தின் ஏடுகளைத் திருப்பிக்கொண்டிருந்தேன். அருணாதேவி வின்னியின் எதிரே சுருதிப் பெட்டியை வைத்துவிட்டுப் பாடச் சொன்னாள். வின்னி சுருதி போட்டுக்கொண்டு பாட ஆரம்பித்ததுமே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு வேறெல்லாவற்றையும் மறந்து கேட்க ஆரம்பித்தேன். அருணாதேவியோ மந்திரத்தில் கட்டுண்டவள் போல் வின்னியையே கண் கொட்டாமல் பார்த்த வண்ணம் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தாள். வின்னியின் குரலில் அவ்வளவு இனிமை; பாடும் பாட்டு அவ்வளவு பாவபூர்ணமானது—லைலா மஜ்னூனின் பிரேம கீதம் போல. வின்னியின் வாழ்க்கையை நன்ருக அறிந்திருந்த எனக்கு அவள் அந்த மதுரமான குரலில் அந்த மனோகரமான பாடலைப் பாடும்பொழுது கண்ணீர் தங்கு தடை இன்றிப் பிரவகிக்க ஆரம்பித்தது. அருணாதேவியும் பிரவகிக்கும் கண்ணீரின் உணர்வே இன்றி வின்னியின் முகத்தையே பார்த்தவண்ணம் சமைந்து உட்கார்ந்திருந்தாள்.

வின்னியின் பாட்டு முடிந்தது.

பாவபூர்ணமான அந்தச் சங்கீத உலகி லிருந்து நான் விழித்துக் கொண்டேன். அருணாதேவி வின்னியின் கையைப் பற்றி, "சீதையின் வாய் மூலம் நீங்கள் நன்ருகப் பாடுவீர்கள் என்று அறிந்திருந்தாலும் இவ்வளவு நன்ருகப் பாடுவீர்களென்று நான் கனவிலும் எண்ணவில்லை" என்ருள். வின்னி, "பாடி ரொம்ப நாளாயிற்று, பழக்கம் இல்லை" என்று சொல்லி எழுந்து நின்ருள். வின்னியின் சரள சுபாவம் அருணாதேவியை வசப்படுத்திவிட்டது.

வின்னியின் சங்கீதத்தால் பொழுதுபோனதே தெரியவில்லை. கடியாரத்தைப் பார்த்தால் மணி எழரை. கௌசல்யா நந்தனன் இன்னும் வரவில்லை. மறுநாள்

வருகிறோம் என்று புறப்பட்டோம். வெளித் தாழ்வாரத்திற்கு வந்ததும் அவர்க ளிருவரும் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. இருட்டி இருந்ததால் முகம் தெரியவில்லை. அருணா, "அண்ணா! வந்து எத்தனை நாழிகை ஆச்சு?" என்றாள். அவர், "ஒரு மணி முன்னாடியே வந்தோம். உள்ளே இருந்து பாட்டுக் கேட்டதால், உள்ளே போனால் அது நின்றுபோய், கேட்கும் பாக்கியம் கிட்டாதோ என்று இங்கேயே உட்கார்ந்து, கேட்டுக்கொண் டிருந்தோம்" என்றான். அவனிடம் "பாடினவர் இவர்" என்று சொல்லியவளாய் அருணாதேவி வின்னியின் பக்கம் திரும்பி, "இவன் எங்கண்ணா" என்றாள்.

"இவர்தான் கௌசல்யா நந்தனா?" என்றாள் வின்னி. அதற்குள்ளாகச் சேவகன் வாசல் தாழ்வாரத்தின் விளக்கைப் பொருத்தினான்.

நான் திடுக்கிட்டேன்! என்ன ஆச்சரியம்! கன்னட நாட்டின் அரும் பெரும் எழுத்தாளர் கௌசல்யா நந்தனன்தான் வின்னியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ராமு! அதே ராமு!

ஆச்சரியத்துடனும் ஆனந்தத்துடனும் வின்னி, "ராமூ!" என்றாள். நாங்கள் எல்லாம் இருக்கிறோம் என்பதையே மறந்து, ராமு அவள் கைகளைப் பற்றி, "என் வசந்தா" என்றான்.

✲

சுயமாகச் சிந்தனை செய்யாத மனிதன் அடிமை. அவன் தனக்கு மட்டும் துரோகியல்ல; மற்றவர்களுக்கும் துரோகம் செய்தவனாகிறான்.

மதமானது நண்பர்களுக்குப் பதிலாகச் சத்துருக்களைத்தான் சிருஷ்டிக்கிறது.

அறியாமைதான் துயரத்தின் தாய்.

— இங்கர்சால்


# பேறுமுன் காப்பு

பார்வதி

போன வாரம் சிநேகிதி கமலாவின் வீட்டில், அவள் தங்கைக்கு வளைக்காப்பு என்று அழைப்பு வந்தது. அம்மாவும், நானுமாகப் போயிருந்தோம். சோபாவைச் சுற்றிலும், புஷ்பத்தினால் அலங்கரித்து, வெகு அழகாகச் சிங்காரித்து இருந்தார்கள். அதில் அவளை உட்காரவைத்துப் பாடினார்கள். அவளால் வெகு நேரம் உட்கார முடியவில்லை என்று சீக்கிரமாகவே ஆரத்தி சுற்றி விட்டு எழுப்பி விட்டார்கள். அவள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டும், முகத்தைச் சுளுக்கிக் கொண்டும் இருந்தபடியால், அவளைக் கூர்ந்து கவனித்தேன். அதற்குள் அம்மா, "இது எத்தனை மாசம்?" என்று பெரியவர்களுக்கே உரிமையான சுவாதீனத்தோடு விசாரித்தாள். அதற்குக் கமலாவின் தாயார், "பேருக்கு ஐந்து. இன்னும் நாலு மாசம்கூட நிரம்பவில்லை. இப்பொழுதே ரொம்பவும் சிரமப்படுகிறாள். ஆகாரமே சாப்பிட முடியவில்லை. திணறுகிறாள். இரட்டையோ என்று தோன்றுகிறது" என்றாள்.

இந்த விஷயங்களில், அம்மாவிற்கு அநுபவம் அதிகம். அவள் சில இரட்டைப் பிரசவங்களைப் பார்த்தும் இருக்கிறாள். சாதாரணமாக, இரட்டைக்கு வயிற்றின் அளவும், மூச்சு வாங்குவதும், கொஞ்சம் அதிகமாகத் தான் இருக்கும். ஆனாலும், இவ்வளவு சீக்கிரத்திலேயே கஷ்டம் தெரியாது. ஆறுவது மாசம் முதல்தான் சிரமம் அதிகமாக இருக்கும். முதலில், மசக்கையும், வாந்தியும் அதிகமாக இருக்கலாமே ஒழிய, இந்த மாதிரியான திணற

லுக்கும், வயிறு இவ்வளவு பெரியதாக இருப்பதற்கும், காரணம் இருக்கவேண்டும் அல்லவா? மூன்று மாசம் பூர்த்தியான பிறகுதான், கர்ப்பம் மேல்வயிற்றுக்கு வருகிறது. ஆகையால், நான்காவது மாசத்திலேயே, வயிறு இவ்வளவு பெரியதாக இருப்பது தவறு என்று பட்டது அம்மாவிற்கு.



அம்மாவின் அபிப்பிராயத்தைக் கேட்டபின் கவலை கொண்ட கமலாவின் தாயார், அவளை மறுதினமே டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். டாக்டரும் பரீட்சை செய்துவிட்டு, "இது இரட்டையில் சிக்கல்கள். அதாவது, * 'காம்பிலிகேஷன்ஸ்' ஏற்பட்டிருக்கிறது. † 'எக்ஸ்ரே'

* Complications † X-ray

படம் எடுத்துப் பார்த்த பிறகே சிகிச்சை செய்ய வேண்டும்" என்றார். பிறகு படம் எடுத்துப் பார்த்ததில், "வயிற்றின் அளவு அதிகரித்துக் காண்பது கர்ப்பம் இரட்டையாக இருப்பதனால் மட்டும் அல்ல; கர்ப்பப் பை தண்ணீரால் நிரம்பி இருக்கிறது. இந்த அதிகத் தண்ணீரானது கருவை வளரவிடாமல் தடுப்பதும் அல்லாமல் தாயாருக்கும் மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும். இன்னும் நாட்கள் ஆக ஆகக் கஷ்டம் அதிகரிக்குமே தவிரக் கரு வளர இடமே கிடையாது. ஆகையால், இந்தக் கர்ப்பத்தை வளர விடுவது கெடுதலாகும். இதை உடனேயே எடுத்து விட வேண்டும். *'அபார்ட்' செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டார் டாக்டர்.

'அபார்ட்' செய்வது என்றால் கர்ப்பத்தை வளர விடாமல் எடுத்துவிடுவதுதான். இந்த வார்த்தைக்கே ஒரு தப்பான அர்த்தமும், இது ஒரு சுலபமான காரியம் என்றும் பலர் நம்புகிறார்கள். இயற்கையாகவே, கர்ப்பச் சிதைவு என்பது மிகவும் அபாயகரமானது. அப்படி ஏற்படக் கூடிய சின்னங்கள் இருந்தால் கர்ப்பிணியை மிகவும் ஜாக்கிரதையாகக் காத்து, அப்படி நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியத்தையும், முன்பே பல தடவை சொல்லியிருக்கிறது. இயற்கையாக உண்டாகும் சிதைவே கெடுதல் என்றால், தானாகச் சிதைக்க முற்படுவது எவ்வளவு கெடுதிகளை விளைவிக்கிறது என்பது யோசிக்கத் தகுந்த விஷயம். எனக்குத் தெரிந்து எவ்வளவோ பெயர்கள் ஏழைமையாலோ, அசட்டுத் தனமாகக் குழந்தை வேண்டாம் என்ற எண்ணத்தாலோ தூண்டப்பட்டு, சிதைவை உண்டு பண்ணப் பார்க்கிறார்கள். கருஞ்சீரகம், முதலிய நாட்டு மருந்துகளைச் சாப்பிடுவதைச் சகஜமானதாக எண்ணுகிறவர்கள் பலர். இதனால்,

* Abort

* ஹெமாரேஜ் எனப்படும் அசாத்திய ரத்தப் போக்கு ஏற்பட்டு, சிதைவு ஆகாமல் உள்ளேயே தங்கி, ஜன்னியும் கண்டு உயிருக்கே ஆபத்து வந்து தவிக்கும் ஸ்திரீகளை நாம் பார்த்திருக்கிறோம். அபாயகரமான கர்ப்பத்தை டாக்டரே பார்த்துச் சிதைப்பதை, தாங்களே செய்து கொள்ள யத்தனிக்கும் அசட்டுத் தனத்திற்கு ஒப்பிடக் கூடாது. அபார்ட் என்கிற பதம் ஒன்றாய் இருந்தாலும், வேறு வழியின்றி வைத்திய நிபுணர்கள் கையாளுவார்களே யன்றி, அது சுலபம் என்று கருதக் கூடாது. இயற்கைக்கு விரோதமாக நாமே எதுவும் செய்யக் கூடாது; தாயின் உயிரை வேறு எந்த வழியிலும் காப்பாற்ற முடியாது என்று ஏற்பட்டு அந்தச் சமயத்தில் அவசியம் செய்துதான் ஆகவேண்டுமென்று ஏற்பட்டால் ஒழிய, டாக்டர்கள் செய்யவே மாட்டார்கள். எப்பொழுதுமே, இரட்டை என்று சந்தேகம் தட்டினால், உடனே டாக்டரிடம் காட்டித் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இரட்டையிலும், சாதாரணமாக இருப்பவர்களைக் கூட ஆறு மாசம் பூர்த்தியானது முதற்கொண்டே டாக்டர் கண்பார்வையில் வைத்துக்கொள்ள வேண்டும். சாதாரணப் பிரசவமா யிருந்தாலுங்கூட ஏழு அல்லது எட்டு மாசத்திலேயே ஏற்பட்டுவிடலாம். இந்த இரட்டைப் பிரசவத்தில், கஷ்டமும், எக்கச்சக்கமான சிரோதயமும், கோளாறுகளும் விரைவில் ஏற்பட்டுவிடும். நல்ல டாக்டரின் உதவியும், மேல் கவனிப்பைப் பார்க்க நர்ஸின் உதவியும், நல்ல சுத்தமான வீடும், உள்ளவர்களே, சுலபமான பிரசவமா யிருந்தால் வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். சௌகரியக் குறைவானவர்கள் நர்ஸிங் ஹோமிலோ, ஆஸ்பத்திரியிலோ விடுவதுதான் நலம்.

* Haemorrhage

சாதாரணமாகச் சுகப்பிரசவம் என்று சொல்லப்படும் பிரசவத்தை வீட்டிலே வைத்துக் கொள்வதற்கு அநேக வசதிகள் தேவை. முன் காலத்தில், கிராமங்களில் வரட்டிச் சாம்பலை முறத்தில் வைத்து * பெட்பானுக்குப் பதிலாகவும், வரட்டியை வயிற்றின் மேல் வைத்துப் † பேடாகவும், வைத்துக் கொண்டே, பிரசவத்தை நடத்தி விடுவார்கள் என்பாள் பாட்டி. பல துறைகளிலும், அபிவிருத்தி அடைந்திருக்கும் இந் நாட்களில், இந்தச் சுகாதார விதிகளுக்கு மாறான பழைய வழக்கங்களைப் பின்பற்ற முடியுமா? தற்காலத்துக்கு ஏற்றாற்போல், சுகாதார விதிகளையும், ‡வருமுன் காப்பையும் ஒட்டியே வேலை செய்யவேண்டியது முக்கியம். ஆகையால், சாதாரணமான பிரசவங்களில் நாம் செய்யவேண்டியது என்ன என்பதை ஒவ்வொரு பெண்ணும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

பிரசவத்திற்கு உரிய காலம் நெருங்கிவிட்டது என்று காண்பிக்கும் குறிகள் : பிரசவத்திற்கு இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பே வயிறு தழைந்து, இறங்கி இருக்கும். உடம்பு லேசாகவும் சௌகரியமாயும் இருக்கும். மூச்சு விடமுடியாமல் திணறுவது, உட்கார முடியாமல் சிரமப்படுவது முதலான அறிகுறிகள் குறைந்து கொஞ்சம் சௌகரியமாக இருக்கும். ஆனால், நடக்கும்பொழுதும் குனிந்து நிமிரும்பொழுதும் கஷ்டம் அதிகரிக்கும். கடைசி வாரத்தில், உடம்பு இளைப்புத் தட்டி, கண் குழிவிழுவதும் முன் எச்சரிக்கை யாகும்.

உரிய காலம் வந்ததும் பிரசவ நோவு எடுக்கும். இது உரிய காலத்திற்கு முன்பு உண்டானால் பொய் நோவு எனப்படும். உண்மை நோவு என்பது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது.

* Bedpan † pad ‡ preventive

முதல் பாகம்: நிஜ நோவு, மணிப் பிரகாரம் விட்டு விட்டு வரும். முதலில், கொஞ்சமாகவும் பொறுக்கத் தக்கதாகவும் இருக்கும். நடு முதுகில், அதாவது இடுப்பின் மத்தியில் ஆரம்பமாகி நடு வயிறு வரையும், பிறகு துடை வரையும் பரவும். நாழி ஆக ஆகச் சீக்கிரமாகவும் பல மாகவும் வரும். வலியைத் தவிர வேறு விதமான அறி குறிகள் காணப்படா. இந்தப் பகுதியிலேயே, பனிக் குடம் உடைந்து அந்த நீர் வந்துவிட்டால், பிரசவம் கஷ்டமாக ஆகிவிடும். இந்தப் பகுதியில், அதாவது நோவு ஆரம்பித்த உடனேயே, தாங்கும்படியான நோவாக இருக்கும்பொழுதே பனிக்குடம் உடையக்கூடாது. அப்படி உடைந்துவிட்டுப் பின்னும் வலி அதிக மாகாமல் இருந்தால், உடனே டாக்டரைக் கூப்பிட வேண்டியது அவசியம். இம்மாதிரியான முதல் பகுதி நோவு பன்னிரண்டு மணி முதல் பதினெட்டு மணி வரை நீடிக்கலாம். இதற்குள்ளாகவே அதிகமாகவும் அடிக்கடி யும் அதாவது பத்து நிமிஷத்துக்கு ஒருமுறை வரவேண்டும். இப்படி இல்லாமல் நச்சு நோவாகவே நின்றுவிட்டால் ஏதோ கோளாறு ஏற்பட்டு இருக்கக்கூடும். உடனே, டாக்டரிடம் காண்பித்து நிலையை அறிந்துகொண்டால் மேலே வரக்கூடிய அபாயத்தைத் தடுக்கலாம்.

இரண்டாம் பாகம்: இதுதான் நாம் முக்கு நோவு என்று சொல்லும் பகுதி. இதன் ஆரம்பத்தில்தான் பனிக்குடம் உடைய வேண்டும். பிறகு, நோவும் அதிகரித்து முக்கவும் ஆரம்பிப்பார்கள். இந்தப் பகுதியின் கடைசியில் பலத்த நோவு ஏற்பட்டு சிரோதயம் என்று சொல்லப்படும் சமயம் வருகிறது. முதலில் தலையும், பின் முழுக் குழந்தையும் வெளி வந்து விடுகிறது. இந்த இரண்டாம் பகுதி, முதல் பிரசவத்திற்கு இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரையும், இரண்டாவது,

மூன்றாவது பிரசவங்களுக்கு இன்னும் சீக்கிரமாகவும் இருக்கும்.

மூன்றும் பாகம்: குழந்தை பிறந்த பிறகு ஒரு பத்து நிமிஷம் நோவு இல்லாமல் இருக்கும். பிறகு நோவு ஏற்பட்டு * ப்ளௌசண்டா பெலகெரிடா என்னும் நஞ்சு வெளிவரும். பிரசவமான பின் ஐந்து நிமிஷத்தி லிருந்து ஒரு மணி நேரத்திற்குள், நஞ்சு வந்துவிட வேண்டும். அப்படிவராமல் போனால் உடனே கவனித்து டாக்டரிடம் காண்பிக்க வேண்டும். நாமாக வயிற்றை நசுக்கியோ இழுத்தோ வெளிக்கொணர முயற்சி செய்யக் கூடாது. சிறு பகுதிகள் தங்கிவிடும்படி விடக் கூடாது. நஞ்சு தங்குவதால் ஜன்னி கண்டு விடும். ஆகவே, நஞ்சு முழு வடிவத்துடன் இருக்கிறதா என்பதை டாக்டரிடம் காண்பிக்க வேண்டும்.

கர்ப்பிணிக்கு நோவு ஆரம்பமான உடன், அது நிஜ நோவா, அல்லது † பால்ஸ் பெயின்ஸ் என்று சொல்லப் படும் பொய் நோவா என்று அறிந்துகொள்வது அவசியம். நிஜநோவாக இருந்தால் கீழ்க்கண்ட விதிகளை அநுசரித்து இருக்கும்:

(1) குறிப்பிட்ட மணி வித்தியாசத்தில், அதாவது அரை மணிக்கு ஒரு தரமோ, இருபது நிமிஷத்திற்கு ஒரு தரமோ விட்டு விட்டு வரும். ஐந்து அல்லது ஆறு நிமிஷம் இருந்து விட்டுப் பிறகு அரை மணிக்கு ஒன்றும் இல்லாமல் இருக்கும்.

(2) நோவு வரும்பொழுது, வயிறு இறுகிக் கெட்டியாக இருக்கும். வலி நின்றதும் வயிறு தளர்ந்து விடும்.

(3) சிலருக்கு இரத்தப்போக்கு ஏற்படுவதுண்டு. இந்த விதிகளுக்கு அடங்காத வலிக்கு பால்ஸ் பெயின்ஸ் என்று சொல்லுவது.

---

* Placenta † False Pains

(4) இந்தப் பொய் நோவு, உரிய நாள் ஆவதற்கு முன்பே வரும்.

(5) இதற்குக் காரணம், மலச்சிக்கலாகவோ, அஜீரண மாகவோ இருக்கலாம். இந்தச் சமயத்தில் பேதிக்கு மருந்து சாப்பிட்டு, மலச்சிக்கலை ஒழிக்க முடியாது. மாசம் ஆன பிறகு, அதிகமாகப் போகும்படியான பேதி மருந்து சாப்பிடுவதால், கர்ப்பப் பை தளர்ந்து நோவு ஏற்படும். குறை மாசத்தில் பிரசவமும் ஏற்பட்டுவிடும். மலச்சிக்கலைப் போக்க, இரவில் ஒரு *டீஸ்பூன் விளக்கெண்ணெய்யோ, அல்லது அரை அவுன்ஸ் †லிக்குவிட் பாரபின் எடுத்துக்கொள்வது நலம். ஏற்கனவே கர்ப்பச்சிதைவு ஏற்பட் டிருக்கிறவர்கள், பிறகு கர்ப்பிணி யாக இருக்கும் காலங்களில் பேதிக்காக ஒரு மருந்தும் சாப்பிடவே கூடாது.

(3) இந்த வலி, இடுப்பில் அதிகம் நோவாமல், வயிற்றிலேயேதான் இருக்கும்.

(4) மணிப் பிரகாரம், விட்டு விட்டு வராமல், நச்சு நச்சென்று தொடர்ந்தாற்போல் இருக்கும்.

(5) வயிறு, வலி வரும்பொழுது இறுகிக் கல்போல் ஆகாது.

சாதாரணமாக, இந்தப் பொய் நோவு, ஒரு சூடான எனிமா எடுத்துக் கொள்வதால் நின்றுவிடும்.

‡ ஸாலேன் எனிமாக் கொடுக்கும் விதம்: கொதித்து ஆறின தண்ணீரைக் கைபொறுக்கும் சூட்டில் ஒருபடி எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் ஒரு § டேபிள் ஸ்பூன் பொடி உப்பைப் போட்டுக் கலக்கி, எனிமாக் கொடுக்கும் பீங்கானில் ஊற்றிக் கொடுக்க வேண்டும். எனிமாக் கொடுக்கத் தெரியாதவர்கள், நர்ஸைக் கூப்பிட்டுக் கொடுக்கச் சொல்லலாம்.

---

* Tea Spoon † Liquid paraffin ‡ Saline $ Table Spoon

மலச்சிக்கலினலோ, அஜீரணத்தினலோ ஏற்பட்ட பொய் நோவாக இருந்தால், இந்த எனிமாக் கொடுத்த வுடனே நின்று விடும். அப்படி நிற்காமல், வலி அதிகரித் தால், இது நிஜ நோவாகவேதான் இருக்கும். உரிய காலம் ஆகாமலே இப்படி நேர்ந்துவிட்டால், குறைப் பிரவசமாக முடிந்து விடக்கூடும். ஆகையால், உடனே டாக்டரைக் கூப்பிட்டுக் காட்ட வேண்டும். இவர்களை வண்டியில் அழைத்துச் செல்லக் கூடாது. முடிந்தவர்கள் டாக்டரை வீட்டிற்கே அழைத்து வந்து காட்டுவது நலம். இந்தச் சமயத்தில் அதிர்ச்சி ஏற்படாமல், படுக்கையி லேயே வைத்து மருந்து கொடுப்பதால், குறைப் பிரச வத்தைத் தவிர்க்க முடியும். அப்படிச் செய்ய வசதி இல்லாதவர்கள், ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸ் வண்டியில்தான், கர்ப்பிணியை எடுத்துச் செல்ல வேண்டும். மாசம் ஆகா மல் வரும் வலியை வளரவிடாமல் அடக்கப் பூரண ஓய்வும், நாள் முழுவதும் படுக்கையிலேயே இருப்பதும் மிக்க அவசியம்.

✲

ஆத்மாவின் சட்ட ரீதியான பாதுகாவலன் சந்தோஷம். அந்தச் சந்தோஷந்தான் ஒருவனுடைய ஆஸ்தி.

அடுப்பங்கரையில் நம்பிக்கைக் கொண்டவன்நான். வீட்டின் ஜனநாயக வாழ்விலே நம்பிக்கை யுடையவன் நான். குடும்பத்தின் குடியரசு வாழ்விலே நம்பிக்கை யுடையவன் நான். சுதந்தரம், சமத்துவம், அன்பு ஆகிய வற்றில் நம்பிக்கை யுடையவன் நான்.

அறியாமையைத் தவிர்த்து வேறோர் அடிமைத் தனம் இல்லை. சுதந்தரம் என்பது அறிவின் குழந்தை.

— இங்கர்சால்




'தீபிகா'

**கோதுமை முத்துச் சாரை**

மைசூர் பக்கத்தில் முள்ளுத் தேன்குழலை 'முத்துச் சாரை' என்று சொல்லுவார்கள். கோதுமையில் செய்துபார். மிகவும் நன்றாக இருக்கிறது. இரண்டு ஆழாக்குக் கோதுமையை உமி போகும்படி நன்றாகக் குத்தி எடுத்து, நெய் விடாமல் வாணலியில் போட்டு, கொஞ்சம் வறுத்து எடுக்க வேண்டும். பிறகு, கடையில் விற்கும் பொட்டுக் கடலையில் ஓர் ஆழாக்கை வறுத்த கோதுமையுடன் சேர்த்து யந்திரத்தில் மாவாக அரைக்க வேண்டும். யந்திரத்தில் அரைத்த மாவு எப்பொழுதும் வறுத்த மாவு போல் சூடாக இருக்கும். அதனால், சூடு ஆறுகிறவரையில் வைத்திருந்து பிறகு திட்டமான உப்பும், ஒரு மேஜைக் கரண்டி நெய்யையாவது, அல்லது சிறு எலுமிச்சம் பழ அளவு வெண்ணெய்யையாவது சேர்த்து, கொஞ்சமாக ஜலத்தைத் தெளித்து மாவைப் பிசைந்துகொள்ள வேண்டும். ஒரு தேயிலைக் கரண்டிச் சீரகமும் அதில் சேர்க்க வேண்டும்.

பிறகு, வாணலியில் காய்ந்த பின் தேங்காய் எண்ணெய்யையாவது வனஸ்பதியையாவது சேர்த்துப் பிசைந்து முள்ளுத் தேன்குழல் அச்சில் மாவைப் பிழிய

வேண்டும். பொன் நிறமாக வெந்தவுடன் எடுத்துவிட வேண்டும். தேங்காய் எண்ணெய்தான் இப்பொழுது அகப்படுவதில்லை என்கிருயா? என்ன செய்கிறது? இந்தக் காலத்தில் எந்தச் சாமானுக்கும் கஷ்டந்தான்; அதனல், நாம் பக்ஷணம் செய்யாமல் இருக்க முடிகிறதா, என்ன? நல்லெண்ணெய்யைத் தவிரப் பாக்கி எந்த எண்ணெய்யானலும் சமயத்திற்குத் தகுந்தபடி உபயோகப் படுத்து. இந்தப்பக்ஷணம் மடியாக உள்ளவர்களுக்குச் சரிப்படாது. ஏனெனில், கடையில் விற்கும் பொட்டுக் கடலையை அவர்கள் சாப்பிடுவார்களா! சாப்பிட மாட்டார்கள். என் பிள்ளை கண்ணன் பள்ளிக்கூடத்தி லிருந்து வரும்பொழுது வாசலிலேயே, "இன்று என்ன டிபன்?" என்று கேட்கிருன். மடியாக இருக்கிறவர்கள் சாப்பிடா விட்டாலும் குழந்தைகளுக்காவது செய்து கொடுக்கலாம் அல்லவா?

கோவா ரச பூரி

ஓர் ஆழாக்கு மைதா மாவில் ஒரு மேஜைக் கரண்டி நெய்யும், கொஞ்சம் உப்பும் போட்டுப் பூரி மாவு மாதிரிப் பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். பால்கோவா சுமார் ஐந்து பலம் வேண்டும். ஒரு பலம் திராக்ஷைப் பழத்தைக் கொஞ்சம் நெய் விட்டு வறுத்துக் கொண்டு அந்த வாணலியிலேயே கோவாவைப் போட்டு இரண்டு பலம் சர்க்கரையையும் கொஞ்சம் ஏலப் பொடியையும் போட்டுக் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல பூரா அகப்படா விட்டால் அஸ்காச் சர்க்கரையை இடித்து உபயோகப் படுத்தலாம். பிறகு, கலந்து வைத்திருக்கும் மைதா மாவில் சிறு அப்பளம் செய்து, அதன் நடுவில் கோவாவைக் கொஞ்சம் வைத்து, அப்பளத்தின் நான்கு ஓரங்களும் நடுவில் வரும்படி மடித்து, மடிப்பின் மேல் ஒரு லவங்கத்தைச் செருக வேண்டும். இரண்டு ஆழாக்குச்

சர்க்கரையை இளம் பாகாகக் காச்சி வைத்துக்கொண்டு, பிறகு மடித்து வைத்துக்கொண் டிருக்கும் ரச பூரியை நெய்யிலாவது வனஸ்பதியிலாவது பொறித்து எடுத்துச் சர்க்கரைப் பாகில் போடவும். அடுப்பை நிழல் மாதிரி எரிய விட்டுப் பூரியை நன்ருகப் பொரித்து எடுக்கவும். நெய் அதிகப் புகை வரும்படி காய்ந்து விட்டால் உள்ளே. வேகாமலும் மேலே தீய்ந்தும் போய்விடும். அதோடு அப்பளத்தையும் நடுவில் கொஞ்சம் பருமனுகவும் ஓரங்கள் கொஞ்சம் மெல்லியதாகவும் வரும்படி இட வேண்டும். நான்கு ஓரங்கள் ஒன்ருகச் சேருவதால் அவ்விடம் பரும னுகி மாவு வேகாமல் நின்றுவிடும். ஆதலால், அப்பளத் தைக் கவனித்து இடவேண்டும். ரசப் பூரி சர்க்கரைப் பாகில் ஐந்து நிமிஷம் ஊறினதும், வாய் அகலமான பாத்திரத்திலோ அல்லது தாம்பாளத்திலோ வைத்துவிட வேண்டும். கல்யாண மாசங்களும் வந்துவிட்டன. அழ காகப் பூரியைச் செய்து தட்டில் வரிசைக்கு ஏன் வைக் கக் கூடாது?

பிரண்டை வடாம்

பிரண்டை வடாம் செய்தால் உடம்பிற்கு மிகவும் நல்லது. புதிதாகப் பல் முளைத்துச் சாப்பிட அலையும் குழந்தைகளுக்குக் கூடக் கொடுக்கலாம். உடம்பிற்கு ஒன்றும் செய்யாது. அரைப்படிக் கோதுமையை முதல் நாள் இரவே தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். மறு நாள் கோதுமையை நன்ருக ஜலம் விட்டு அரைத்துப் பால் பிழிய வேண்டும். கோதுமைச் சக்கையில் சத்துப் போகாமல் நன்ருக எடுத்துக் கொண்டபின் அப்படியே வைத்துவிட வேண்டும்.

மாவு அரைத்து வைத்த மறுநாள் காலையில் இளம் பிரண்டையாக வாங்கி நறுக்கி, நறுக்கின துளைச் சுமார்

கால்படி எடுத்து உரலில் அரைத்துச் சாற்றை எடுத்துக் கொள். அரைத்து வைத்திருக்கும் கோதுமை மாவில் ஜலம் அதிகமாக இருந்தால் மேலாக எடுத்து விடலாம். ஈயம் உள்ள பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் பிரண்டைச் சாற்றை விட்டுக் கொஞ்சம் காய்ந்ததும் கோதுமை மாவில் திட்டமான உப்பைச் சேர்த்துக் கை படாமல் கிளறவும். மாவு வேகுவதற்கு வேண்டிய ஜலத்தை விடக் கொஞ்சம் அதிகமாகவே ஜலம் இருக்கலாம். கோதுமைக் கூழ் கெட்டியாக இராமல் கொஞ்சம் தளர் வாக இருந்தால் வடாம் நன்ருக இருக்கும்.

பிறகு ஓமம் ஒரு பலம் போட்டுச் சிறு கரண்டியினுல் எடுத்துத் தட்டையாக வரும்படி துணியிலாவது ஓலைத் தட்டியிலாவது இட வேண்டும்.

✻

உங்களுக்கென்று என்ன உரிமை கொண்டாடு கிறீர்களோ, அதே உரிமையை எல்லா மனிதர் களுக்கும் வழங்குங்கள். இயற்கையின் சுபாவங்கள் உள்ளே புகுமாறு உங்கள் மனத்தைத் திறந்து வையுங்கள். புதிய எண்ணங்களுக்கு முகமன் கூறி வரவேற்புக் கொடுங்கள். அப்பொழுதுதான் நாம் முன்னேற முடியும்.

— இங்கர்சால்




மீனாக்ஷி ராஜகோபாலன்

“அம்மா, அம்மா!” என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே வந்த ஜானகி அவளுடைய அம்மா ஊஞ்சலில் படுத்திருப்பதைப் பார்த்து, பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள். தாயின் முகத்திற்கு அருகில் தன் முகத்தை வைத்துக்கொண்டு ஏதோ கொஞ்சிக் கேட்கும் தன் பெண்ணைப் பார்த்துச் சாவித்திரி, “என்ன ஜானு! வாசல்லே யாரோடேயோ பேசிண்டிருந்தாயே, யாரம்மா அது?” என்றாள். “அது வந்தும்மா பக்கத்தாத்து விமலாவும், இவளோடே புதுச்சா வந்திருக்கா பாரு இன்ஜினீயர், அவாத்து கங்காவும் வந்திருந்தாம்மா. அந்தப் பொண்ணு ஒரு பச்சைப் பாவாடை கட்டிண்டிருந்தாம்மா, அது ரொம்ப நன்னாருக்கு. நவராத்திரிக்கு தெச்சாளாம்மா. அதுமாதிரி எனக்கும் தெச்சுதராயாம்மா?” என்றாள் குழந்தை.

“உனக்குத்தான் பீரோ நிறையப் பாவாடை இருக்கே இன்னும் பட்டுப் பாவாடை எதுக்கு?”

“இல்லேம்மா, அது கதர் சில்காம். தொட்டா வழ வழான்னு இருக்கும்மா. அந்தப் பொண்ணு சொன்னாம்மா. இந்த வருஷம் சுயராஜ்யம் வந்துடுத்து, இனிமேலே நம்பள்ளாம் கதர்தான் கட்டணும், எங்காத்துலே எல்லாரும் கதர்தான் வாங்கிண்டோம்னு. நேக்கும் அதுமாதிரிக் கதரே வாங்கிக் கொடும்மா. நேக்குப் பச்சைப் பாவாடையே இல்லேயேம்மா. வாங்கித் தரயாம்மா!

சொல்லு அம்மா. பேசாதிருக்கியே" என்று மூச்சு விடாமல் பேசினாள் குழந்தை.

"ஏன் சும்மா தொந்தரவு செய்யரே? மத்தியானத்திலே செத்தே தூங்கவிட மாட்டேங்கராயே" என்று அதட்டியவண்ணம் திரும்பிப் படுத்துக்கொண்டாள் அவள்.




அதைப் பார்த்த ஜானு வருத்தத்துடன் மறுபடியும் அம்மாவைப் பார்த்து, "இந்தத் தீபாவளிக்கு அதுமாதிரிப் பாவாடை வாங்கித் தரேன்னு சொன்னாத்தான் நான் ராத்திரிச் சாப்பிடுவேன், இல்லாட்டா......" என்றாள்.

சாவித்திரிக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. குழந்தையின் நச்சுப் பொறுக்க முடியாமல் அதிகக் கோபத்துடன் குழந்தையைப் பிடித்துத் தள்ளியபடியே, “இந்த வருஷம் உனக்குப் பாவாடையே வாங்கல்லே, போ!” என்று கோபித்துக்கொண்டாள்.

ஜானுவின் கண்களில் நீர் நிறைந்தது. தாய் தன்னைத் தள்ளியதைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை. 'உனக்கு இந்த வருஷம் பாவாடை இல்லை' என்ற சொல் அவளுக்கு ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் கொடுத்தது. தானும் தீபாவளியின்போது அம்மாதிரி வர்ணப் பாவாடை கட்டிக்கொண்டு கங்காவிடம் தனக்கும் தைத்திருப்பதைப் பற்றிப் பெருமையாய்ச் சொல்லிக்கொள்ளலாம் என்ற எண்ணம் வீணாய்ப் போய்விட்டதே என்று நினைத்த குழந்தை உள்ளம் விம்மிற்று. ஜானு அழுதுவிட்டாள். அழுதுகொண்டே சோபாவில் போய்ப் படுத்துக் கொண்டவள் தூங்கிவிட்டாள். தூக்கத்தில் அழுகையால் உண்டான விக்கலுக்கிடையே 'அம்மா பச்சைப் பாவாடை ......' என்று பிதற்றினாள்.

குழந்தையை வெருட்டிய பிறகு சாவித்திரிக்கு நிம்மதியாகத் தூக்கம் வரவில்லை. ஏதோ கண்ணை மூடிய படியே படுத்திருந்தாள். ஜானு உளறியதைக் கேட்ட சாவித்திரி திரும்பி அவளைப் பார்த்தாள். குழந்தை அயர்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள். அடிக்கடி விம்மல் மாத்திரம் கேட்டது. அதைக் கவனித்த சாவித்திரி 'ஐயோ, குழந்தையை ஏன் வைதோம்?' என்று ஏங்கினாள். அவளுக்குப் பழைய சம்பவங்கள் நினைவிற்கு வந்தன.

பதினாறு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம். நாராயணசாமி அய்யர் ஓர் ஏழை வக்கீல் குமாஸ்தா. அதுவும் சாதாரண வரும்படி உள்ளவர். திருச்சியில் ஒரு ஸ்டோரில் குடியிருந்தார். வருவாய் சிறியதேயாயினும்

பார்ப்பதற்குக் கண்ணியமாய்க் குடித்தனம் செய்பவர். உள்புகுந்து பார்த்தால் அவருடைய ஜீவனம் மிகவும்



கஷ்டமானது என்று தெரியவரும். அவரும் எந்த விதத்திலாவது பணம் சம்பாதிக்கலாம் என்று பார்த்தாலும் அவருடைய துரதிர்ஷ்டம் ஒன்றும் கிடைக்காது. சாண்

ஏறினல் முழம் இறங்கும் என்பார்களே அது அவருடைய விஷயத்தில் சரியாய் இருந்தது.

அவர் வருத்தத்தை அறிந்துதானே என்னமோ கடவுள் அவருக்குக் குழந்தைகள் அதிகம் கொடுக்கவில்லை. சாவித்திரி, சரஸ்வதி என்ற இரண்டே பெண்கள்தாம். அப்போது சாவித்திரிக்கு வயசு பத்தும், சரஸ்வதிக்கு வயசு எட்டும் நடந்துகொண் டிருந்தன.

தீபாவளிக்கு முந்தின வாரம். "அம்மா எல்லாத்திலேயும் புதுப் பாவாடை சட்டை எல்லாம் தைத்து விட்டாளே, நம்மாத்திலே ஏம்மா இன்னும் அப்பா ஒண்ணும் வாங்கல்லே?" என்று குழந்தை கேட்கும். ஒரு பதிலும் சொல்லாமல் இருக்கும் தன் தாயைப் பார்த்து, மறுபடியும் "அம்மா வக்கீல் மாமாவாத்துலே சகுந்தலாக்கு நிறைய சரிகை போட்டுப் பச்சைப்பாவாடை தச்சிருக்காளாம்மா. அக்காகூட கூட்டிண்டுபோய்க் காட்டிணும்மா. நேக்கும் அதுமாதிரி வாங்கித்தாம்மா" என்று சொல்லி, தன் தாய் என்ன சொல்லுவாளோ என்று பயத்துடன் தன் தாயின் முகத்தையே பார்த்துக்கொண்டு இருந்தாள் சரசு.

தன் குழந்தை மிக ஆவலாய்க் கேட்கும் பாவாடையைத் தனக்கு வாக்கிக் கொடுக்கச் சக்தி இல்லையே, குழந்தை செல்வத்தைக் கொடுத்த அந்தக் கடவுள், பொருள் செல்வத்தைக் கொடுக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக்கொண்டே இருந்த அவள், தன் பெரிய பெண்ணைப் பார்த்து, "ஏன் சாவித்திரி, கொழந்தைக்கு ஏன் கலகமெடுத்தரே" என்று கடிந்தாள். சரசாவைப் பார்த்து "அப்பா வரட்டும், உனக்குப் பாவாடை வாங்கித் தரச் சொல்றேன்" என்று சமாதானம் சொல்லிவிட்டு, தன் வேலையைப் பார்க்கப் போய்விட்டாள்.

சாவித்திரியும், சரசாவும் விளையாடிக்கொண் டிருந்தார்கள். சரசா சாவித்திரியிடம், "அக்கா

சகுந்தலாவோட பாவாடையை நான் கட்டிண்டா எப்படி இருக்கும்.? நறையச் சரிகை போட்டிருக்கு" என்று ஆவலாய்க் கேட்டாள். அதற்குச் சாவித்திரி, "சரசா, நான் போய்ச் சகுந்தலாவைக் கேட்டுப் பாவாடையை வாங்கிண்டு வரட்டுமா?'' என்ருள்.

"அய்யோ! அம்மா பார்த்தா நம்மைத் திட்டுவா. வேண்டாம். நீ அவாத்துக்கு வா, பார்த்துட்டு உடனே வந்தூடலாம்" என்று சரசா சொல்ல, இருவரும் அடுத்த தெருவில் இருக்கும் வக்கீல் வரதராஜய்யருடைய வீட்டுக்குப் போனர்கள்.

இவர்களைப் பார்த்ததும் சகுந்தலா ஓடோடியும் வந்து "சரசா! என்னோடே பாவாடையைப் பாத்தாயோ" என்று வார்த்தையை முடிப்பதற்குள் சரசா, "அதுக்குத் தாண்டி வந்தோம்'' எனப் பதில் அளித்தாள். சகுந்தலா, பக்கத்து அறையில் இருக்கும் பீரோவைத் திறந்தாள். எங்கே தன் தாய் தன்னைக் கவனிக்கிருளோ என்று ஒரு முறை சுற்றிலும் பார்த்தாள். ஒருவரையும் காணோம். மெதுவாய்ப் பாவாடையை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்தாள். பெருமையாய் "நன்ஞ இருக்கோடி?" என்ருள். அந்தப் பாவாடையைப் பார்த்த சரசா, மயங்கிவிட்டாள், அந்த அழகான பச்சையில் சிவப்புக் கரையும் அதில் தங்கச் சரிகையும் நடுவில் சரிகையிலேயே கொட்டடியும் போட்ட அந்த அழகான பாவாடையையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண் டிருந்த சரசாவைப் பார்த்து, சகுந்தலா "அடி சரசு, உனக்கு இந்தப் பாவாடையைக் கட்டினு எப்படி இருக்கும்? ஏண்டி பேசாமே இருக்கே?" என்ருள். அதுவரை அவள் மனத்தில் அடங்கி இருந்த ஆசை வெளிவர, "சகுந்தலா, அந்தப் பாவாடையை குடுக்கறையா? எங்கம்மாவுக்கு கொண்டுபோய் காமிச்சுட்டு வறேனே'' என்ருள் சரசா. உடனே சகுந்தலா

பாவாடையைச் சரசாவிடம் கொடுத்து, "சுருக்கா கொண்டந்துடு. எங்கம்மா பாத்தா, அடிப்பா'' என்றாள்.

பாவாடையை எடுத்துக்கொண்டு இரு குழந்தைகளும் தங்கள் வீட்டுக்கு வந்தார்கள். சரசா தன் கையில் பாவாடையுடன் குதித்துக்கொண்டு தன் அம்மாவிடம் கொண்டுபோய்க் காட்டினாள். அதைப் பார்த்த அவள் "அய்யோ! அவாத்துப் பாவாடையை யார் வாங்கிண்டு வந்தா?'' என்று ஒரு விதமான பயத்துடன், சரசாவின் கையில் இருக்கும் பாவாடையை வாங்கப் போனாள்.

அதற்குள் சாவித்திரி, "அம்மா! நான்தான் சரசாவை அவாத்துக்குக் கூட்டிண்டுபோனேன். சகுந்தலா எடுத்துண்டு வந்து காண்பிச்சா. நோக்குக் காட்டலான்னு எடுத்துண்டு வந்தேம்மா. ஏம்மா அப்படிப் பயப்படரே?''

"அப்பா வந்தா என்ன சொல்லுவாம்மா?'' என்றாள்.

"நீதான் பெரியவள், அவ வாங்கிண்டு வந்தாக்கூட நீ வேண்டாம் என்று சொல்ல வேண்டாமா? அவாத்து மாமிக்குத் தெரிந்தால் என்ன சொல்லுவா. சரசா குழந்தைதானே. அப்பா வரத்துக்குள்ளே அவாத்துலே கொண்டு போய்க் கொடுத்துட்டு வந்துடு'' என்று சொல்லிச் சரசாவின் கையில் இருக்கும் பாவாடையை வாங்கிச் சாவித்திரியிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிக்கொண்டு பயந்த முகத்துடன் நிற்கும் சாசாவைப் பார்த்தபடியே சாவித்திரி அவ்விடத்தை விட்டு அகன்றாள். அவள் வாசல் வரை போயிருப்பாள். அவள் தந்தை கண்கள் சிவக்க, உதடு துடிக்க வெகு கோபமாய் வருவதைப் பார்த்தாள். அவரைப் பார்த்த சாவித்திரி பயத்துடன் நடுங்கிக்கொண்டே நின்று விட்டாள். அவள் கையில் பாவாடையுடன் நிற்பதைப் பார்த்த அவர், "இது வக்கீலாத்துப் பாவாடை தானே?'' என்று அதட்டியபடி கேட்டார். நடுங்கிக் கொண்டே,

"ஆம் அப்பா'' என்று சொல்லிவிட்டு வக்கீல் வீட்டுக்குப் போய்விட்டாள். உள்ளே நுழைந்த நாராயணசாமி அய்யர் கண்முன் சரசாதான் தென்பட்டாள். அப்போது அவருக்கு இருந்த கோபத்தில் என்ன செய் கிறோம் என்று தெரியாமல் சரசாவைக் கன்னத்திலும் முதுகிலும் நன்றாய் அடித்துவிட்டார். "அய்யோ! எனக் குப் பாவாடை வேண்டாம்பா '' என்று கதறினாள்.

அவள் அழுவதையும், அவள் தகப்பனார் அடிப்பதை யும் பார்த்த அவள் தாய் ''அய்யோ! குழந்தையை ஏன் இப்படி அடிக்கறேள். அவ என்ன செய்வாள். எல்லாம் அந்தச் சாவித்திரியால் வந்ததுதான்'' என்று சொல்லியபடியே, சுருண்டுபோய்ப் படுத்துக்கொண் டிருந்த சரசாவின் பக்கம் போய் உட்கார்ந்தாள்.

நாராயணசாமி அய்யர், "போதும், உன் பெண் களுடைய லக்ஷணம். பெரிய வீட்டுப் பெண், அவள் கொடுத்தால் இவள் வாங்கிக்கொண்டு வருவதா?...அவாத் தில் அந்த வீட்டு அம்மாள் என்னவெல்லாம் சொல்ரு தெரியுமா? நான் அவ்வீட்டிற்குள் போகவும் இன்னும் அதிகமாகக் கத்தரு. என் மானம் போறது'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

தீபாளிக்கு முதல் நாள் சரசா நினைவே இல்லாமல் படுக்கையில் படுத்திருக்கிறாள். அவளுடைய தாயும் தந்தையும் கவலை பாய்ந்த முகத்துடன் பக்கத்தில் உட் கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். அடிக்கடி '' அப்பா, பாவாடை வேண்டாம்'' என்று பிதற்றிக்கொண்டே இருந்தாள். ''இப்படியும் குழந்தையை அடிக்கலாமா? அடி தாங்காமல் ஜுரம் வந்துவிட்டதே. என் வயிற்றில் பாலை வார்க்க வேண்டுமே'' என்று தெய்வங்களை வேண்டிக் கொண்டாள் சாவித்திரி. நாராயணசாமி தான் அடித்த அடி இப்படி விபரீதமாய் போகும் என்று

நினைக்கவில்லை. அந்த ஏழைத் தாய் தந்தையர்களின் வருத்தத்தை அறிந்தோ, அறியாமலோ, பகவான் சரசாவைத் தன் பொன் அடியில் சேர்த்துக்கொண்டுவிட்டார்.


சரசா மறைந்த மறுநாள் தீபாவளி. அன்று நாராயணசாமி கண்ணீரும் கம்பலையுமாய்ச் சரசாவை நினைத்துக்கொண்டு அழுதுகொண்டு உட்கார்ந்து இருந்தார். அப்போது தபால்காரன் "சார், உங்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் இன்ஷ்யூர், லாட்டரி ஆபீஸிலிருந்து வந்திருக்கு" என்ற குரல் கேட்டது. தம் காதுகளையே நம்பாமல், வெளியில் வந்து பார்த்து, நிஜம்தான் என்று தெரிந்துகொண்டார் நாராயணசாமி.

ஒரு புறம் சந்தோஷத்துடனும், ஒரு புறம் துக்கத்துடனும் பணத்தை வாங்கி வைத்தார். "ஆஹா! இந்தப் பணம் போன-வாரம் வந்திருக்கக் கூடாதா? குழந்தைக்குத் திருப்தியாய்ப் பாவாடை வாங்கிக் கொடுத்திருக்கலாமே" என்று அவரையும் மீறி அழுதுவிட்டார்.

இவைகளெல்லாம் சாவித்திரிக்குச் சில நிமிஷங்களில் ஒன்றன்பின் ஒன்ருய்த் திரைப்படம்போல் மனக் கண்முன் ஓடிக்கொண்டிருந்தது. அவளுடைய மனம் என்னமோ செய்தது. மெதுவாய் எழுந்து ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டாள். அப்பொழுது குழந்தை ஜானு தூக்கத்தில் விம்முவதைப் பார்த்ததும், "ஜானு, ஜானு எழுந்திரு, கடைக்குப் போலாம். உனக்குப் பச்சைப் பாவாடை வாங்கித் தரேன்" என்று வாஞ்சை ததும்பும் குரலில் தன் குழந்தையை எழுப்பினுள்.

திடுக்கிட்டு எழுந்த ஜானு, "அம்மா, கடைக்குப் போலாமா? சுருக்கத் தலை பின்னி விடு. அப்பா வந்ததும் போலாம்" என்ருள். சாவித்திரியின் முகம் ஒரு கணம் மலர்ந்தது.


✲





ச. மீனாம்பிகாதேவி

கூடையில் பணங்கொடுத்து வாங்கும் நாய்க்குட்டி எவ்வளவு அழகா யிருந்தாலும் உங்கள் கையினால் தைப்பதற்கு ஈடாகாது அது.

18 அங்குல அகலமும் 22½ அங்குல நீளமும் உள்ள காகிதத்தில் 1½ அங்குல சமசதுரங்களாகக் கட்டம் போட்டுக் கொள்ளுங்கள். அந்தக் கட்டங்களின் உதவியால் படங்களில் காட்டியிருக்கிறபடி நாய்க்குட்டியின் உறுப்புக்களைப் பிரதி பண்ணிக்கொள்ளுங்கள். படங்கள் 1-க்கும், 3-க்கும் பிரதி பண்ணினால் போதும். காகிதப் பத்திரத்தை துணியில் போட்டு வெட்டும்போது, சுமார் கால் அங்குலம் தைப்பதற்கு இடம் விட்டு வெட்டவேண்டும். தைப்பதற்காக விட்ட இடங்களில், படங்களில் காட்டியிருக்கிற அம்பு அடையாளங்களின் பிரகாரம் (தையல் வரும் இடத்தைத் தாண்டிப் போகாமல்) கத்தரித்துவிட வேண்டும். இப்படிக் கத்தரித்துவிடாது போனால், அந்த


வலப்பக்கம்
வால் பக்கம்
அடி வயிறு
மூக்கு
இடப்பக்கம்


காது
காது
பின் கால்
முன் கால்
முன் கால்
பின் கால்
வல்ப்பக்கம்
இடப்பக்கம்

இடங்கள் தையலின் உட்புறமாக இழுபட்டுக்கொண்டிருக்கும்.

துணியில் படங்களின் பிரகாரம் இலக்கங்கள் போட்டுக்கொள்ள வேண்டும். தைக்கும் போது ஒரே விதமான இலக்கங்கள் ஒன்று சேரும்படி கவனித்துத் தைக்க வேண்டும்.

**நாய்க் குட்டிக்கு வேண்டிய உறுப்புக்களின் எண்ணிக்கை.**

காது 4 துண்டு, உடல் 2 துண்டு, முன்கால் 2 துண்டு, பின்கால் 2 துண்டு, அடிவயிறு 1 துண்டு, ஆக மொத்தம் **11** துண்டுகள்.

**துணியில் இலக்கங்கள் ஒன்று சேர வேண்டிய இடங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1—3 | இடங்களில் | 9—2 | இடங்களில் |
| 2—2 | ,, | 10—2 | ,, |
| 3—3 | ,, | 11—2 | ,, |
| 4—3 | ,, | 12—3 | ,, |
| 5—3 | ,, | 13—3 | ,, |
| 6—3 | ,, | 14—3 | ,, |
| 7—3 | ,, | 15—3 | ,, |
| 8—4 | ,, | 16—2 | ,, |
| | | 17—2 | ,, |

**காது:** உடலையும் காதையும் தனித்தனியாகத் தைத்துக்கொண்டு, வலப் பக்கம் இடப் பக்கம் மாறாமல் காதை உடலுடன் சேர்த்துத் தைத்துவிட வேண்டும்.

**கண்:** சில "பித்தான்"கள் கண்ணைப் போலவே இருக்கும். அவைகளில் இரண்டைக் கண் வரவேண்டிய இடங்களில் வைத்துத் தைத்தால் நாய்க்குட்டி பார்வையாக இருக்கும். நூலினால் வேண்டுமானாலும் தைக்கலாம்.

குறிப்பு :— நாய்க்குட்டியை நிரப்புவதற்குப் பஞ்சு, தும்பு, மரத்தூள் முதலியவைகளை உபயோகப்படுத்தலாம்.

புத்தகத்தில் படிக்கும்போது மலைப்பாகத்தான் இருக்கும். காகிதம், பென்சில், அடிக்கோல், கத்தரிக்கோல், ஊசி, நூல் (தையல் மெஷின் இல்லாதவர்களும் ஊசி நூல் உதவியால் நாய்க்குட்டி தைத்து விடலாம்) முதலியவைகளை வைத்துக்கொண்டு நாய்க்குட்டி செய்து பாருங்கள். "பூ! இவ்வளவுதானா?" என்று நினைப்பீர்கள்.

*

உலகம், ஈசுவரன் இந்த இரண்டையும் ஒன்று படுத்துவது எப்படி? அதோ தச்சன் மனைவியைப் பார்; அவள் எத்தனை காரியங்களில் கருத்தாயிருக்கிறாள்! உரலில் இருக்கும் அவலை ஒரு கையால் கிளறி விட்டுக்கொண்டு, மற்றொரு கையால் குழந்தையை அணைத்துப் பால் கொடுத்துக்கொண்டிருக்கிறாள். அதே சமயத்தில், அவல் வாங்க வந்த ஒருவனிடம் பேரம் பேசிக்கொண்டும் இருக்கிறாள். இப்படி அவள் பல வேலைகளைக் கவனித்தாலும், அவளுடைய மனம் மட்டும் உலக்கையானது கையில் காய முண்டாக்காம லிருக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தில் நிலைத்திருக்கிறது. உலக வாழ்க்கையில் நீ இரு. ஆனால் ஈசுவரனை மட்டும் எப்பொழுதும் நினைத்துக்கொண்டிரு. ஒருபோதும் அவனுடைய மார்க்கத்தை விட்டுப் புறம்பே போகாதே.

—ராமகிருஷ்ண பரமஹம்சர்

# ஒவ்வொரு ஊரிலும் ஒரு லேடீஸ் கிளப் வேண்டுமா?



*நந்தினி*

**வேண்டும்**

இந்தியாவின் தாழ்மைக்குக் காரணம் இந்தியப் பெண்களின் தாழ்மை நிலையே என்று பலர் கூறுகிறார்கள். மேல் நாடுகளில் பெண்கள் அதிக முன்னேற்ற மடைந்திருப்பதற்குக் காரணம் அங்கே அவர்கள் ஒன்று கூடித் தங்கள் முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உழைப்பதாகும். நமது நாட்டில் பெண்களிடை ஒற்றுமை இல்லை. ஒன்றுகூடி ஒரு தலைமைக்கு உட்பட்டு ஒரே மனதாக உழைக்கும் குணம் இல்லை. அதைப் பழக வேண்டும். அப்பொழுதுதான் பெண்களுக்குச் சக்தி ஏற்படும். அவர்கள் கூறுவது வலிவு பெற்று எல்லோருக்கும் தெரியவரும். சமூகத்தின் பாதி மக்கள் பெண் மக்கள். சமூக முன்னேற்றம் பெண்களின் முன்னேற்றத்தைப் பொருந்தியதாகும். தத்தம் சமூகத்தைப் பற்றிய பொறுப்பை உணர்ந்து அதைச் சரிவர வகிப்பது பெண்களின் கடமை யாகும்.

கிராம மாகட்டும், நகர மாகட்டும், அங்கங்கு வசிக்கும் பெண்கள் தங்களிடை ஒரு சபை ஏற்படுத்திக் கொண்டு, அடிக்கடி கூடி, தமது ஊரில் நடக்கும் விஷயங்களைப் பற்றி எல்லாம் பேசி ஆராய வேண்டும். நாம் இருப்பது எவ்வளவு பேர், நமக்குப் போதுமான ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவா? நமது குழந்தைகளுக்குப்

பள்ளிக்கூடம் அருகில் இருக்கிறதா, அதில் கல்வி சரியாகப் போதிக்கப்படுகிறதா, நமது தெருக்களில் விளக்கு நன்ருக எரிகிறதா, குப்பை சரியாகக் கூட்டப்படுகிறதா என்றெல்லாம் சீர் பார்க்க வேண்டும். தண்ணீர் வசதி சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இவைகள் சரியாக இல்லாவிடில் தக்க இடத்தில் அதைக் கூறிச் சரி செய்துகொள்ள வேண்டும். 'நான் உண்டு, என் வீடு உண்டு, எனக்கு ஏன் ஊர் வம்பு' என்று இருப்பது மிகவும் பெருமைக்கு உரிய விஷயம் என்று அநேகம் பெண்கள் நினைக்கிருர்கள். ஊர் வம்பை விரும்பாமல் இருக்கலாம். ஆனல் ஊர் வேண்டுமல்லவா? அந்த ஊர் நல்ல ஊராக இருக்க வேண்டுமல்லவா? அதற்கு ஊரில் இருப்பவர் முனைந்து உழைக்க வேண்டுமல்லவா? பெண்களுக்குச் சக்தி ஏது எனலாம். ஒரு குச்சிக்குப் பலம் கிடையாது, ஆனல் ஒரு கட்டு விறகிற்குப் பலம் உண்டு என்பது பழங் கதை அல்லவா? ஆகையால், நமது நன்மைக்கும் முன்னேற்றத்திற்குமாக நாம் ஒன்ருகச் சேர்ந்து, கலந்து ஆலோசிப்பது, ஒற்றுமையாக உழைப்பது என்றிருப்பது அவசியம்.

இரண்டாவதாக, நமது சந்தோஷத்திற்கும், மனம் விசாலத்தன்மை பெறுவதற்கும் பெண்கள் ஒரு சபையின் கீழ் அடிக்கடி கூடுவது என்று இருப்பது நலம். கிராமங்களில் ஆற்றங் கரையிலும், கிணற்றங் கரையிலும் பெண்கள் கூடிப் பேசுவது ஏன்? சுயமாக அவர்கள் உள்ளத்தில் தோன்றி இதரப் பெண்களுடன் சேர்ந்து பேசி நமது சகோதரத் தன்மையைக் காண்பிக்கத் தூண்டும் ஓர் உணர்ச்சி அல்லவா? தனிமையில் இருப்பது தபஸியைத் தவிர யாருக்குப் பிடிக்கிறது? அவ்விதம் இதரர்களை நாடும் நமது குணத்திற்கு இவ்விதம் நியாயமான வழியில் இதரர்களுடன் பழகி அந்தப் பழக்கத்தில் சந்தோஷம்

பெறச் சந்தர்ப்பம் அளிப்பது மிகவும் அவசியம். ஒரு வீட்டில் ஒரே குழந்தை வளர்ந்தால் அது செல்லம் கொடுக்கப்பட்டு அசடாக வளர்ந்து விடுவதை நாம் பார்க்கிறோம். பல குழந்தைகளாக வளர்ந்தால் அவை கூடி வாழ்வதற்கு வேண்டிய குணங்களைக் கற்றுக்கொள் கின்றன.

பல பெண்களுடன் பழகி, அவர்களின் போக்கு, அவர்களின் அபிப்பிராயம் முதலியனவற்றை அறிந்து, அவர்களுடன் கூடி மரியாதையுடன் நடக்கக் கற்பது என்று ஏற்பட்டால், பெண்களின் மனப்பான்மை விசால மான தாகும்.

ஒரு பெண்ணிற்குத் தான் படிக்கக்கூடிய புத்தகங்க ளெல்லாம் விலைக்கு வாங்குவது என்றால் இயலாமல் இருக்கலாம். ஆனல், ஒரு சபையின் அங்கத்தினர் கூடி ஒரு புத்தக சாலை திறந்துகொண்டால் எல்லாப் புத்தகங் களும் எல்லாப் பெண்களுக்கும் கிடைக்குமாறு ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

ஒரு நல்ல அறிஞரின் பிரசங்கத்தைக் கேட்பது ஒருத்தியால் முயன்றால் இயலாது. ஆனல், ஒரு சபையின் ஆதரவில்அவரை பிரசங்கிக்கச் சொல்லி கேட்பது இயலும். இவ்விதம் கூடுவதனல் ஏற்படும் லாபம் பல விதத்திலும் இருக்கிறது. இந்த லாபத்தை, இந்தச் சக்தியை, இந்தப் பலத்தைப் பெண்கள் உணர வேண்டும். எல்லா ஊர் களிலும், எல்லாக் கிராமங்களிலும் அவர்கள் தம்மைச் சரிவர அமைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதே நமது நாடு முன்னேற்றம் அடையும்.

**வேண்டாம்.**

லேடீஸ் கிளப்பும் வேண்டாம், கிளப்பிற்குப் போகிறேனென்று பெண்கள் கிளம்பவும் வேண்டாம்.

உலகத்தில் எந்த நாட்டிலாகட்டும், எந்த மாகாணத்திலோ எந்த ஜில்லாவிலோ, எந்த ஊரிலோ ஒரு லேடீஸ் கிளப்பிற்குச் சென்று அதன் நடவடிக்கைகளைக் கவனித்தவரும் லேடீஸ் கிளப் என்பது தமது ஊருக்கோ, அல்லது தமது ஊருக்கு நூறு மைல் சுற்று வட்டத்திலோ தேவை என்று விரும்பவே மாட்டார்கள்.

(1) லேடீஸ் கிளப் இருந்து, அதில் மெம்பராக இருந்தால், ஒரு பெண்ணிற்கு இதுவரை இருந்த புடைவைகள் போதா. கிளப்பிற்கு உடுத்துக்கொண்டு போவதற்கு என்று தினம் புதுப் புடவை வேண்டும். புது நகைகள் வேண்டும்.

(2) கிளப்பிர்குப் போக வேண்டும் என்ற காரணம் கொண்டு, வீட்டு வேலைகள் அரை குறையாகவும் அவசர அவசரமாகவும் செய்யப்பட்டு, வீடே சீர் குலையும்.

(3) கிளப்பில் அவள் உடுத்திருந்தாள், அவள் அணிந்து கொண்டிருந்தாள், அவள் வாங்கப் போவதாகச் சொன்னாள் என்று சொல்லி, ஏதாவது புதுப் புடவை புது நகை, புதுச் சாமான் வாங்கத் தினமும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்ளப் பெண்கள் முயலுவார்கள்.

(4) இதெல்லாவற்றையும் விட மோசம் — கிளப்பில் சண்டை. ஆற்றங் கரை, கிணற்றங் கரைச் சண்டை, பக்கத்து வீட்டுச் சண்டை எல்லாம் விட, நிர்ப்பந்தமான இவைகளைப் பொறுத்துக்கொள்வது போதாமல், கிளப்பு ஒன்றைச் சிருஷ்டித்து அதில் சண்டை இட வசதி அளிக்க வேண்டுமா? பெண்கள் கிளப்பில் கூடினதால் எங்கேயாகிலும், எந்தச் சமூகத்திற்காகிலும் ஒரு கிஞ்சித்து, லவலேசம், நலன் ஏற்பட்டிருக்கிறதா?

கிடையாது.

எனவே, லேடீஸ் கிளப் வேண்டாம்.

*

# கடிதங்கள்

## 1

### புடவைப் பிரச்னை

ஸ்ரீமதி மங்கைக்கு,

அது எப்படி ஆறு கஜத்தை வெட்டித் தைப்பது? மேல் தாவணிக்கு மாத்திரம் குறைந்தது நாலரைக் கஜம் வேண்டும். மீதி ஒன்றரைக் கஜத்தில் எவ்விதம் கச்சம் வைத்து உடுத்திருக்கும் விதம் காணும்படி தைக்க இயலும்? அதை விளக்கிவிட்டுப் பிற்பாடு இது தேவலையா, அது தேவலையா என்று கேட்டால் அழகாய் இருக்கும் என்று நினைக்கிறேன்.

சந்தேகப் பிச்சு

## 2

மங்கையின் ஆசிரியைக்கு,

வெளியில் போகும் சமயம் கட்டுவதற்கு நல்ல உயர்ந்த புடைவைகள் வேண்டி இருக்கும். அவைகளில் ஆறு கஜத்திற்கும் ஒன்பது கஜத்திற்கும் இருக்கும் விலை வித்தியாசத்தில் மற்றொரு புடைவையே வாங்கிவிடக் கூடும். ஆறு கஜம் ரூபாய் நூறு என்றால் ஒன்பது கஜம் ரூபாய் நூற்றறுபது, நூற்றெழுபது என்று இருக்கிறது. இதை உத்தேசித்து நல்ல புடைவைகளாக ஆறு கஜத்தில் ஒன்றுக்கு இரண்டாக வாங்கி வைத்துக் கொண்டால் வெளியே போகும் போது கட்ட நன்றாக இருக்கும். வீட்டில் சாஸ்திரோக்தமாய் மட்டப் புடைவையாக ஒன்பது கஜத்தில் வாங்கிக் கட்டலாம்.

லக்ஷ்மி

## 3

மங்கை ஆசிரியை அம்மாளுக்கு,

புடைவையின் நீளத்தைக் குறைப்பதைப் பற்றி உங்கள் புத்தகத்தில் வெளிவந்த இரு அபிப்பிராயங்களையும் படித்தேன். ஆறு கஜம் புடைவையைத் துண்டித்து கத்தரித்துத் தைக்காமல், அவ்விதமே, ஆறு கஜத்தையே கச்சமாக வெளிக்குத் தோன்றும் வகையில் கட்டிக் கொள்வதற்கு வழி இருக்கிறது. அது சற்றுப் 'பாசாங்கு' என்று சொல்லக் கூடிய வழியே. ஆனால், இரண்டு துண்டாக உடுத்துவது உசித மல்ல. அதைவிட இந்த முறை சிறந்தது. ஒன்பது கஜம் அநாவசியம். இதுவே என் எண்ணம்.

உங்கள் புத்தகத்தைப் படிக்கும்
கோதை

## 4

ஸ்ரீ "மங்கை" அம்மாளுக்கு,

புடைவையின் நீளத்தைக் குறைக்கலாமா என்று கேட்டு விவாதித்திருக்கிறீர்கள். சில சமயம், அதாவது வீட்டி லிருக்கும்போது, நீங்கள் சொல்கிறபடி குறைந்த நீள முள்ள புடைவையை உடுத்திக் கொள்ளலாம். வெளியில் போகும் போது, வழக்கம் போல உடுத்தலாம் என்று நினைக்கிறேன். நல்ல புடைவைகளை நீண்டதாகவும், மட்டப் புடைவைகளைக் குறுகியதாகவும் வாங்கிக்கொள்ள லாம்.

கனகவல்லி

## 5

ஆசிரியைக்கு :

சேலையின் நீளத்தை குறைக்கலாம். ஐந்து கஜம் துணிகூட கிடைக்காமல் ஏழைகள் நிரம்பவும் கஷ்டப் படுகிறார்கள். முஸ்லிம்களாகிய எங்களிலேயே அநேகம் பேர் ஐந்து கஜம் துணியை உடுத்துப் பர்தாவும் அநுஷ்டிக் கிறோம். என் அனுபவத்தில் இது சாத்தியமாக இருக் கிறது. ஏன்? எங்களைப்பற்றி எழுதுகிறேன் என்றால், பெரும்பாலும் எங்களில்தான் முக்கியமாக எட்டு கஜம் ஒன்பது கஜம், கட்டுவார்கள். தற்காலத்தின் நாகரிகத் தாலோ அல்லது துணிப் பஞ்சத்தாலோ எங்களில் அநேகம் பேர் ஏழு கஜம் ஆறு கஜம் கட்டுவதற்கு ஆரம்பித் திருக்கிறார்கள். எங்களைவிட மற்ற ஜாதியினருக்கு அதிகக் கஜம் தேவையிராது என்றே நம்புகிறேன். எனவே, ஆறு கஜம் துணி போதுமானது. துணிப் பஞ்சம் ஏற்பட் டுள்ள இக் காலத்தில் அழகைக் குறித்துச் சிந்திப்பதில் பிரயோஜன மில்லை. மக்கள் யாவருக்கும் செளகரியமாய்க் கிடைக்கக் கூடிய வழியில் உற்பத்தி பெருகும் வரை சிக்கனத்தை முன்னிட்டுச் சேலையின் நீளத்தைக் குறைக் கலாம். ஆகவே சேலையின் நீளத்தை நிச்சயமாய்க் குறைக்கலா மென்பதே என் அபிப்பிராயம்.

அஹ்மத் மீரானுக்ஷி

## 6

ஆசிரியை அவர்களுக்கு :

சாஸ்திரமும் சுகாதாரமும் இணைபிரியா நண்பர்கள். சாஸ்திராய ச சுகாய ச என்பது சான்றோர் வசனம். சாஸ்திரம் இடும் கட்டளைக ளனைத்தும் நமது நன்மையின் பொருட்டே.

அதாவது, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் ஸ்நானம் செய்யத் தவறாதே.

குளித்த பின்பு போஜனம் செய்.

ஊசிய பதார்த்தங்களை உண்ணாதே.

மதுபானத்தை அறவே ஒழி.

எச்சல் தீட்டுக் கலக்காதே.

கச்சமின்றி ஸ்நானம் செய்யாதே.

கச்சமின்றி வாசல்படி தாண்டாதே.

கச்சமின்றி மந்திர ஜெபம் செய்யாதே.

கச்சமின்றி மங்கள|காரியங்கள் புரியாதே. என்பன போன்றவை. இவையனைத்தும் நமது ஆரோக்கியத்திற்கும் அநுகூலத்திற்கும் இன்றியமையாதவை.

உதாரணமாய்க் கச்சத்துடன் நீராடினால் எங்கு வேண்டுமானாலும் கூச்சமின்றிக் குளிக்கலாம். இக் காலத்தைப்போல் குளிக்கும் அறைகள் * வேண்டுமென்பதில்லை. நதி தடாகங்களில் குடைந்து நீராடலாம். குளித்து எழும்பொழுது புடைவை விலகாது. முன் காலத்தில் ஜலத்தில் நீந்தத் தெரியாத பெண்கள் அபூர்வம். கச்சைப் புடைவை நீந்துவதற்கு எவ்வளவு சுகம்?

கச்சையில்லாமல் வேகமாய் நடப்பது வெகு சிரமம். இதை உத்தேசித்தே வாசல்படி தாண்டாதே என்று கட்டளை இடப்பட்டது.

சம்பிரதாய முறை தவறி பூஜை, ஜபம் போன்ற புண்ணிய காரியங்கள் செய்வதில் ஒரு பயனும் கைகூடாது. பக்தி, சிரத்தை, ஆசாரம் அத்தியாவசியம். ஆகவே, மொத்தமாய் மங்கள காரியங்கள் புரியாதே என்று சட்டமிட்டது சாஸ்திரம்.

நமது மனமோ சாஸ்திரத்தை நம்பாமல் முழுவதும் கைவிட இடங்கொடுப்பதில்லை. தொன்று தொட்டு

* Bath Room

ரத்தத்தில் ஊறிய பழக்க வழக்கங்களைத் துறக்க அஞ்சுகிரோம்.

பெண்களுக்கு இருபது வயதிற்குக் கல்யாணம் ஒரு நாளில் செய்தாலும் சாஸ்திர விதியில் ஒன்றும் குறையின்றிச் செய்கிரோம். அதில் முக்கியத்துவம் பெறுவது மாங்கல்யம்.

நாகரிகத்தில் முன்னேற்ற மடைந்தவர்களுங்கூடக் கூறைப் புடைவை மிகவும் உயர்ந்ததாகவும், ஒன்பது கஜமாகவும் வாங்குகின்றனர்.

அதன் கருத்து என்ன வென்பதைச் சற்றுப் பார்க்கலாம். பெரியோர்கள் வேத மந்திரங்களோடு ஆசீர்வாதம் செய்து மங்கள காலத்தில் அப் புடைவை மணப்பெண்ணிற்குக் கொடுக்கப்படுகிறது. அப் புடைவையை அணியும் பெண் கல்யாணம் ஆனதற்கு அறிகுறியாகிய சம்பிரதாயப் புடைவையை உடுத்து வெகு காலம் வாழ வேண்டும். இதுதான் பெரியவர்களது எண்ணம் அல்லவா?

இச் சம்பவத்தை ஆண்டாள்,

> இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
> வந்திருந்தென்னை மகட்பேசி மந்திரித்து
> மந்திரக் கோடி யுடுத்து மணமாலை
> சுந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழி, நான்!

என்னும் பாசுரத்தால் படம் பிடித்துக் காட்டினாள். "இந்திரன் பிரமன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் விரைவில் வந்தனர். மந்திராலோசனை செய்து, எனக்கும் கண்ணனுக்கும் கல்யாணம் நிச்சயம் செய்தனர். என் நாதன் சகோதரி துர்க்காதேவி யல்லவா? அவளுக்கு அழைப்புக் கடிதம் சென்றது. நாத்தனாருக்கு இல்லாத அருமையும் ஆதரவும் யாருக்கு? அவள் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டு பறந்து வந்தாள். மகா மந்திரங்களால்

புனிதமாகச் செய்த கூறை உடுத்துத் தாலி முடிந்து மண மாலை சூட்டி அலங்கரித்தாள் " என்று வருணிக்கிறாள்.

இதை அநுசரித்தே நாத்தனார் கூறைப் புடைவையைக் கச்சம் வைத்து உடுத்துவது என்னும் வழக்கம் இன்றளவும் வழங்குகிறது. இவ்வரிய பெரிய செய்கையைச் செய்த அவளுக்குப் பட்டாடைச் சம்பாவனை வேறு! இவைகளில் ஒன்றையும் இன்றளவும் நாம் குறைக்க வில்லை.

இவ்விதம் அரும்பாடு பட்டுச் சம்பாதித்த சம்பிரதாயப் புடைவையை அரை க்ஷணத்தில் ஒழிப்பதில் ஒரு லாபமு மில்லை; அழகு மில்லை. ஆனால், பிரதிகூலங்கள் மிக உண்டு.

இது கல்யாணம் ஆன பெண் என்பதற்கு ஒரு சிறந்த அடையாளம். அவளைக் கண்ட மற்ற இளைஞர்கள், விஷயத்தை அறிந்து அவள் அருகில்கூடச் செல்லமாட்டார்கள்.

ஆங்கிலேயரிலுங்கூடக் கல்யாண மாகிய பெண் என்பதற்கு அடையாளமாகத் தலைப் பின்னலைத் தூக்கிக் கட்டிக்கொள்ளுகின்றனர். பம்பரமாய்ச் சுழன்று வேலை செய்யலாம்; வேகமாய்க் கால் வீசி நடக்கலாம்; நதிகளில் துளைந்து நீந்தலாம்; ஓடி ஓடிப் பந்து விளையாடலாம்; குனிந்து நிமிர்ந்து குதித்துப் பாடலாம்; பரத நாட்டியம் ஆடலாம்.

முன் கொய்சகம் வைத்த புடைவையினால் சில அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. நடக்கும் பொழுதும், பரிமாறும் பொழுதும் தரையில் புரளும். தூக்கிக் கட்டினால் அழகாய் இராது ; கரை கிழியும். அழுக்கடையும்.

துணி லாபம் ஒருகாலு மில்லை. ஆறு கஜம் உள் பாவாடையின்றி உடுத்தினால் உடம்பு தெரியும். ஆகவே, உள் பாவாடை மூன்று கஜம், புடைவை ஆறு கஜம் ஆக ஒன்பது கஜம், சரியாய்ப் போய்விட்டது!

பண லாபமும் அவ்வளவாக இருப்பதாகத் தோன்ற வில்லை. உள் பாவாடை நாகரிகமாக இருக்க வேண்டும். பூ நூல்* வேலை அவசியம். தையல் கூலி சலவைக் கூலி எல்லாம் கூடினால், என்ன லாபம் கிடைக்கப் போகிறது? வேலை அதிகமே தவிர, லாபமில்லை. பழகிய வர்களுக்கு உடுத்தும் சிரமம் வேறு. இரண்டும் ஒன்று தான்! தேகத்தைச் சுற்றிக் கனமாய் இருக்கும் என்னும் ஆட்சேபம் தவறு. அது இடுப்பை அணைத்தால்போல், பல மளிக்கும்.

மேலும், இடை சிறுத்துக் காணும். இதற்கு உவமை ரவிவர்மா படங்கள். கங்கை ஆகாயத்திலிருந்து விழுந் தருணம் பார்வதி தேவி நந்தியின் மேல் சாய்ந்து நிற்கும் நிலை, தமயந்தி அன்னத்துடன் பேசும் நிலை ஆகிய படங் களில் அவ் வழகிய தோற்றத்தைக் கண்டு களிக்கலாம்.

ஆறு கஜத்தைப் பைஜாமாவாகத் தைத்து உடுத்து வது மூளை கலங்கியவர்கள் செய்யும் வேலை.

துவைக்கும் சிரமத்தைக் குறைக்க இரண்டு புடை வையாய் உடுத்தலாம். இது சாஸ்திர சம்மதம். முன் காலத்தில் முனி பத்தினிகள் அவ்விதமே உடுத்தார்க ளாம்.

சீதாதேவிக்குக் கைகேயி இரண்டு மர உரிகளைக் கொடுத்தாள்.

தேவியை ராவணன் எடுத்துச் செல்லுகையில் தன் மேல் உத்தரீயத்தில் ஒரு துண்டைக் கிழித்து ஆபரணங் களை முடிந்து, வானரர்களின் மத்தியில் போட்டாள். திரௌபதி வீட்டிற்கு விலக்காய் இருக்கும் தருணம் ஒற்றை வஸ்திரத்தை உடுத்திருந்தாள். இப்படிப் பற்பல திருஷ்டாந்தங்களை இதிஹாச, புராணங்களில் படிக் கிறோம்.

---

* Embroidary

இப்பொழுது மாத்வர்கள், கல்யாண காலங்களில் மணமகளுக்கு அரை ஆடை, மேலாடை என்று இரண்டு புடைவைகளை அளிக்கின்றனர்.

நாம் அதை அநுசரித்தே, ரவிக்கைத் துண்டில்லாமல் புடைவை கொடுப்பதில்லை.

ஆகையால், ஐந்து கஜம் நான்கு கஜமாக ஒன்பது கெஜத்தை அழகாய் உடுத்தலாம்.

பஞ்ச காலத்தில் வேண்டுமானல் மட்டப் புடைவையை உள் ஆடையாய்ச் சம்பிரதாயப் பிரகாரம் உடுத்து, மேல் ஆடையை உயர்ந்ததாய்த் தேர்ந்தெடுத்து அரை ஆடை தெரியாமல் அணிந்துகொள்ளலாம்.

'ஒன்று உடுப்பதும் ஒன்றே, பல அணிவதும் ஒன்றே' என்று கன்னடத்தில் ஒரு பழமொழி வழங்குகிறது. ஆடை குறைந்த உடம்பு அரை உடம்பு என்பார்கள்.

தேகம் நிறைந்த ஆடையின் சௌந்தர்யம் தனிச் சிறப்பு வாய்ந்தது.

கோவிலில் உள்ள கல், தங்கம், வெள்ளி முதலிய விக்கிரகங்களுக்குக்கூட ஆடைகளைக் கச்சம் வைத்த விதமாகவே செதுக்கி உள்ளதைக் காண்கிறோம். அதற்குமேல் அர்ச்சகர்கள் தங்கள் இஷ்டம்போல் வஸ்திரங்களை உடுத்து விடுகின்றனர். மேலும், தெய்வங்களுக்குச் சட்டம் இல்லை. அவைகள் நடக்கவும் வேலை செய்யவும் அவசியமில்லை யல்லவா?

ஆகையால், விவாகமாகிய பெண்கள் சாஸ்திரத்திற்கு விரோதமாய்ப் புடைவையின் நீளத்தைக் குறைத்துக் கன்னிப் பெண்கள்போல் முன் கொய்சகம் வைத்த புடவை கட்டுவதில் ஒரு லாபமுமில்லை, அழகு மில்லை. சுகமும் கெட்டு விரதமும் வீணாவதில் என்ன பயன்?

ஜாதி சம்பிரதாயத்திற்கு ஆடை, ஆசாரம் அத்தியாவசியம்.

மனு சக்ரவர்த்தி, மனிதர்களைச் சீர்திருத்தம் செய்திருக்கும் சட்டத்தின் பெயர் மனுதர்ம சாஸ்திரம். அதில்,

வயஸ: கர்மண: அர்த்தஸ்ய ச்ருதஸ்ய அபிஜனஸ்ய ச ॥
வேஷ வாக் வ்ருத்தி ஸாரூப்யம் ஆசரன் விசரேதிஹ ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, மனிதர்கள் தங்களுடைய "வயசு, வேலை, பொருள், சாஸ்திரம், குலம், இவைகளுக்குத் தகுதியுடைய ஆடை ஆபரணங்கள், வார்த்தை, நடத்தை முதலியவைகளைச் செய்துகொண்டு இவ்வுலகில் வசிக்கக் கடவர்" என்ற கட்டளை இருக்கிறது. சிறுவர்கள், பிஞ்சில் பழுத்தால்போல் பேசுவது, வயசு சென்றவர்கள் சிறு பெண்களைப்போல் சிங்காரித்துக் கொள்வது, பொருள் அந்தஸ்து இரண்டுமில்லாமல் கடன் வாங்கிப் புடைவை நகை வாங்குவது, பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் தகுதியற்ற பேச்சு, அலங்காரம், ஆசாரம் இவைகளைச் செய்வது முதலியவைகள் சுத்தமாய் அழகன்று என்பதுதான் இதன் கருத்து.

ஆகையால், சாஸ்திரத்தை நம்புபவர்கள் சம்பிரதாயப் புடைவை உடுத்துவதே சிறந்தது.

ராஜலக்ஷ்மி மாதவய்யங்கார்

# இருதயம்

கனகம்மாள் ஸ்ரீதாபதி

கங்கை, சிந்து, காவேரி என்னும் மகா நதிகள் ஆதிகாலம் முதல் நம் பாரத பூமியில் பெருகி அந்தப் பிரவாகத்தால் நாடு முழுதும் செழிப்பைக் கொடுத்து வருகின்றன. அதே போல் பக்தி என்னும் பிரவாகமும் கங்கை முதல் காவேரி வரை தொன்றுதொட்டுப் பாய்ந்து பெருகி நம் தேசத்தவரின் ஆத்ம வளர்ச்சியைச் செழிப்பாக வைத்திருக்கிறது. 'பக்தி' என்னும் ஒரு தெய்விக விழிப்பை ஒரு பக்தர், 'என் உள்ளம் தொட்டகன்றான்' என்று ரசமாகச் சொல்லும் பொழுது, நம் உள்ளத்தை அந்தப் பக்தி தொடுகிறது. கடவுள் உள்ளத்தைத் தீண்டிவிட்டான் என்று உணரும் பக்தர்கள் அவன் ஸ்பரிசத்தால் உள்ளம் கனிந்துவிடவும் காண்கிறார்கள். உள்ளத்து எழுச்சியை உண்டாக்குவது பக்தி. அதுவேபோல் உள்ளத்தில் கிடக்கும் பல உணர்ச்சிகளின் தந்தியை மீட்ட வல்லது இசை. இது சங்கீதம். பலவகைப்பட்ட ஜீவராசிகளையும் கட்டுப்படுத்துகிறது; நாதத்துடன் ஒரு ஸ்வரம் கிளம்பித் தன் அலைகளைப் பரப்பும்பொழுது அந்தச் சுருதியுடன் உள்ளத்தின் உணர்ச்சிகளும் சேர்ந்துகொள்கிறது. உள்ளமாகிற வீணை வெளிச் சங்கீதத்துடன் சுருதியில் சேர்ந்து கலக்கிறது. பக்தியும் இசையும் உள்ளத்து உணர்ச்சிகளைத் தொடும் சக்திவாய்ந்தன என்றால், கவிதையும் அதே போல்தான். மனிதனின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி அவனைக் குதி கொள்ளும்படி செய்கிறது கவிதை. மனித உள்ளம் காட்டக் கூடிய ஒன்பது உணர்ச்சிகளாகிய

நவ ரசங்களையும் காட்டித் தன்பால் ஆகர்ஷிக்கும் சங்கீதம், கவிதை, பக்தி, இம் மூன்றும் மனிதன் தன் அமர வாழ்வை நிலைநாட்டுவதற்கு ஏற்ற சாதனங்கள். இவற்றில் ஏதேனும் ஒன்றிருந்தாலே நாம் பரவசம் அடைய முடியும். தியாகராஜ ஸ்வாமிகளோ இம் மூன்றையும் ஒன்று சேர்த்து, 'நம் உள்ளம் தொட்டு விட்டார்'. தாம் பெற்ற ஓர் ஆநந்தத்தை உலகத்திற்கு அள்ளி வழங்குகிறார்.

'ஆத்ம ஞானத்தை அடைய ஒரு சுலபமான ஏணி இருக்கிறது. அதில் ஏறக் கற்றுக்கொள்ளுங்கள்' என்கிறார் ஸ்வாமிகள்.

ஸ்வர ராகஸுதா ரஸயுத பக்தி
ஸ்வர்க்கா பவர்க்கமுரா

என்று அழகிய சங்கராபரணத்தில் கருத்தை வெளியிடுகிறார். ஏணியில் ஏறுவது சுலப மல்ல. அதில் இருக்கும் ஒவ்வொரு படியிலும் காலை நிச்சயமாகவும், தைரியமாகவும் வைக்க வேண்டும் என்கிறார். அதன் படிகள் ராகம், பாவம், தாளம், கவிதை இவைகளுடன் கூடிய, பக்தி இந்த ஐந்தையும் சேர்த்துப் பஞ்சாமிர்த மாக்கும் ஒரு வித்தையை அவர் நமக்கு அளித்திருக்கிறார்.

தியாகராஜ கீர்த்தனங்கள் நமக்கு அவருடைய பிரபாவத்தை விளக்கும் நூல்கள். இவைகளில் அடங்கிக் கிடக்கும் அரிய விஷயங்களை நாம் அப் பெரியார் மறைந்த நூற்றுண்டின் இறுதியில் ஞாபகப்படுத்திக்கொள்வது நம் கலைக்கும் நாட்டுக்கும் பெரியதொரு பாக்கிய மாகும். அவருடைய கானும்ருதத்திலும், பக்திப் பிரவாகத்திலும், கவி இன்பத்திலும் நாம் திளைத்தால் அதைவிடப் பேரின்பம் யாரும் நமக்கு அளிக்க முடியாது.

தியாகராஜ கீர்த்தனங்கள் அவருடைய பக்தியின் கனி. அதில் பல ரசங்களை நமக்குத் தருகிறார். பக்தியில் கெஞ்சுகிறார். ராம பக்தியையே தன் சாம்ராஜ்யமாகவும்,

தன் ஆனந்த சாகரமாகவும் கொண்டு பக்தியினல் கெஞ்சு கிருர், கொஞ்சுகிருர், கோபிக்கிருர், குற்றம் சாட்டுகிருர், ஏசுகிருர், அலுத்துக் கொள்கிருர், அங்கலாய்க்கிருர், ஆநந்திக்கிருர். இவ்வளவையும் சங்கீத மூலம் காட்டும் அவர் பாவப்ரபாவம்தான் என்ன! தியாகராஜரின் கீர்த்தனங்கள் நம்மிடையே நூறு வருஷமாக நடமாடி வந்திருந்த போதிலும், பலருக்குத் தெலுங்குப் பாஷையில் அதிக ஞானம் இல்லாததால் அதன் சாகித்ய ருசியை அநுபவிப்பது சாத்தியப்படாமல் இருந்து வருகிறது. சாகித்யம் சங்கீதத்துடன் பொருந்தும் ஓர் அழகை உணர்ந்தா லல்லவோ பாவம் என்பது ஏற்படும்? சங்கீதத்திற்கு அதிகப் பிராதான்யம் கொடுக்கப்பட்டுச் சாகித்யத்தின் முழுச் சோபையை விளங்கவிடாமல் பிரிப்பதிலும், பிழைகளுடன் உச்சரிப்பதிலும் ஒழுங்கு தவறி, பாவ, ராக, தாளம் என்று சொல்லப்படும் மூன்றில் குறைவு ஏற்படுகிறது. கவி உபயோகித்திருக்கும் பதங்கள், இசையில் புகுந்த பிறகு, அது எப்படி மனத்தில் உணர்ச்சிகளை உண்டாக்குகிறது என்பது, அர்த்தம் அறிந்து, அநுபவித்துப் பாடுபவருக்கே புலப்படும். அவர்களே பிறருக்கும் காட்டமுடியும்.

பக்தியில் அவர் காட்டும் பல உணர்ச்சிகளும், அவைகள் சங்கீதத்தின் மூலம் வெளிப்படும் விசித்திரமும் ஒரு சிறிய கீர்த்தனையை எடுத்துப் பார்த்தாலே புலப்படும். பியாகடை ராகத்தில் இருக்கும் பாட்டு.

தனவாரி தனமுலேதா?
(நம்மவன் என்பது இல்லையா?)
தாரதாதிபனன! வாதா?
(மதி முகனே! வம்பா?)

இது பல்லவி. சின்னஞ்சிறு வார்த்தைகள். இதில் எடுத்துக்கொண்ட கருத்தை அநுபல்லவியில் மேலும் விளக்குகிருர்.

சூரியன், ஏழை, பணக்காரன், தோட்டி, தொண்டமான் என்ற வித்தியாச மின்றிச் சகல ஜீவராசிகளுக்கும் தன் சக்தியைக் கொடுத்து உயிர் வாழச் செய்கிறான். இப்படிப் பாரபக்ஷ மில்லாதவனைக் குலத் தலைவனாக உடைய சூரிய வம்ச அரசர்கள், கொடை, கருணை, நீதி, அன்பு இவைகளுக்குப் பிரசித்திப் பெற்றவர்கள். அவர்களுள், மனு, மாந்தாதா, இக்ஷ்வாகு, சிபி என்று எண்ணிக்கொண்டே போகலாம், பரம தாதாக்களை. அப்படிப்பட்ட குலத்தில் உதித்த உனக்கு ஏனோ இந்தப் பாரபக்ஷம்?

இன வம்ச ராஜு-குல ஈ குணமு
(சூரிய குல அரசர்களுக்கு இந்தக் குணம்)
என்னடைன கலதா?
(என்றாவது உண்டா?)

புகழுரைக்காகட்டும், ஏசலுக்குத்தானாகட்டும் நாம் குலப் பெருமையைச் சுட்டிக் காட்டுவது வழக்கம். ஒருவன் சரியாக நடக்காவிட்டால், கூட்டம் வந்த புத்தியோ, குலம் தந்த ஆசாரமோ என இகழுகிறோம். உயர்த்துவதற்கும், அவன் எப்பேர்ப்பட்ட வம்சம், அவன் பெரியோர்கள் என்ன வித்வான்கள் என்றும், பெருங்காயம் வைத்த சிமிழின் மணம் போகுமா, கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே என்றும் சொல்கிறோம். ஒருவன் கெட்ட பழக்கத்தில் விழுந்தால் அவனுக்குப் புத்தி சொல்லும் பொழுது, 'அப்பா! உன் முன்னோர்கள் இப்பேர்ப்பட்டவர்கள்' என்று அவர்கள் கியாதியை எடுத்துரைத்து அவன் மனத்தைப் பதப்படுத்துகிறோம். இன வம்ச அரசர்கள் வள்ளல்கள். மூலை, முடுக்குகளில் எல்லாம் போய்க் கதிரவன் தன் பிரகாசத்தைக் கொடுப்பது போல் எங்கெங்கோ அந்த அரசர்கள் தங்கள் செங்கோல் திறமையையும், கொடைத் திறனையும் காட்டியிருக்கிறார்கள். நீ

என்னடா வென்றால், உன்னையே நினைத்துக் கதறுகிறேன், என்னை லக்ஷ்யம் செய்யமாட்டேன் என்கிறாய். வழியில் லாத வழியில் உன்னைப் போகச் சொல்லவில்லையே?

தன வாரி தனமு லேதா ?
தாரகாதிபானன வாதா ?
(மதிமுகனே என்னோடு வம்பா?)

இவன் நம் பக்தன், நம்மை அண்டினவன் என்ற ஓர் உணர்வுகூட உனக்கு இல்லாது போகுமா? நான் உன் குலத்தில் இப்படிக் கண்டது மில்லை, கேட்டது மில்லை என்று குலத்தைச் சான்றுக்குச் சுட்டிக் காட்டி ராமனை வசித் தன்னிடம் கடைக்கண் காட்டும்படி சொல்லும் பியாகடை ராகக் கீர்த்தனையின் அழகே அழகு! சிலர், ஐயரவர்கள் பியாகடையை அதிகமாகக் கையாள வில்லை என்று சொல்வதுண்டு. இந்த ராகத்தை மிக மிக அழகு படுத்தியது பட்டணம் சுப்ரமண்ய ஐயர்தாம் என்றும் சொல்லுவார்கள். ஆனாலும், ஐயர்வாள் கையாண்டுள்ள பியாகடை, ஜ்வலிக்கும் ரத்னம்போல் பிரகாசிக்கிறது. இந்தப் பியாகடையில் நீவே ர நாகுல தனமு என்ற ஒரு கீர்த்தனை இயற்றி, ராமனைத் தன் குல தனமாக ஸ்வீகாரம் செய்து கொள்ளும் அழகு கவனிக்கத் தக்கது. பக்தன் ஆண்டவனின் சொத்துக்கு உரிமை யுடையவன். திருப்பிச் சொன்னால் பக்தனுக்குக் கடவுள் கடமைப் பட்டிருக்கிறார். அவர் புகழை இவன் பிரசாரம் செய்கிறா னல்லவா? இவ் விஷயத்தில்தான் அடியார்க்கும் அடியாராக அவர் திகழ்கிறார். ஆகையால், 'நீ தான் என் குல தனம், என் முழுச் சொத்து. தகப்பன் வைத்துப் போன சொத்துக்கு நான், நீ என்று பங்குக்கு வருவார்கள் தாயாதிகள். நீ என்னுடைய முழுச் சொத்து. உன்னைப் பாகம் செய்து கொள்ள யாரும் போட்டிக்கு என்னுடன் வரமுடியாது' என்று சொத்துரிமை கொண்டாடுவதைப்

பாடிப் பாடிப் பார்த்து அநுபவிக்க வேண்டுமே தவிர, எழுத்திற்கும் சொல்லுக்கும் அது அடங்காது.

உன் குலத்தில் இப்படிப் பராமுகம் கண்டதில்லை, இது உனக்கு அடுக்காது என்று குற்றம் சாட்டி,

"போ போ விலகி ஹார முலு ப்ரேம
மீர மீர ஒஸக லேதா நாதுபை

உன் பேரைச் சொல்லிச் சொல்லிக் கூப்பிட்டு அந்த நாமத்தை ஹாரங்களாகத் தொடுத்து அன்பு பொங்கிப் பொங்கிப் பாடவில்லையா? அப்படி யிருந்தும் நம்மவன் என்று நீ உணரவில்லையே?" என்கிறார். இதைப் பாடும் பொழுது தியாகராஜர் தொண்ணூற்று கோடி ராம நாமத்தை ஜபித்ததின் ஞாபகம் நமக்கு வருகிறது. அப்படி ஒத்த மனத்துடன் பஜித்த நாமமாகிற புஷ்பங்களின் மாலை யும் த்வனிக்கிறது. இப்பொழுது பக்தியில் வாதாடுகிறார்:

அல நாடு பலமு ஆரகிஞ்சுவேள
பனு வானருலனு பந்தி நுன்ஸ்லேதா?

(சாட்சிகளைக் காட்டித் தன் கட்சியைப் பலப்படுத்தமுன் வருகிறார்.)

'அன்று பழங்கள் சாப்பிடும்பொழுது அநேக வானரர்கள் சமபந்தியில் இருக்கவில்லையா?' என்றும் கேட்கிறார். 'குரங்குகளை அடக்கி ஆள்வது எவ்வளவு சிரமம்? அவர் களை நம்மவர்கள் என்ற அபிமானத்தாலேதானே உன்னு டன் வைத்துக்கொண்டு சாப்பிட்டாய்?' காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாரதியார் பாடியிருக்கும் சர்வாத்ம பாவத்தினுள் உபநிஷத்துகள் கோஷிக்கும் ஒரு பெரிய தத்துவம் அடங்கிக் கிடக்கிறது. அந்தப் பொருள்படி ஐயரவர்கள் பாடியிருப்பதால்தான் தியாகப் பிரும்மோபநிஷத் என்று அவருடைய கீர்த்தனங் களைக் கொண்டாடுகிறார்கள். பலவிதமாக முறையிட்டுக் கடைசியில்,

"ராம ராம ராம ரச்சகேயகுரா
தாமஸம்பு ஏல? த்யாகராஜ பால!

ஏன் தொந்தரவு செய்கிறாய்? அருள் புரியத் தவக்கப் படுத்துகிறாய்?" என்று உருக்கமாகக் கேட்கிறார். இங்கு முறையிடுகிறார். இந்தக் கேள்விகள் சங்கீதத்தில் அமைந் துள்ளன. பாவம் ததும்பும் வகையில் பியாகடையின் பூர்ணப் பொலிவுடனும் இருக்கிறது. ஒரே கீர்த்தனத்தில் பல ரசங்களையும் காட்டும்பொழுது நாம் பரவசம் அடை கிறோம். ராகம் ஒரே ராகம். அதில் எந்த எந்த ஸ்வரத்தில் அழுத்தமும், எந்த எந்த இடத்தில் இரக்கமும் ஏற்றமும் காட்ட வேண்டுமோ அப்படிப் பாவத்திற்கு ஏற்றாப் போல் அமைந்திருப்பது, அநுபவித்து, மெய்ம் மறந்து பாடும் பெரியாரிடம் நாம் கேட்டால் விளங்கும். இதே பியாகடை ராகத்தில் நாதோபாஸகர்களின் சுதந்தரத்தை எடுத்து விவரிக்கிறார்: நாதோபாஸனையில்தான் கடவுளைக் காண முடியும்: வேதங்களைச் செய்தவர்களும், வேதத்துக்கு மேற் பட்டு அதற்கு அதீதமானவர்களும் இந்த இசையின் வாயிலாகத்தான் ஸாயுஜ்யம் அடைந்தார்கள்.

நாதோபாஸன ஜேஸி சங்கர நாராயண விதுலு
வெலகிரி ஓ மனஸா............

இப்பேர்ப்பட்ட நாதோபாஸகர்கள், இசைச் செல்வர் கள், "ஸ்வதந்த்ருலு" தியாகராஜரால் நமஸ்கரிக்கப்பட்ட வர்கள், முக்தர்கள். யாருக்கும் கட்டுப்படாதவர்கள். அவர்களை கட்டிப் பிடிக்க முடியாது.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று கோஷிக்கும் ஸ்வாநுபூதி பெற்றவர்கள். "அவர்களுக்குப் பயம், தாட்சண்யம், கோழைத்தனம், கடைப்பிடித்த வழி யில் தடுமாற்றம் ஒன்றும் ஏற்படாது" என்கிறார். இந்த 'ஸ்வதந்த்ருலு' என்னும் பதத்தை ராகத்துடன் கீர்த்தனை யாகப் பாடும்பொழுது, இவர்களின் 'தன்னையறிந்த' கர்வம்

த்வனிக்கிறது. சங்கீதத்தில் 'ரசம்' என்று சொல்லும் சுவை இதுதான். இப்பேர்ப்பட்ட அழகிய கீர்த்தனங்களைக் கவி இருதயம் அறிந்து அர்த்த புஷ்டியுடனும் ராக புஷ்டியுடனும் பாடினால், நாம் அவைகளின் அழகையும் ஆழ்ந்த கருத்தையும் உணரலாம்.

தியாகராஜ ஸ்வாமிகள் பக்தியிலும் சங்கீதத்திலும் கரை கண்டவர். சொல் அழகும் பொருள் அழகும் தாமாகவே அவர் வாக்கில் வந்து அமைந்திருக்கின்றன. உள்ளத்தில் ஒளி உண்டானால் அது வாக்கில் வெளிக் காட்டித்தானே ஆகவேண்டும்? ஆகையால், அவர் நமக்கு அளித்திருப்பது சங்கீதம் மட்டு மல்ல. வேதாந்த விளக்கம்; பக்தியின் விளக்கம்; இசையின் செல்வம்; கவிதையின் பொக்கிஷம்.

பக்தராய்ப் பணிவார்கள் அடியார்க்கும் அடியேன்
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்

என்று மாணிக்கவாசகர் அருள் வாக்காக அன்றே சொல்லிவிட்டார். திருவாரூரில் பிறந்த ஐயரவர்களின் மகிமையை நினைத்துப் போற்றி, திருவாரூரில் பிறந்த பக்தரான இசை வள்ளலை நாம் உள் அன்புடன் போற்றுவது, அவர் நமக்கு அளித்திருக்கும் பொக்கிஷத்தைக் கவி இருதயம் அறிந்து பாடி அநுபவித்து ரசிப்பதுதாம். இதற்கு ஐயரவர்கள் நமக்கு அருள் புரிவாராக.

*

# குடும்ப வாழ்க்கை

**பத்மஜா**

எனதன்பு மிக்க கமலாவுக்கு,

நீ உன் புருஷன் வீட்டில் சந்தோஷமா யிருப்பதாயும், பெரியவர்களிடத்தில் மிக்க மரியாதையாக நடந்துகொள் வதாயும் சென்ற கடிதத்தில் எழுதியிருந்தாய். மிகவும் சந்தோஷம். நீ எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும், குடும்பங்களில் மனஸ்தாபங்கள் ஏற்படுவது சகஜம். ஆகையால், இத்தகைய மனஸ்தாபங்கள் ஏற்படாம லிருக் கும் பொருட்டு நான் உனக்குச் சில விஷயங்கள் சொல்ல லாம் என நினைக்கிறேன்.

சாதாரணமாகத் தமிழ் நாட்டுக் குடும்பங்களில் மாமி யார், நாட்டுப் பெண்களிடையே பெரும்பாலும் சச்சரவு கள் இல்லாமல் இருப்ப தில்லை. முன்னாட்களிலாவது, மாமியார்கள் நாட்டுப்பெண்களைச் சீர் செனத்தி கொண்டு வரவில்லை என்பதற்காகக் கொடுமைப்படுத்தி வந்தார்கள் என்று சொல்வார்கள். ஆனால், தற்காலத்தில் மாமியார் படுத்துவது என்பது அவ்வளவாக வழக்கில் இல்லை. இருந்தபோதிலும் குடும்பங்களில் சச்சரவுகள் என் னவோ தீர்ந்தபாடில்லை. இதற்குக் காரணம் என்ன? ‘இக் காலத்தில் படித்தப் பெண்களால்தான் குடும்பங் களில் பிளவு ஏற்படுகிறது’ என்று சிலர் சொல்கிறார்கள். இது முற்றிலும் உண்மையல்ல என்று எனக்குத் தோன்று கிறது. படிப்பு என்பது அறிவின் வளர்ச்சியே. உலகத் தோடு ஒட்டி வாழக் கற்றுக்கொள்வதுதான் படிப்பின் நோக்கம். பெரியோர்க ளிடத்தில் மரியாதையாகவும், அவர்கள் சொற்படி அடங்கியும் நடப்பதுதான் அறி

வுள்ள பெண்ணுக்கு அழகு. அப்படியில்லாமல் சில பெண்கள் மாமியாருக்கு அடங்கி நடப்பது தமக்கு மிகவும் இழிவான காரியம் என்று நினைத்துக்கொண்டு இருக்கிருர்கள். ஆகையினுல், தப்பான முறையில் நடந்து, வீட்டில் சண்டையை உண்டாக்குகிருர்கள். இன்னும் சிலர், தாம் அதிகம் படித்துவிட்டதாக எண்ணிக்கொண்டு, வீட்டில் ஒரு வேலையும் செய்யாது, மாமியார், மாமனுரை லட்சியம் செய்யாமல், நாற்காலியில் காலை நீட்டி உட்கார்ந்துகொண்டு எப்பொழுதும் ஏதாவது படித்துக் கொண்டேயிருக்கிருர்கள். இச் செய்கையை அவர்கள் பெருமையாக நினைத்துக்கொள்ளலாமே தவிர, பிறர் பார்த்துப் பெருமைப்படக்கூடிய விஷயமல்ல. இதனுல், வீட்டிலுள்ள மாமியார் ஏதாவது புத்திமதி சொன்னுல், அப் பெண்கள் உடனே எதிர்த்துப் பேசிச் சண்டை செய்து, மாமியார் வீட்டை விட்டுத் தனியாகப் போய் விடுகிருர்கள். இதனுல் தாங்கள் மிகவும் புத்திசாலிகள் என்று நினைத்துக்கொள்கிருர்களே யன்றி, படித்ததனுல் அவர்கள் அடைந்த லாபம், வீண் கர்வமும், மரியாதையின்மையும்தாம். இவ்வாறு சில பெண்கள் நடந்து கொள்வதால், படித்த பெண்களுக்கே கெட்ட பெயர் வந்துவிடுகிறது.

சில பணக்கார வீட்டுப் பெண்கள், பிறந்த வீட்டில் மிகவும் செல்வமாக வேலை செய்யாமல் வளர்ந்ததை நினைத்துக்கொண்டு, மாமியார் வீட்டிலும் மிகவும் கர்வமாக நடந்துகொள்கிருர்கள். வீட்டிலுள்ள மற்றவர்களை வேலைக்காரி போல மதித்துத் தாம் ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருப்பார்கள். அதிகமாகப் பிறருடன் பேச மாட்டார்கள். தம் பிறந்தகத்துப் பெருமையைப் பற்றியே பேசிக்கொண்டு, புக்ககத்தைத் துச்சமாக நினைக்கிருர்கள். தம் மிஷ்டம்போல் மாலை வேளைகளில் கணவ

னுடன் சினிமாவுக்கோ, அல்லது டிராமாவுக்கோ போய்க் கொண்டு தனிப்பட்ட முறையில் நடந்துகொள்கிறார்கள். இதனால், மற்றவர்கள் இவர்களை, 'மகா கர்வி' என்று தூற்றுவது மல்லாமல் லட்சியமும் செய்யமாட்டார்கள்.

ஆகையால், நீ இம்மாதிரியெல்லாம் நடந்து கொள்ளாமல் மிக ஜாக்கிரதையாகப் பழகவேண்டும். புருஷன் வீட்டில் நடந்துகொள்ளும் விதமே ஒரு தனிக் கலை என்று நான் கருதுகிறேன். இம்முறையை நீ ஆரம்பத்திலிருந்தே அநுசரிக்க வேண்டும். அதாவது, நீ புக்ககத்திற்குப் போனவுடன், உன்னை யாவரும் மதிக்கும்படியாக நடந்து கொள்ள வேண்டும். எல்லோருடனும் சகஜமாகப் பழக வேண்டும். உன்னால் முடிந்தவரையில் வீட்டு வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். நீ பிறந்தகத்தில் செல்வமாக வளர்ந்தவளா யிருக்கலாம். இதையே மனத்தில் வைத்துக்கொண்டு எவ்விடத்திலும் ஒரே மாதிரியாக நடந்துகொள்ளக் கூடாது. இடத்திற்கும் காலத்திற்கும் தகுந்தாற்போல் நடப்பதுதான் அறிவுடைமை. இல்லாவிட்டால், நீ வீட்டு வேலைகளில் மிகவும் தேர்ந்தவளா யிருக்கலாம். அப்பொழுது, 'நீ சிறியவள் தானே' என்று நினைத்து உன் மாமியார் ஏதாவது சொல்லிக் கொடுத்தால், நீ அதை அலட்சியம் செய்யக்கூடாது. 'ஆகட்டும்' என்று சொல்லிப் பணிந்து போவதுதான் முறை.

சிலர் புக்ககம் வந்தவுடனேயே குடும்பத்தில் சகல உரிமைகளும் தமக்குத்தான் சொந்தம் என்று நினைத்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள். அளவுக்கு மிஞ்சித் தம் மிஷ்டம்போல் பண்டங்களைக் கொட்டி இறைக்கிறார்கள். அப்பொழுது மாமியார், 'அப்படிச் செலவழிக்காதே' என்று ஏதாவது புத்திமதி சொன்னால், 'இந்த வீட்டுச் சொத்தில் எனக்கும் பாத்திய முண்டு. நீங்கள் பேசாம லிருங்கள்' என்று

சொல்லி அடக்கிவிடுகிறார்கள். இதெல்லாம் மிகவும் அற்பத்தனமான விஷயங்கள். ஆகையினால், நீ பெருந் தன்மையாக நடந்துகொள்ள வேண்டும். உன் கணவர் உனக்கு ஏதாவது சாமான் வாங்கி வந்தால், நீ அதை உன்னை யொத்த நாத்திகள் யாராவது இருந்தால் அவர்களுக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டும். சிலர் இதை யெல்லாம் ஒரு பெரிய காரியமாக மதித்து அற்பத்திற் கெல்லாம் கட்சி பேசுவார்கள். நீ எங்கேயாவது வெளியே போக விரும்பினால், வீட்டிலுள்ள பெண்கள் எல்லோரையும் உடனழைத்துச் செல்ல வேண்டும். நீ இம்மாதிரி யெல்லாம் நடந்துகொண்டால், எல்லோருக்கும் உன் மேல் நல்ல அபிப்பிராயம் ஏற்படும்.

சிலர் ஆரம்பத்தி லிருந்தே மாமியார், நாத்திகளுடன் சேர்ந்து இருக்க விரும்பாமல், தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். ஒரே ஊரில் இருந்துகொண்டு மாமியாரும் மருமகளும் தனித் தனியாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இது அவ்வளவு உசிதமான காரிய மல்ல. எப்பொழுதும் நாம் பெரியவர்களுடன் சேர்ந்து இருந்தால் நமக்கு நன்மையே தவிரத் தீமையில்லை. தெரியாத காரியங்களைச் சொல்லிக் கொடுக்க உதவியா யிருப்பார்கள். தவிரவும், நமக்கு ஒரு நல்ல துணையு மாயிற்று. அவர்க ளிடையே இருந்து நல்ல பெயர் வாங்குவதுதான் நமக்குப் பெருமை. வயசானவர்களுக்குப் பணிவிடை செய்வது என்பது எல்லோருக்கும் கிட்டாத காரியம். ஆகையால், நீ அநாவசியமாகத் தனியாக இருப்பதை விரும்பாதே.

எல்லாவற்றைக் காட்டிலும் மேலாக உனக்கு இருக்க வேண்டியது, எதையும் விட்டுக்கொடுக்கும் சுபாவம். பெண்களே தியாகத்தின் அவதாரம் என்று சொல்வார்கள். உனக்குப் பிடிக்காத விஷயம் ஏதாவது உன்

மாமியார் சொன்னால், நீ அதை எதிர்க்கக் கூடாது. ஒரு குடும்பத்தில் உன் அபிப்பிராயப்படியே எதுவும் நடக்கும் என எதிர்பார்ப்பது தவறு. ஆகையால், சில விஷயங்களை நீ விட்டுக்கொடுத்துத்தா னாகவேண்டும். தப்பித் தவறி ஏதாவது சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டாலும் நீ அதைப் பிரமாதப்படுத்திக்கொண்டு கணவனிடம் போய்க் கோள் சொல்லக்கூடாது. இது மிகவும் ஒழுங்கீனமான செயல். இது மிக விபரீதமாக முடியும். சில கணவன்மார்கள் தாயார் பக்கம் பேசுபவர்களாக இருப்பார்கள். இதனால் அவர்களுக்கு மனைவியின் மேல் வெறுப்பு ஏற்பட்டுவிடும். மற்றும் சிலர் மனைவிமே லுள்ள பிரியத்தினால் தாயாருடன் சண்டை செய்து குடும்பத்தை விட்டுப் பிரிந்து போகிறார் கள். இவ்வாறாகச் சில பெண்கள் தெரியாமல் நடந்து கொள்வதால் இக் காலத்துப் படித்த பெண்கள் எல்லோ ரும் கெட்ட பெயர் வாங்குகிறார்கள்.

நீயும் படித்த பெண்தான். நீ பெரியோர்க ளிடத்தில் மிக்க மரியாதையாக நடந்துகொண்டு நல்ல பெயர் வாங்கவேண்டும். அதுதான் உன்னுடைய படிப்பினால் நீ பெறும் பயன். நீ எவ்வளவோ கெட்டிக்காரியாக இருந்தாலும் அதைப்பற்றிக் கர்வம் கொள்ளாதே. பெரி யோர்கள் சொல்லும் புத்திமதியைக் குற்றமாகக் கொள் ளாதே. சிற்சில குடும்பங்களில் இம்மாதிரியாகப் பெண் கள் அறிவீனமாக நடந்து கொள்வதால் ஏற்பட்டிருக் கும் நிலையைக் கண்டு, நீயும் அம்மாதிரி நடந்துகொள்ளக் கூடாது என்று, எனக்குத் தெரிந்த விஷயங்கள் சில வற்றை உனக்கு எழுதி யிருக்கிறேன். நீ என் வார்த்தை களுக்கு மதிப்பு வைப்பா யென்று நம்புகிறேன்.

இப்படிக்கு உன் அன்புள்ள
சகோதரி.


# தோல்வி

"ஹரிணி"

'தற்கொலை! தேவி புவனேஸ்வரி எம். ஏ., எல். டி. தற்கொலை செய்துகொண்டார்' என்னும் விஷயத்தைக் கேட்டதும் நான் ஒரு நிமிஷம் பிரமித்து நின்றுவிட்டேன். இதைக் கேட்ட அந்த ஊர் ஜனங்களும் அதிசயத்தில்



ஆழ்ந்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால், ஜனங்களுடைய அந்த அதிசய உணர்ச்சி இரண்டொரு





தினங்களில் மறைந்துவிடலாம். ஆனால்......ஆனால், என்னுடைய ஆச்சரியம், என்னை விட்டுவிலகவே முடியாது. என்னுடைய அந்த அதிசய உணர்ச்சி எல்லையற்ற ஒரு சாபம். அதில் கண்டுகொள்ள முடியாத ஒரு புதிர் ஒளிந்திருந்தது. எவ்வளவு முயன்றாலும் அதை அழிக்கவே முடியவில்லை.

அந் நகரத்தில் மிகப் பிரசித்தியுடன் விளங்கிவந்தது மகிளா வித்யாலயம். அந்த வித்தியாலயத்தின் தலைமை உபாத்தியாயினிதான் புவனேஸ்வரி தேவி. படிப்பில் உயர்ந்தவள். ஞானத்தில் சிறந்தவள். சமூகப் புரட்சியில் தீவிர நம்பிக்கை யுள்ளவள். நல்ல அழகியும்கூட. தந்தப் பதுமைபோன்ற உடல். அவளுடைய ஆழ்ந்த ஞானம் நிறைந்த வீர ஒளி வீசும் அந்தக் கண்களையும், இனிமையும், அழுத்தமும் கலந்து ஒலிக்கும் பேச்சையும் கண்டதுமே, எதிரே யுள்ளவர்களின் மனத்தில் ஒரு விதப் பயமும், அன்பும், மரியாதையும் உண்டாகிவிடும்.

நான் அவளை அடிக்கடி சந்திப்பதுண்டு. ஆனால், ஒரு நாளாவது அவளை நேருக்கு நேராகப் பார்க்கக்கூடிய அவ்வளவு தைரி

யம் எனக்கு ஏற்படவேயில்லை. அவள் ஒரு வீர கன்னிகை யாகவே இருந்தாள். எனக்குத் தெரிந்தவரை அவள் தன் கன்னித் தன்மையை வெகு பத்திரமாகப் பாதுகாத்து வந்தாள். அவளுடைய வாழ்க்கையில் முயற்சியும், நம்பிக்கையும் கலந்திருந்தன. புருஷர்களுக்கும், பெண்களுக்கும் ஏற்படும் அதிகார விஷயமான சண்டைகளி லெல்லாம், புவனேஸ்வரிதான் பெண் சமூகத்தின் பிரதிநிதி. அவளிடம் தைரியமும், ஊக்கமும், தன்னம்பிக்கையும் குடிகொண் டிருந்தன.

மனிதனுடைய வாழ்க்கையே விசித்திரம். க்ஷண நேர உணர்ச்சியின் வசப்பட்டு, பரஸ்பரம் மோதி உடையும் எண்ணங்களினுல் ஆளப்படுகிறவன்தான் மனிதன்.

புவனேஸ்வரி தேவி தற்கொலை செய்துகொள்வதற்கு முன்பாக எழுதிய கடிதத்தி லிருந்து இது நன்ருகத் தெரிய வருகிறது. அந்தக் கடிதம் ஒருவருக்கும் எழுதப்பட வில்லை. அதைக் கடிதம் என்றுகூடச் சொல்ல முடியாது. ஒரு கதையோ, கட்டுரையோ என்று சொல்லும்படி அமைந்திருந்தது அது. தன் உணர்ச்சிகளை எல்லாம் அதில் அள்ளிக் கொட்டியிருந்தாள் :

" இன்றுதான் என்னுடைய முடிவு நாள். நான் வாழ்க்கையின் கடைசி யாத்திரை செல்லத் தீர்மானித்து விட்டேன். இதைப்பற்றி நன்ருக யோசித்து, நிச்சயம் செய்த பிறகுதான் செல்லத் தீர்மானம் செய்தேன். நான் மன அமைதியுடனும், சுய புத்தியுடனும்தா னிருக்கி றேன்.

" இப்பொழுது சில தினங்களாகவே என் மனத்தில் ஏதோ ஒரு துன்பம் - சகிக்க முடியாத துன்பத்தின் வேதனை - என்னைப் பைத்தியமாகச் செய்துகொண் டிருக்கிறது. என் மனத் திரையில் ஒரு பெரிய கேள்விக் குறி தோன்றியது. அது தோல்வியா, அல்லது மரணமா

என்பதுதான். இன்றுதான் நிச்சயம் செய்தேன். ஆகையால் நான் அமைதியாக இருக்கிறேன். மரணத்தில்தான் சாந்தி யிருப்பதாக எனக்குத் தோன்றியது. வாழ்க்கையில்......இல்லை...வாழ்க்கை என்பதே ஒரு தோல்விதான்.

"ஆம். நான் சாகத்தான் வேண்டும். என்னுடைய நம்பிக்கை உடைந்து சிதறிவிட்டது. என்னுடைய லட்சியம் தவறிவிட்டது. நான் ஒரு புதிய பிறவியாகி விட்டேன். பலஹீனமான—தோல்வியுற்ற தன்மையை—என்னால் சகிக்க முடியவில்லை.

"இன்று என் வாழ்க்கையின் சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக என் கண்முன் தோன்றிக்கொண் டிருக்கின்றன. ஆனல், அவைகள்கூட என்னை உயிர் வாழத் தூண்டவில்லை. நான் எனக்கென்று ஒரு லட்சியத்தை ஏற்படுத்தி யிருந்தேன். அது என் கண்முன் இடைவிடாமல் நின்றுகொண் டிருக்கிறது. இதுவரை அதே வழியில்தான் ஈடுபட் டிருந்தேன். அதி லிருந்து விலகிச் செல்ல எனக்கு இஷ்ட மில்லை.

"நான் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண் டிருந்தேன். அச் சமயம் நான் சிறு பெண். அப்பொழுதெல்லாம் இந்த உலகம், மிக்க அழகாகவும், ஆசைகள் நிறைந்ததாகவும், சுகபோகங்கள் நிறைந்ததாகவும் எனக்குத் தோன்றியது. நான் சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் முன்னேக்கிச் சென்றுகொண் டிருந்தேன். ஏதோ சில முக்கியமான வேலைகளைச் செய்வதற்காகவே நான் பிறந்திருப்பதாக நினைத்தேன். ஆனல், அந்த வேலை என்ன என்பதுதான் அப்பொழுது தெரியவில்லை. ஆனல், என் உள்ளுணர்ச்சி 'முன்னேக்கிச் செல். முக்கியமான வேலை இருக்கிறது!' என்று என்னைத் தூண்டியது. உலகத்தில் அழிவற்ற ஞானக் களஞ்சியம் எனக்காகத் திறக்கப்பட் டிருந்தது.

"நான் மெல்ல மெல்ல வளர்ந்து வந்தேன். நான் வளர வளர, மெல்ல உணர்ச்சிகளுக்கு அடிமையாகி வருவதையும் உணர்ந்தேன்.

"உலகம் கபடம் நிறைந்தது. சுயநலம் கலந்த யுத்தத்தின் மற்ருெரு பெயர்தான் உலகம். எதைத் தியாகம், ஆத்ம சமர்ப்பணம், விருப்பம் என்று சொல்லுகிருர்களோ அது பலஹீனத்தின் அடையாளம்; பலஹீனத்திற்கு அடிமை. பெண்களே அடிமைகளாகச் செய்த குற்றம் ஆண்களைச் சேர்ந்த தல்ல. ஸ்திரீகள் தாமாகவே இந்த எண்ணங்களுக்கு வசப்பட்டு அடிமையாக்கிக்கொண்டார்கள். அடிமையாகாவிட்டால், வீரப் பெண்களாக இருத்தல் வேண்டும். வீரப் பெண்களாக இருக்கவேண்டுமாளுல், வஞ்சனே, சுயநலம், பிறரை ஆட்டிவைக்கும் சக்தி ஆகியவைகள் கட்டாயம் இருக்க வேண்டும்.

"நான் அச் சமயம் காலேஜில் சேர்ந்து படித்துக் கொண் டிருந்தேன். தேசத்தில், பெண்கள் விடுதலே என்ற கோஷத்தின் அலேகள் பரவியிருந்தன. நானும் அதில் தலேயிட்டேன். மனிதத் தன்மையை நிலேநாட்ட என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்யத் தீர்மானித்தேன். ஸ்திரீகளே அடிமைத் தளேயி லிருந்து விடுவிப்பது, அவர்களுக்கு அதிகாரத்தின் அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறுவது முதலிய வேலேகள்தாம் என்னுடைய லட்சியம். நான் புருஷர்களே ஜன்ம விரோதிகள் என்று நினேக்கவும் தொடங்கினேன்.

"நான் அதிக ஊக்கத்துடன் இன்றைய நிலேயை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தேன். சகிப்புத் தன்மையும், எல்லேயற்ற தியாக உணர்ச்சியும்தாம் பெண்களின் வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிந்தது. இந்தக் காரணங்களிஞலேயே புருஷர்கள் பெண்களே வெறுக்கத்

தக்க வாழ்க்கையை நடத்தக் கட்டாயப்படுத்துகிறார்கள். நான் அநேக விதவைகளையும், வேசிகளையும்கூடப் பார்த்திருக்கிறேன். எங்கும் புருஷர்கள்தாம் எஜமானர்கள். ஏனோ?

"அவர்கள் பெண்களைக் கௌரவிப்பதில்லை. அவர்களைத் தம்முடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் என்று நினைக்கிறார்கள். தாயாருக்கும் அதே கதிதான். பாவம்! பெண்கள் எவ்வளவு பராதீனமாயிருக்கிறார்கள்! எவனுக்காகத் தன்னுடைய சகல சுகத்தையும் தியாகம் செய்கிறாளோ, எல்லா விதக் கஷ்டங்களையும் சகித்துக் கொள்கிறாளோ, அவன்—அதே புருஷன்—மிருகத்திற்குச் சமானமாக நடந்துகொள்ளுகிறான்.

"ஆம்; எதுவரை பெண்குலம் தன்னுடைய அதிகாரத்தையும், சக்தியையும் அறியவில்லையோ,அதுவரை அவர்கள் அடிமைகளாகத்தான் இருக்கவேண்டும் என்பது என் நம்பிக்கை. ஆகவே, இது விஷயமாகப் பிரசாரம் செய்ய எண்ணினேன். அதற்குத் தகுந்த இடம் பெண்கள் படிக்கும் 'காலேஜ்'தான் என்றும் தீர்மானித்தேன்.

"என் பெற்றோர்கள் எனக்கு விவாகம் செய்ய விரும்பினர். ஒவ்வொரு பணக்கார வீட்டுப் பிள்ளையும் என்னிடம் காதற் பிச்சை கேட்க வந்தார்கள். ஆனால், நான் அதை உதைத்துத் தள்ளிவிட்டேன். என் காலடியில் கர்வமுள்ள புருஷர்களுடைய பணம், சக்தி, ஞானம் எல்லாம் தோல்வியடைந்து திரும்பி விட்டன. நான் என் பிடிவாதத்திலிருந்து நழுவவில்லை. விவாகம் செய்து கொள்ளாமல் என் லட்சியத்தை நிறைவேற்றுவதிலேயே கவனமாயிருந்தேன்.

"என்ன அதிசயம்! திடீரென்று ஒருநாள், என்னுடைய தவம் நஷ்டமடைந்துவிட்டது. அது பயங்கரமாக நசுக்கப்பட்டுவிட்டது.

"ஆறு மாசங்களுக்கு முன்புதான் இது நடந்தது. ஆம்; அன்றுதான் அவன், அந்த அழகிய வாலிபன், தன்னுடைய தங்கையைக் 'காலேஜி'ல் சேர்ப்பதற்காக வந்திருந்தான். அந்த வாலிபன் என்னைக் கண்டதும் வணக்கமாக வந்தனம் செலுத்திவிட்டு, எதிரிலுள்ள நாற்காலியில் அமர்ந்தான். பிறகு, 'நீங்கள்தாம் இந்த வித்தியாலயத்தின் தலைமை உபாத்தியாயினி புவனேஸ்வரி தேவியோ? நான் என் தங்கையை இங்கே சேர்க்க வேண்டுமென்று வந்திருக்கிறேன்' என்றான்.

"நான் அவனை லட்சியம் செய்யாமல், அவனருகில் நின்றுகொண்டிருந்த பெண்ணை உற்றுக் கவனித்தேன். பெண் அழகாகவும், புத்திசாலியாகவும் காணப்பட்டாள்.

"'உன் பெயரென்ன?' என்று கேட்டேன், 'கல்யாணி!' என்றாள் மெதுவாக. பிறகு அவளைப் பரீட்சை செய்வதற்காக மற்றொரு உபாத்தியாயினியிடம் அனுப்பினேன். அந்த வாலிபன் அங்கேயே உட்கார்ந்து கொண்டு பத்திரிகை படிப்பதில் ஈடுபட்டிருந்தான்.

"நான் அவனைக் கவனித்தேன். அவன் படிப்பிலேயே ஆழ்ந்திருந்தான். இந்த ஆண் பிள்ளைகளை எனக்கு நன்றாகத் தெரியும். யாராவது ஓர் அழகிய பெண்ணைக் கண்டுவிட்டால், வெட்கமில்லாமல் பசியுள்ள புலியைப் போல் அவர்களை உற்றுப் பார்ப்பார்கள். ஆனால், இந்த வாலிபனுடைய சாந்தமும், நாகரிகமும் உள்ள நிலையைக் கண்டு நான் ஆச்சரியத்தினால் திகைத்துப் போனேன்.

"பிறகு என் வேலையைத் தொடங்கினேன். சிறிது நேரத்திற்குப் பிறகு நான் தலை நிமிர்ந்ததும், அந்த வாலிபன் வீட்டின் மேற்பகுதியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதையே பார்த்தேன். எனக்குப் பேசாமலிருக்க முடியவில்லை. சிரித்துக்கொண்டே, 'என்ன, நீங்கள் பத்திரிகையை படித்து முடித்துவிட்டீர்கள்

போலிருக்கிறதே?' என்றேன். அவனும் சிரித்துக் கொண்டே, 'அதில் ஒரே ஒரு கட்டுரைதான் படிக்கத் தகுதியுள்ளது. மற்றவை உபயோகமில்லை. அந்தக் கட்டுரையை படித்து முடித்துவிட்டேன்' என்றான். அவன் எதைப்படித்திருப்பான் என்று எனக்குத் தெரியுமானாலும் 'அது எது?' என ஒன்று மறியாதவள்போல் கேட்டேன்.

''அவன் சற்றுத் தயங்கிய வண்ணம், 'அதுதான், தங்களுடைய, 'ஆண்கள் மிருகங்கள்' என்னும் கட்டுரை. கூடவே பிரசுரகர்த்தரின் அபிப்ராயத்தையும் படித்தேன்' என்றான். 'அதைப்பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?' என்று மெல்லக் கேட்டேன். 'என்னுடைய அபிப்ராயமா? ஆம், நீங்கள் கூறுவதிலும் பாதி உண்மை யிருக்கத்தானிருக்கிறது. ஆனால், அதைப் பற்றி நான் ஒன்றும் கூற முடியாது. ஏனென்றால், ஸ்திரீகளிடம் விமர்சன விஷயமாகப் பேசச்கூடிய சக்தி எனக்குக் கிடையாது. தவிர, உண்மையை அறிந்து கொள்ளக்கூடிய பொறுமையும் கிடையாது. ஸ்திரீகளிடம் ஒரே ஒரு வஸ்துத்தா னிருக்கிறது; அதுதான் உணர்ச்சி. அந்தப் பிரசுரகர்த்தரை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. அவர் தங்களைப் புகழ்ந்து இந்தச் சாரமற்ற விமர்சனத்தை எழுதி விட்டாரே!' என்றான்.

''எனக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. நேருக்கு நேராக அவன் என்னை அவமானப்படுத்தி விட்டான். 'என்ன மனிதன், துளிக்கூட மட்டுமரியாதை தெரியாமல்!' என்று எனக்கு எரிச்சலா யிருந்தது. 'நீங்கள் உங்களுடைய தங்கையை என்னுடைய பொறுப்பில் விடப்போகிறீர்கள். என் அபிப்பிராயமும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆகவே, நான் உங்களை எச்சரிக்கை செய்கிறேன். யோசியுங்கள்' என்றேன் அழுத்தமாக. அவன் சிரித்தான்; பதில் பேசவில்லை.

"சற்று நேரத்திற்குப் பிறகு, 'தேவி! படிப்புக்கும், மனோபாவத்திற்கும் சம்பந்த மில்லை. படிப்பினால் மனத்தி லுள்ள அபிப்பிராயத்தை மாற்ற முடியாது. பெண்கள் பல மற்றவர்கள். அவள் சகாய மற்றவள். அவள் அடிமையாகத்தான் இருந்தாக வேண்டும். அவர்க ளுடைய அடிமைத்தனத்தை நீக்க உங்களால் எப்படி முடியப்போகிறது?......'

"இதற்குள் கல்யாணி உபாத்தியாயினியுடன் அங்கு வந்தாள். அவன் பேச்சு முடிவடையாமல் நின்று விட்டது. நான் கல்யாணியின் பெயரைப் பதிவு செய்து கொண்டேன். பிறகு, அவன் புறப்பட்டுச் செல்லும் எண் ணத்துடன் எழுந்து நின்று, எனக்கு வந்தனமளித்து, 'தேவி! வந்தனம்! என்னுடைய பேச்சை முடித்து விடுகிறேன். மன்னிக்கவும். ஸ்திரீ புருஷர்களுடைய விஷ யத்தில் மட்டும் நீங்கள் ஏன் அடிமைத்தனத்தைப் புகுத் திப் பேசுகிறீர்கள்? அடிமைத்தனம் என்பது மனித குலத்துக்கே பிறப்புரிமை. ஸ்திரீ ஒரு புருஷனிடம் அடிமை யாக இருப்பதற்கு ஏன் ஆசைப்படுகிறாள்? உங்களுக்கு விவாகமாகவில்லை என்று நினைக்கிறேன். ஆகையால், நீங்கள் உங்கள் கணவருக்கு அடிமையா யிருக்கவேண்டிய கஷ் டம் ஏற்படவில்லை. ஆனால், இந்தப் பள்ளிக்கூடத்தின் மேலதிகாரிகளுக்கு நீங்கள் அடிமைதானே? அவர்கள் உங்களை மிரட்டலாம், இன்ஸ்பெக்டர் உங்களைக் கேள்வி கேட்கலாம், டைரக்டர் உங்களை உத்தரவிடலாம் அல்லவா?

"'புருஷர்களைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். அவர்களுக்கு எத்தனை எஜமானர்கள்! பணத்தைச் சேக ரிப்பதற்குள் எவ்வளவு அவமரியாதைகளைச் சகிக்க வேண்டி யிருக்கிறது? இதைப்பற்றி எவ்வளவோ பேச லாம். மன்னிக்கவேண்டும். நான் போய்வருகிறேன்' என்று கூறியவண்ணம் சென்றுவிட்டான்.

"அன்று முழுவதும் என் மனத்தில் ஒரே போராட்டம். அவன் என்னை அவமதித்துவிட்டான். என் உற்சாகம் மறைந்துவிட்டது. அன்று என்னுடைய கட்டுரையைப் பற்றிப் பாராட்டுக் கடிதங்கள் வந்துகொண்டிருந்தன. ஆனாலும், அந்த இளைஞனிடம் நான் அடைந்த அபஜயத்தை என்னால் மறக்கவே முடியவில்லை. படிப்பிலும் மனம் செல்லவில்லை. அவனுடைய துணிச்சலைக் கண்டு நான் அதிசயமடைந்தேன். பழிவாங்கும் எண்ணம் பொங்கி எழுந்தது. மனத்தில் என்னை அறியாமல் ஒரு வேதனை முளைத்தது.

"நாட்கள் ஓடின. அவன் திரும்பிவரவே யில்லை. நானும் மெதுவாக அவனை மறக்கத் தொடங்கினேன். ஆனால், ஒரு நாள் அவனை மறுபடியும் திடீரென்று சந்திக்க நேர்ந்தது. கடவுளின் எண்ணம் ஏனோ அப்படியிருந்தது.

"ஒரு நாள் இரவு பதினொரு மணி. நானும் என் சிநேகிதியும் விருந்திற்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்தோம். வண்டி கிடைக்கவில்லை. மெதுவாக நடந்து வந்துகொண்டிருந்தோம். வழியிலுள்ள தோட்டத்தில் இருவர் உட்கார்ந்திருந்தனர். எங்களைக் கண்டதும் அவர்களில் ஒருவன் எழுந்தான். நான் பயந்துவிட்டேன். என் சிநேகிதி கமலா நடுங்கி ஓட ஆரம்பித்தாள். நானும் அவளைப் பின்தொடர்ந்தேன். உடனே அவர்களில் ஒருவன் ஓடிவந்து எங்களை வழி மறித்தான். நான் கூச்சலிட்டேன். என் தைரியமும், சக்தியும் எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டன.

"திடீரென்று என்னைப் பிடித்தவன் கீழே தள்ளப்பட்டான். மற்றவன் ஓடிவிட்டான். அப்பொழுது அங்கே காணப்பட்ட அந்த மூன்றுவது மனிதன், 'அம்மா, உங்களுடைய தைரியத்தை நான் மெச்சுகிறேன்.

ஆனாலும், இந்த வேளையில் நீங்கள் தகுந்த துணையின்றி இந்த வழியில் வந்தது முட்டாள்தனம்' என்று இனிமையாகவும், கம்பீரமாகவும் சொன்னான்.

"இருட்டில் நன்றாக பார்க்க முடியவில்லை. இருந்தாலும் அந்தக் குரல் என்னை ஒரு விநாடி பிரமிக்கச் செய்துவிட்டது. அவன்தான் கல்யாணியின் தமையன். என்னை அவமானப்படுத்திய அதே வாலிபன். அவன் மறுபடியும், 'அம்மணீ! மறுபடியும் இதுமாதிரி நேராமவிருக்க வேண்டும். நான் பள்ளிக்கூடம் வரை உங்களுக்குத் துணையாக வருகிறேன்' என்றான். நான் பேசவில்லை. பள்ளிக்கூடத்தை அடைந்ததும், நாங்கள் அவனுக்கு வந்தனம்கூடச் சொல்ல மறந்து, உள்ளே ஓடிவிட்டோம். அவ்வளவு பயம்.

"சற்று நேரத்திற்குப் பிறகு, என் சிநேகிதி, 'அடாடா! அவருக்கு வந்தனம் சொல்லக்கூட மறந்துவிட்டோமே! இன்று அவர் வந்திருக்காவிட்டால்?' என்றாள். அவள் குரல் நடுங்கியது.

"அன்று இரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. பலவிதமான, தொடர்ச்சியற்ற—அர்த்தமற்ற—எண்ணங்கள். என்னை யறியாமலே என் மனத்தில் அவனை மறுபடியும் பார்க்க வேண்டுமென்ற ஆவல். என் சிநேகிதியிடம் காலையில் எழுந்ததும், 'அந்த வாலிபனை எனக்குத் தெரியும். நம்முடைய கல்யாணியின் சகோதரன் தான் அவன்' என்றேன்.

"அப்படியானால், நாம் இருவரும் சேர்ந்து அவருக்கு நமது வந்தனத்தைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினால் என்ன?" என்றாள் அவள்.

"அவன் செய்த உதவிக்கு அதுகூடப் போதாது. ஒரு விருந்து வைத்தால் என்ன?" என்றேன்.

"அவள் என்னை உற்றுக் கவனித்தாள். பிறகு,

'எனக்குச் சம்மதம்தான். உனக்காகத்தான் தயங்கினேன். புருஷர்களிடம்தான் உனக்கு.........' என்றாள்.

"சரி! அதிருக்கட்டும். இப்பொழுது ஆகவேண்டிய வேலையைப் பார்" என்று கூறியவண்ணம் எழுந்து வெளியே சென்றேன்.

"அடுத்த நாள் சாயங்காலம். அவன் வந்தான். சாப்பாடு முடிந்தது. வெளி மாடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். நான் அவனைக் கண் கொட்டாமல் பார்த்தேன். அன்றுதான் முதல் முதலாக அவனுடைய அழகு என்னை வசீகரித்தது. அவன் நல்ல பலசாலியாகவும், சாமர்த்தியசாலியாகவும் காணப்பட்டான்.

"என் மனம் என் பிடியிலிருந்து நழுவ ஆரம்பித்தது. நதியின் ஓட்டத்தில் சிக்கிய துரும்புபோல் நான் இழுத்துச் செல்லப்பட்டேன். அவனை அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தேன். என் மனம் அவனிடமே சுற்றியது. நான் அதைத் தடுக்க முயன்றேன். ஆனால், முடியவில்லை. ஆரம்பத்தில், 'இது சாதாரணமான நட்புத்தான். இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை' என்று என் மனத்தை ஏமாற்றிக்கொண்டிருந்தேன். ஆனால்—ஆனால்...எவ்வளவு நாட்கள்தாம் இப்படி ஏமாற்ற முடியும்?

"அவனை ஒருநாள் பார்க்காவிட்டால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிட்டதுபோலிருக்கும். மனம் நிலைகொள்ளாது. அவனைப் பார்த்துக்கொண்டும் அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டும் இருக்க வேண்டுமென்ற ஆசை அதிகமாயிற்று. பள்ளிக்கூடத்தில் வேலையே ஓடவில்லை.

"கடைசியில், பதினைந்து நாட்களுக்கு முன்பாக அவன் என்னை விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதாகச் சொல்லி அதற்கு என் சம்மதத்தையும் கேட்டான். அவனிடம் என்ன தான் மந்திர சக்தி

யிருந்ததோ, 'முடியாது' என்று சொல்ல என்னல் முடியவில்லை. 'எனக்குச் சம்மதம்' என்று கூறிவிட்டேன். எந்த அடிமைத்தனத்தை நான் வெறுத்தேனே, எதற்காக நான் இவ்வளவு விரோதமாக எழுதினேனே, அதே அடிமைத்தனத்தை நான் சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளத் தயாராகிவிட்டேன். அப்பப்பா! என்ன பயங்கரமான வீழ்ச்சி!

"இப்பொழுது என் முன்னல் ஒரே ஒரு கேள்விதான் பாக்கி யிருக்கிறது. நான் என் தோல்வியை ஒத்துக் கொள்வதா என்பதுதான் அது. அவனை விவாகம் செய்துகொள்ளுவது என்றால் என்ன? அதுதான் என் தோல்வி. என்னல் அதைத் தடுக்க முடியா தென்று தெரியும். அவன் என்னை எப்படி நடத்தினலும், அதிகாரம் செய்தாலும் நான் அதை மௌனமாக, அலுக்காமல் சகித்துக்கொள்ளத் தயாரா யிருந்தேன்.

"அவன் என் தெய்வம். என்னை அவனுக்குச் சமர்ப் பணம் செய்துவிட்டேன். ஆம், இன்றுதான் அந்தப் பயங்கர உண்மையைக் கண்டுகொண்டேன். 'ஸ்திரீ, புருஷ னுடைய அடிமையாக இருக்கவே படைக்கப்பட்ட வள். புருஷ னில்லாமல் ஸ்திரீயின் வாழ்க்கை ஒளி பெறுது; அந்த அடிமைத்தனத்தில் இன்ப மிருக்கிறது; சுக மிருக்கிறது; கௌரவ மிருக்கிறது;' என்ற உண்மையை நான் அறிந்துகொண்டேன்.

"ஆனல், என் மனம் அலை பாய்ந்தது. என் முன்னே இரண்டு வஸ்துக்கள்தா மிருந்தன. ஒன்று தோல்வி; மற்றது, மரணம். இவ் விரண்டில் எனக்கு வேண்டியது எது? நான் வெகு நேரம் யோசித்தேன். கடைசியில் மரணத்தைத்தான் தேர்ந்தெடுத்தேன்."

—புவனேஸ்வரி"

இந்தக் கடிதம் ஒரு முடிவில்லாத, நீண்ட சம்பவத்தின் தொடர்ச்சி. அன்றுதான் நான் வெளியூரி லிருந்து திரும்பி வந்தேன். இரவு வெகு நேர மாகிவிட்டது. யாரோ தட தடவென்று கதவைத் தட்டினர். உடனே "டாக்டர், டாக்டர்!" என்று கூச்சலிட்டனர்.

நான் கீழே சென்று கதவைத் திறந்ததும், கண்ணீர் ததும்ப நிற்கும் பெண் பாடசாலையின் வேலையாள் முனி யனைக் கண்டேன். "என்னப்பா! என்ன விஷயம்?" என்றேன்.

"அம்மா விஷத்தைச் சாப்பிட்டுவிட்டார்கள். சீக் கிரம் புறப்பட்டு வாருங்களேன்" என்றான்.

நான் உடனே அவசரமாகச் சில மருந்துகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன்.

அறைக்கு வெளியே பெண்கள் கூட்டமாக நின்று கொண் டிருந்தனர். உள்ளே புவனேஸ்வரி அலறிக்கொண் டிருந்தாள். என்னைக் கண்டதும் அவள், "டாக்டர்! என்னைக் காப்பாற்றுங்கள். என் ரமேஷ் வந்தாரா? அவரைக் கூப்பிடுங்களேன். நான் சாக விரும்பவில்லை. எனக்கு மரணம் வேண்டாம்" என்று கூச்ச லிட்டாள்.

வாந்தி எடுப்பதற்காக ஒரு மருந்தைக் கொடுத்தேன். அவள் வேதனை தாங்காமல் கூச்ச லிட்டாள்.

"ரமேஷ்! ரமேஷ்! ஓடி வாயேன்! சாவு என்னை இழுத்துச் செல்லுகிறது. ரமேஷ்! சீக்கிரம், சீக்கிரம்!" என்று அலறினள். அடுத்த நிமிஷம் அவள் தலை தலையணை யில் சாய்ந்துவிட்டது. பெண்களும், உபாத்தியாயினிகளும் ஓ வென்று அலறி அழுது கூக்குர லிட்டனர். என்னல் அங்கே நிற்க முடியவில்லை.

—(ஹிந்திக் கதையை தழுவியது)

✲

# இல்வாழ்க்கை: ஒரு பயிற்சி

*சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்*

**ந**ல்ல முறையில் இல்லறம் நடத்தி உள்ளம் பக்குவம் அடைந்தபின்னரே துறவு நிலையானது உண்மைப் பயன் தரும் என்பது நம்முடைய தரும நூல்களின் முடிபு. இல்லற வாழ்வினால் மனம் எவ்வாறு பக்குவம் அடையும்? ஒருவன் தன் மனைவியிடம் அன்பு செலுத்தித் தன்னைத் தான் ஓரளவு மறக்கவும் துறக்கவும் கற்றுக்கொள்கிறான். அவ்வாறே குடும்பத்தின் நன்மை, குலத்தின் நன்மை, விருந்தினரின் திருப்தி முதலியவைகளும் 'தான்' என்னும் வலையினின்று வரவர வெளியேற மனிதனுக்குப் பயிற்சி தந்து வழிகாட்டுகின்றன. இல்லற வாழ்வுக்குரிய அன்புகள் அனைத்தும் பேரன்புக்கு ஒரு பயிற்சியே யாகும். இந்தப் பயிற்சியைச் சரிவரப் பெற்ற பின்னேரே, உள்ளத்தில் ஞான ஒளிக்கு வாய்ப்பு ஏற்படும்.

மக்கள், மனைவி, கணவன், குலத்தார், ஊரார், தேசத்தார் என்றெல்லாம் கருதிக் கவலைப்பட்டு, அன்பும் பணியும் செய்தால் அப்பொருள்களில் மறைந்து உள்ளூடு நிற்கும் மெய்ப்பொருளைக் காணும்படியான அறிவு உண்டாகும். ஆனால், இதற்கு இல்லற வாழ்வை அறவழியில் நடத்தி, வரவரப் பற்றுக்களைக் கழற்றும் பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

யாஜ்ஞவல்கியர் இல்லற வாழ்வு முடித்துவிட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்து, மனைவி மைத்திரேயியைப் பார்த்து உபதேசித்தது, இந்த உண்மையையே. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

கணவனைக் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல; பரமாத்மாவைக் காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன் மனைவியைக் காதலிப்பதும் இதற்காகவே. இதுவே காதலின் பயனும் உண்மைப் பொருளும் ஆகும். பெற்ற

மக்களிடம் உள்ளங்கரைவதும் இதற்காகவே. செல்வத்தை விரும்புவதும் இதற்காகவே. மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள் இவைகளினுள் நிற்கும் பரம்பொருளைக் கண்டு அதனுடன் கலந்து ஒன்றுவதற்கு, உள்ளம் பொங்கவேண்டும். இந்தப் பயிற்சி பெறுவதே அவைகளைக் காதலித்து அநுபவித்து வாழ்வதன் உண்மைப் பயன். குலாபிமானம் ஜாதியபிமானமுங்கூடப் பாரமாத்மிக பக்திக்குப் பயிற்சியே யாகும்.

எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் கண்டு காதலிக்கவே வேதம் ஓதுதல், கலைகள் கற்றல், பூததயை முதலியன அமைந்திருப்பதாகக் கருதுவாய். பரம்பொருளை மறந்து, வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும், அது ஏமாற்றத்தையே தரும்.

பரம்பொருளைத் தனியாகக் காணவோ, அடையவோ மனித வாழ்வில் முடியாது. மற்றப் பொருள்களில் அது உள்ளூடு நிற்பதை அறிந்து அப் பொருளின் வழியாகவே அதை அடைய முடியும். பேரிகையிலும் சங்கிலும் ஒலி உண்டாகிறது. ஒலியை மட்டும் எடுத்துப் பிடித்துக் கொள்ளமுடியாது. சங்கையும், பேரிகையையும், அவற்றை கோஷிக்கச் செய்பவனையும் அடைந்து, ஒலியைப் பெறலாம். வீணையின் நாதத்தை மட்டும் தனியாக எடுத்து வைத்துக்கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தையும் கேட்கலாம். இவ்வாறே பரம்பொருளையும் காணலாம்.

# சிநேகம் பிடிக்கும் கலை

கே. வி. ராஜலக்ஷ்மி

நம் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் புதிதாக யாராவது குடித்தனம் வந்திருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுடன் முதன் முதலாகச் சிநேகம் செய்துகொள்வதற்கான சில அரிய, பெரிய யோசனைகளைக் கூற எண்ணுகிறேன். ("உங்கள் யோசனையைக் கேட்டுக்கொண்டாவது சிநேகம் செய்துகொள்ளா விட்டால் என்ன?" என்று நீங்கள் நினைக்கலாம். அவ்வளவு பொறுமையாகப் பேசாம லிருக்கத்தான் நம்மால் முடியாதே!)

இந்த வித்தை(கலை?)யிலே எங்கள் அம்மாமி நிரம்பக் கெட்டிக்காரி. பக்கத்து வீட்டுக்காரி வந்து இரண்டு, மூன்று நாள் வரை, அவளாகவே பேச வருகிறாளா என்று, பல்லைக் கடித்துக்கொண் டிருப்பாள். அதற்கு மேல் நிலைகொள்ளாது. அடுத்த வீட்டுக்காரியினிடம் ஏதாவது ஒரு சாமான் கடன் வாங்கிவரச் சொல்லித் தன் பெண்ணை அனுப்புவாள். (அந்தச் சாமான் வீட்டில் நிறைந்திருக்கும்; அதனா லென்ன?) அன்று சாயந்திரமே தான் நேரில் சாமானைக் கொடுப்பதுபோல் போய், ஆளைச் சிநேகம் பிடித்துக்கொள்வாள்.

என் அத்தை இப்படிச் செய்யமாட்டாள். அடுத்த வீட்டு அம்மாமி வாசலில் வந்து நின்றாலே போதும். "ஏண்டியம்மா! நீ வந்து எங்கள் காமுவின் நாத்தனாரின் மாட்டுப் பெண்ணுக்கு அம்மாஞ்சி அகமுடையாள் தானே?" என்று ஏதேனும் கேட்டு வைப்பாள். அவள் இல்லை என்று சொன்னால்கூட, மேலும் விடாமல் "என்னமோ, அவள் மாதிரியே இருந்தது. அதுதான் கேட்டேன்" என்று சொல்லிவைத்து, அவளுடைய

பூர்வோத்திரங்களை யெல்லாம் விசாரித்துப் பழக்கம் செய்துகொண்டுவிடுவாள்.

எங்கள் பாட்டிக்கோ, பேச்சுத் துணைக்கு, 'சிறியவா, பெரியவா' என்கிற வித்தியாசமே கிடையாது. ஒரு தடவை, என் பள்ளிக்கூடச் சிநேகிதி கோமதி எங்கள் வீட்டுக்கு வந்திருந்தாள். அவளைப் பார்த்துவிட்டு, "ஏண்டி பெண்ணே! நீ வந்து முருங்கையூர் மீனாக்ஷி சுந்தரமய்யரின் பேத்திதானே? முன்னெல்லாம் சின்ன வளா இருக்கிறபோது, வாயிலே விரலைப் போட்டுக் கொண்டு, முழங்காலுக்கு மேலே பாவாடையும் அதுவுமா நிற்பாயே!" என்று சொல்ல ஆரம்பித்தாள். கோமதிக்கோ கோபம் 'பொத்துக்கொண்டு' வந்து விட்டது. "நீங்கள் சொல்கிற பெண் வேறே யாரோ, நானில்லை!" என்று வெடுக்கென்று சொல்லிவிட்டாள். இதனை லெல்லாம் என் பாட்டி தன் வழக்கத்தை விட்டு விடுவாளா, என்ன? கிடையவே கிடையாது. இன்று வரை, முன்பின் தெரியாதவர்களைச் சிநேகம் பிடித்துக் கொள்ள இதே முறையைத்தான் கையாண்டு வருகிறாள்.

இந்த விதத்தில் அறிமுகம் செய்துகொள்ள நாமெல்லாம் கூச்சப்படுவோம். ஆகையினாலே, இந்தக் காலத்துக் கேற்றபடி, என்னுடைய சில யோசனைகளை எழுது கிறேன்.

1. உங்கள் பக்கத்து வீட்டுப் பெண் தானே வருகிறாளா என்று பாருங்கள். இல்லாவிட்டால், உங்கள் குழந்தையைத் 'தாஜா' பண்ணி அடுத்த வீட்டுக்கு அனுப்புங்கள். (குழந்தை போகமாட்டேனென்றால், அடித்துக் 'கிடித்து' வைக்காதீர்கள். அது அழுதுகொண்டே போய், "எங்கம்மா என்னை உங்காத்துக்குப் போகச் சொல்லி அடிச்சா!" என்று சொல்லிவைக்கும்.) சற்றுப் பொறுத்து நீங்கள் குழந்தையைத் தேடுவது போல், "எங்கள் அகத்

துக் குழந்தை இங்கே வந்தாளோ?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே போய்விடுங்கள். அந்தப் பெண்ணும், ''குழந்தை இப்போதுதான் வந்தாள். வாருங்கள், உட்காருங்கள்'' என்று சொல்லுவாள். அவள் இப்படிச் சொன்னவுடனே, ''இந்த மட்டும் சொன்னளே!'' என்று உட்கார்ந்துவிடாதீர்கள்! ''காரியம் தலைக்குமேலே இருக்கிறது. உட்காரப் போது ஏதம்மா?'' என்று சொல்லி, 'நின்றபடி நாலு வார்த்தை' சொல்லிவிட்டு வந்துவிடுங்கள். (உங்களை இவ்வளவு நாள் 'தவிக்க' விட்டதற்கு, அவளுக்குத் 'தண்டனை' வேண்டாமா?) தவிரவும், ஜாஸ்தி பேசினல், ''ஏது, இவள் பெரிய வம்புக்காரியாக இருப்பாள்போல் இருக்கிறதே!'' என்று அவள் எண்ணிவிடலாம். இனிமேற்கொண்டு, உங்கள் சிநேகத்துக்கு ஒரு குறையும் கிடையாது என்று உத்தரவாதம் அளிக்கிறேன்.

2. அடுத்த வீட்டில் ரேடியோ இருந்தால், அது இந்தச் 'சாதனை'க்கு ஒரு பெரிய 'சாதனம்'; ரேடியோ கேட்பதுபோல் போய், அவர்கள் வீட்டு ரேழியில் நின்றுகொள்ளுங்கள். (எச்சரிக்கை: உள்ளே போய்விடாதீர்கள்.) அந்தப் பெண் உங்களைக் கண்டால் ''வாருங்கள்!'' என்று அழைக்காமல் இருக்கமாட்டாள். அப்படியும் கவனிக்கவில்லை யென்றல் லேசாக இருமுங்கள். (அல்லது தொண்டையைக் கனைத்துக்கொள்ளுங்கள்.) ''யாரது?'' என்று அவள் வாசல் புறம் வருவாள். ''நான்தான்; பாட்டு என்றால் எனக்கு உயிர். அத்துடன், இன்றைக்குப் பாட்டுக் கச்சேரி ரொம்ப நன்ற யிருக்கிறது. அதனலே, 'ஆசை வெட்க மறியாது' என்று சொல்வார்களே அதுபோல இங்கே நின்றுகொண்டே கேட்கலாம் என்று, வந்துவிட்டேன்'' என்று சொல்லுங்கள். அவள் ''உள்ளே வந்து கேளுங்களேன்'' என்று அழைப்பாள்

(அபாயம்: உள்ளே போனதுமே, பேச்சுக்கு ஆரம்பித்து விடாதீர்கள்! "இது ஏதடா சனியன்! பாட்டு கேட்க முடியாமல் தொந்திரவு!" என்று முதல் நாளே அவள் நினைக்கும்படி செய்துவிடக் கூடாது.)

3. நீங்கள் உங்கள் வீட்டு வாசலிலே நின்றுகொண்டிருக்கும் பொழுது, அடுத்த வீட்டுப் பெண்ணும் தன் குழந்தையை விளையாட விட்டுவிட்டு நின்றுகொண்டிருந்தால், இந்த முறையைக் கையாளலாம்: நீங்கள் வலுவில் அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். "எம்மா, குழந்தே! உன் பேர் என்ன?" என்று (அல்லது இதுமாதிரி ஏதேனும்) கேட்டு, குழந்தையைக் 'கொஞ்சு'ங்கள். "உங்க ளகத்திலே குழந்தை இருக்கிறதே, தெரியவில்லையே! அழவே மாட்டாள்போல் இருக்கிறது. ரொம்ப சமத்தாக இருக்கிருள்" என்று சொல்லுங்கள். (குழந்தையைப் பற்றிச் சொன்னுல் சந்தோஷப்படாத தாய்மார் உலகத்திலுண்டா?) அப்புறம் பேச்சுத் தானுகவே வளர ஆரம்பித்துவிடும்.

4. உங்களுடைய 'வேட்டைப் பிராணி' தன் வீட்டு வாசலிலே நின்றுகொண்டிருந்தால், அவள் புடைவையைப் பற்றி இப்படிப் பேச ஆரம்பிக்கலாம்: "இந்தப் புடைவை ரொம்ப நன்ருயிருக்கிறது; புதுப் 'பாஷ'ணுகவும் இருக்கிறது. இதை எங்கே வாங்கினீர்கள்? என்னமோ அம்மா, சில பேருக்குத்தான் உடம்புக்குத் தகுந்தாற்போல புடைவை எடுக்கச் சமத்து இருக்கிறது. உங்களுக்கு இந்தப் புடைவை எவ்வளவு எடுப்பாகத் தெரிகிறது!" என்று சொன்னுல் போதும். முகஸ்துதியில் மயங்காதவர் யார்? (இதற்கு முன்பு, நீங்கள் உங்கள் புருஷரிடம், "அடுத்த வீட்டுக்கு ஒரு பெண் வந்திருக்கிறது. நெட்டைப் பனைமரம்போலே, அதன் அழகும், அதுக்கேற்ருற்போலே புடைவையும், அந்தப் 'பாஷ'னும் சகிக்க முடிய

வில்லை என்று சொன்னது, அவளுக்குத் தெரியவா போகிறது?)

5. பக்கத்து வீட்டுக்கு வந்திருப்பவர்கள் பெரியவர்களாகவும், அவர்கள் பெண் பாட்டுப் 'பாடு'வதாகவும் இருந்தால், நல்ல சுலபமான வழி ஒன்று இருக்கிறது. "அம்மாமி! உங்கள் பெண் ரொம்ப அற்புதமாய்ப் பாடுகிறுளே! தினமும், நானும் எங்க அகத்துக்காரரும் சொல்லிக்கொண்டே இருக்கிறோம்" என்று பேச்சை ஆரம்பிக்கலாம். (நீங்கள் வீட்டிலே "அந்தப் பெண் பாடுகிறதா, அழுகிறதா?" என்றுதான் ஒருவருக்கொருவர் பரிகாசமாய்ச் 'சொல்லிக்கொண்' டிருப்பீர்களென்பது எனக்குத் தெரியும்.) பிறகு, அந்தத் தாயின் உள்ளம் குழைந்து பேசத் தடை என்ன?

ஏதோ எனக்குத் தெரிந்தவரை யோசனைகள் சொல்லியிருக்கிறேன். இதற்குமேல் உங்கள் சாமர்த்தியத்தில் இருக்கிறது.

ஒரு விஷயம்; இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு, "கட்டுரையும் அழுகும் சகிக்க முடியவில்லை!" என்று நீங்கள் நினைத்தாலும் பாதகமில்லை. ஆனால், 'சிநேகம் பிடிக்கும் கலை' என்ற உங்கள் கட்டுரை ரொம்ப ரொம்ப, நன்றாயிருக்கிறது..." என்று பீடிகை போட்டுக்கொண்டு என்னைச் சிநேகம் பிடிக்க வந்துவிடாதீர்கள்! அவ்வளவு பொறுமை என்னிடம் கிடையாது.

Printed by Shakti Press Ltd., Royapettah, P.I.C. No. MS. 23
For Shakti Karyalayam, Royapettah, P.I.C. No. MS. 202.





வெற்றிலை தின்பவர்களுக்குப் பாக்கு இன்றியமையாதது. பாக்கு மரம் இந்தியாவின் உஷ்ணப் பிரதேசங்களில் பயிராகிறது. பாக்கின் சுவை துவர்ப்பு. பாக்கை வெற்றிலையுடன் சுண்ணம் கலந்து தாம்பூலம் போடுவதால் தந்த நோய், ஈறுநோய் முதலியன நீங்கும்.

குணம் மணம் நிறைந்த 'அசோகா' பாக்குத்தூள் உடலுக்கு ஆரோக்கியமும், மனத்துக்கு உற்சாகத்தையும் அளிக்கிறது.

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்